






மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

# திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள்

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் விதி 110இன் கீழ் அறிவித்த அறிவிப்புகள்

(19.06.2017 முதல் 11.01.2018 வரை)

மற்றும்

மாண்புமிகு தமிழக ஆளுநர் அவர்களின்

உரை மீதான விவாதத்திற்கான பதிலுரை



அம்மா வழியில் நல்லாட்சி - அதற்கு
ஓராண்டு சாதனையே சாட்சி

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

**திரு. எடப்பாடி K. பழனிசாமி** அவர்கள்

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் விதி 110இன் கீழ்

அறிவித்த அறிவிப்புகள்

(19.06.2017 முதல் 11.01.2018 வரை )

மற்றும்

மாண்புமிகு தமிழக ஆளுநர் அவர்களின்

உரை மீதான விவாதத்திற்கான பதிலுரை

சிறப்பு வெளியீடு எண். 19

# தமிழரசு

இலவச வெளியீடு

பிப்ரவரி 2018

வெளியிடுபவர் :
இயக்குநர்,
செய்தி–மக்கள் தொடர்புத்துறை,
சென்னை.

அச்சிட்டோர் :
தமிழரசு அச்சகம்
இராஜீவ் காந்தி சாலை,
தரமணி,
சென்னை – 600 113.

## பொருளடக்கம்

| வ. எண் | உரை விவரம் | பக்கம் எண் |
|---|---|---|


1. ரூ.40 கோடி மதிப்பீட்டில், விரல்ரேகை படிப்பி (Finger Print Reader) மற்றும் அச்சுப்பொறி!............9

2. வனப் பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு வழங்கப்படும் இழப்பீட்டுத் தொகை ரூ.10 இலட்சமாக உயர்வு! ............13

3. ரூ.210 கோடி செலவில், 43 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் உட்கட்டமைப்பு வசதிகள்!............15

4. ரூ.437.78 கோடி செலவில், உயர்நிலை மற்றும் மேனிலைப்பள்ளிகளுக்கு 30 கணினிகள் மற்றும் இதர சாதனங்கள்!............19

5. காஞ்சிபுரத்தில் ரூ.15 கோடி செலவில் நவீன தரத்துடன் புதிய விளையாட்டு வளாகம்!............22

6. சிறிய செயற்கைக்கோள் உருவாக்கிய கரூர் இளைஞர் திரு. ரிஃபாத் சாருக் அவர்களுக்கு ரூ.10 இலட்சம் அரசு நிதியுதவி!............25

7. மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கு ரூ.10 இலட்சம் செலவில், நடைப்பயிற்சி உபகரணங்கள்!............28

8. தமிழ்நாட்டில் ரூ.1,347 கோடி மதிப்பில், 128 துணை மின் நிலையங்கள்!............30

9. திருவள்ளூரில் ரூ.1,295 கோடி செலவில், ஒரு பல்முனை சரக்கு போக்குவரத்துப் பூங்கா!............33

| வ. எண் | உரை விவரம் | பக்கம் எண் |
|---|---|---|


| 10. | தொழிற்பேட்டை சங்கங்கள் அமைக்கவிருக்கும் திட்டங்களுக்கு ரூ.10 கோடி அரசின் பங்குத் தொகை! | 36 |
|---|---|---|
| 11. | சேலத்தில் ரூ.9.46 கோடி செலவில், குழந்தைகள் காப்பகத்திற்கான புதிய கட்டடம்! | 39 |
| 12. | கோயம்புத்தூரில் ரூ.442 கோடி மதிப்பீட்டில், பாதாளச் சாக்கடை திட்டம்! | 41 |
| 13. | சுயஉதவிக்குழுக்களுக்கு நடப்பாண்டில் ரூ.7,000 கோடி வங்கிக் கடன்! | 43 |
| 14. | மண்பாண்டத் தொழிலாளர்களின் மழைக்கால பராமரிப்பு உதவித்தொகை ரூ.5,000 ஆக உயர்வு! | 46 |
| 15. | மயிலாடுதுறை, திண்டுக்கல், கிருஷ்ணகிரி, திருவள்ளூர் தலைமை மருத்துவமனைகளில் ரூ.80 கோடி மதிப்பீட்டில், 4 மேன்மைமிகு மையங்கள் (Centre of Excellence)! | 47 |
| 16. | எர்ணாவூரில் ரூ.676.61 கோடி மதிப்பீட்டில், குடிசைப் பகுதிவாழ் மக்களுக்கு 6,874 அடுக்குமாடி குடியிருப்புகள்! | 50 |
| 17. | டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தில் ரூ.13 கோடி மதிப்பீட்டில் கூடுதல் கட்டடம்! | 53 |
| 18. | ரூ.108 கோடி செலவில், தமிழகத்தில் 3 வேளாண் கல்லூரிகளில் உட்கட்டமைப்பு வசதிகள்! | 55 |
| 19. | ரூ.94.18 கோடி மதிப்பீட்டில் பல்வேறு அரசு துறை அலுவலகங்களுக்கு கூடுதல் கட்டடங்கள் மற்றும் மாநில பேரிடர்ப் பணிகளை மேம்படுத்திட ரூ.67.40 கோடி செலவில், நவீன கருவிகள்! | 59 |

| வ. எண் | உரை விவரம் | பக்கம் எண் |
|---|---|---|
| 20. | ரூ.49.9 கோடி செலவில், 150 கால்நடை மருத்துவ நிலையங்கள்! | 63 |
| 21. | கிராமப்புற பெண் கல்வி ஊக்குவிப்பு திட்டத்தில் பயன்பெறும் பயனாளிகளின் ஆண்டு வருமான உச்சவரம்பு ரூ.72,000 ஆக உயர்வு! | 68 |
| 22. | ரூ.437.96 கோடி செலவில், மாநில பெரும்பரப்பு வலையமைப்பின் மூன்றாம் கட்ட செயல்பாடுகள்! | 69 |
| 23. | ரூ.13.87 கோடி செலவில், 11 ஆதிதிராவிடர் நல விடுதிகளுக்கு சொந்தக் கட்டடங்கள்! | 72 |
| 24. | 908 வேட்டைத் தடுப்புக் காவலர்களுக்கு மாதாந்திர ஊதியம் ரூ.10,000 ஆக உயர்வு! | 73 |
| 25. | ரூ.28.61 கோடி செலவில், மூன்று புதிய அரசு தொழிற் பயிற்சி நிலையங்கள்! | 74 |
| 26. | ரூ.85,047 கோடி மதிப்பீட்டில், 107.55 கி.மீ நீளத்தில் மூன்று மெட்ரோ இரயில் வழித்தடங்கள்! | 77 |
| 27. | தொழிலாளர் நலனுக்காக போராடும் சிறந்த ஒருவருக்கு ‘சிங்காரவேலர்’ விருது! | 80 |
| 28. | ரூ.20 கோடி செலவில் திருப்பணி செய்யப்படும் கிராமப்புற திருக்கோயில்களின் எண்ணிக்கை 2,000 ஆக உயர்வு! | 82 |
| 29. | போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு ஓய்வுக்கால பலன்களுக்கானத் தொகை ரூ.2,147.39 கோடி வழங்கப்பட்டுள்ளது! | 85 |

| வ. எண் | உரை விவரம் | பக்கம் எண் |
|---|---|---|
| 30. | தமிழ்நாடு உதயமான சனவரி 14ஆம் நாளினை தமிழ்நாடு பொன்விழா ஆண்டாக கொண்டாட தமிழ்நாடு அரசு முடிவு! | 89 |
| 31. | 08.01.2018 அன்று சட்டமன்றத்தில் மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரையின் மீது நடைபெற்ற விவாதத்திற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்களின் பதிலுரை – 12.01.2018 | 93 |

✵ ✵ ✵

# ரூ.40 கோடி மதிப்பீட்டில், விரல்ரேகை படிப்பி (Finger Print Reader) மற்றும் அச்சுப்பொறி!

அறிவிப்பு எண் : 1 19.06.2017

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாட்டில் அனைத்து தரப்பு மக்களுக்கும் உணவு பாதுகாப்பு அளிப்பது நமது பொது விநியோகத் திட்டத்தின் முக்கியக் குறிக்கோளாகும். நாடு முழுவதும் செயல்படும் தேசிய உணவு பாதுகாப்புச் சட்டத்தை நாம் பின்பற்றினாலும், வருமான அடிப்படையினைக் கருத்தில் கொள்ளாமல், பாகுபாடின்றி அனைத்து தரப்பு மக்களுக்கும் பொதுவானதாக, தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படும் பொது விநியோகத் திட்டம் தனிச் சிறப்பாக கருதப்படுகின்றது. இப்படிப்பட்ட புரட்சிகரமான முன்னோடித் திட்டங்களைதான் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தமிழ்நாடு மக்களின் நலன் கருதி செயல்படுத்தினார்கள்.

இச்சிறப்பு மிக்க நமது பொது விநியோகத் திட்டத்திற்கு நம் கூட்டுறவு சங்கங்களே பக்கபலமாக இருக்கின்றன. தமிழ்நாட்டில் சிறப்பாக செயல்படும் இச்சங்கங்கள் வேளாண் உற்பத்தியை பெருக்குவதில் முக்கியப் பங்காற்றுகின்றன.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் இந்த அரசு, மாண்புமிகு அம்மா அவர்களின் எண்ணப்படியே கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை மூலம் சிறப்பான திட்டங்களைத் தீட்டி, அதை மக்களின் நலனுக்காக செயல்படுத்துகிறது. அதன் அடிப்படையில், கீழ்க்கண்ட அறிவிப்புகளை இம்மாமன்றத்தில் அறிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

1. தமிழ்நாட்டில் பொது விநியோகத் திட்டத்தை முழு கணினிமயமாக்கலின் ஒரு பகுதியாக, அனைத்து நியாய விலைக் கடைகளிலும் விற்பனை இயந்திரம் வழங்கப்பட்டு, அதன் மூலம் குடும்ப அட்டைகளுக்கான அத்தியாவசியப் பொருட்கள் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. குடும்ப அட்டைதாரர் கோரும் அத்தியாவசியப் பொருட்களுக்கான விவரம் மேற்படி இயந்திரத்தில் பதிவு செய்தவுடன், குடும்ப அட்டைதாரரால் பதிவு செய்யப்பட்டுள்ள கைபேசி எண்ணிற்கு, அவர் பெற்ற பொருட்கள் விவரம் குறுஞ்செய்தியாக அனுப்பப்படுகிறது. அத்தியாவசியப் பொருட்களுக்கான பட்டியல் (Bill) தற்போது வழங்கப்படுவதில்லை. இதை சரி செய்யும் விதமாகவும், தேசிய உணவு பாதுகாப்புச் சட்டத்தின்படி, பொது விநியோகத் திட்டத்தில் வழங்கப்படும் அத்தியாவசியப் பொருட்கள் பயோமெட்ரிக் முறையில் வழங்கப்பட வேண்டுமென்பதாலும், தமிழகத்தில் உள்ள அனைத்து நியாய விலைக் கடைகளுக்கும் 40 கோடி ரூபாய் மதிப்பீட்டில் விரல்ரேகை படிப்பி (Finger Print Reader) மற்றும் அச்சுப்பொறி வழங்கப்படும்.

2. நமது நாட்டில் ஏற்பட்டுள்ள தொழில்நுட்ப வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு, வணிக வங்கிகளுக்கு இணையாக, விவசாயிகளுக்கு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்கள் வழங்கும் சேவையை மேம்படுத்தவும், கிராமப்புறங்களில் பொதுமக்களுக்கு நவீன வங்கி சேவையினையும் வழங்க ‘நபார்டு வங்கி’ நிதியுதவியுடன், தமிழ்நாட்டில் உள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் அனைத்தும் முற்றிலும் கணினிமயமாக்கப்பட்டு, மைய வங்கியில் கணினி சேவை முறை (CORE Banking Solution) 134.67 கோடி ரூபாய் செலவில், மூன்று ஆண்டுகளில் செயல்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

3. கூட்டுறவு நிறுவனங்களில், சொந்த அடிமனை இருந்தும், வாடகைக் கட்டடங்களில் செயல்படும் அனைத்து சங்கங்களுக்கும்

சொந்தக் கட்டடங்கள் கட்டப்படவேண்டும் என்ற தொலைநோக்கு சிந்தனையை செயல்படுத்திட, இந்த ஆண்டில் 114 கூட்டுறவு நிறுவனங்களுக்கு 23 கோடியே 10 இலட்சம் ரூபாய் மதிப்பில் சொந்தக் கட்டடங்கள் கட்டப்படும். மேலும், மதுரை மாவட்டம், விரகனூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் 70 இலட்சம் ரூபாய் செலவில், வணிக வளாகம் கட்டப்படும். வாடிக்கையாளர்களுக்கு அவர்களின் குடியிருப்புகளுக்கு அருகாமையிலேயே சேவை அளிக்கும் பொருட்டு, திருச்சி மற்றும் தருமபுரி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளின் 15 புதிய கிளைகள் 2 கோடியே 25 இலட்சம் ரூபாய் செலவில் துவக்கப்படும். கூட்டுறவு நிறுவனங்களின் தோற்றப் பொலிவினை அழகுபடுத்தும் பொருட்டு, வாடிக்கையாளர்களின் நன்மதிப்பை பெறவும், வணிக வங்கிகளுக்கு ஈடாக கூட்டுறவு சங்கங்களின் சேவையை வழங்க 27 கூட்டுறவு நிறுவனங்கள் 3 கோடியே 40 இலட்சம் ரூபாய் செலவில் நவீனமயமாக்கப்படும்.

4. சிறு வணிகர்கள், தனியாரிடமிருந்து அதிக வட்டியில் கடன் பெறுவதை தவிர்த்து, அவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் பொருட்டு, மத்திய கூட்டுறவு வங்கிகள் மற்றும் நகர கூட்டுறவு வங்கிகளில் தற்போது வழங்கப்பட்டு வரும் சிறு வணிகக் கடன் உச்ச வரம்பினை 10,000/– ரூபாயிலிருந்து 25,000/– ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.

5. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு சென்னையில் அண்ணாநகர், நந்தனம், திருவான்மியூர், தங்கசாலை மற்றும் கோபாலபுரம் ஆகிய 5 இடங்களில் கிடங்கு வளாகங்கள் உள்ளன. அவற்றில் 86,068 மெட்ரிக் டன் உணவுப் பொருட்கள் இருப்பு வைத்து கையாளப்படுகிறது. இதிலிருந்து சென்னை மாநகரை சுற்றிலும் 30 கிலோ மீட்டர் சுற்றளவில், பொது விநியோகத் திட்டத்திற்கான பொருட்கள் நகர்வு செய்யப்படுகின்றன. உணவு தானிய சேமிப்பு கிடங்குகளின் கொள்ளளவினை மேலும் அதிகரிக்க

வேண்டியதன் அவசியத்தைக் கருத்தில் கொண்டு, சென்னை பெருநகரை ஒட்டியுள்ள மாதவரம் பகுதியில் 12,000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட விஞ்ஞான முறையிலான, இயந்திர கையாளுமை திறனுடன் கூடிய நவீன சேமிப்புக் கிடங்கு 25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இந்த நிதியாண்டில் கட்டப்படும்.

6. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு 9.82 இலட்சம் மெட்ரிக் டன் கொள்ளளவுள்ள சொந்தக் கிடங்குகளும், பிற நிறுவனங்கள் மற்றும் தனியாரிடமிருந்து வாடகை அடிப்படையில் 2.27 இலட்சம் மெட்ரிக் டன் கொள்ளளவுள்ள கிடங்குகளும் சேர்த்து 288 கிடங்குகள் தற்போது பயன்பாட்டில் உள்ளன. இக்கிடங்குகளின் சேமிப்புக் கொள்ளளவு தற்போதைய தேவைக்கு போதுமானதாக இல்லை என்பதால், இவற்றின் கொள்ளளவினை அதிகப்படுத்திடும் வகையில், முதற்கட்டமாக 9 மாவட்டங்களில் 14 சொந்த இடங்களில், 50 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 30,000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட ‘சூரிய ஒளி கூரை’ கொண்ட சேமிப்பு கிடங்குகள் கட்டப்படும்.

7. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் கட்டுப்பாட்டில் இருக்கும் 25 கிடங்கு வளாகங்களுக்கு உட்புற சாலை வசதி, சுற்றுச் சுவர் கட்டுதல் மற்றும் அங்கு பணிபுரியும் தொழிலாளர்களுக்கு குடிநீர் வசதி, ஓய்வு அறை மற்றும் அடிப்படை வசதிகள் நபார்டு வங்கி நிதியுதவியுடன் 25 கோடி ரூபாய் மதிப்பில் மேற்கொள்ளப்படும்.

8. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் 40 வருட தொடர் பயன்பாட்டில் இருந்து வரும் பழைய 15 சேமிப்பு கிடங்கு வளாகங்களில் அடிப்படை பராமரிப்பு பணிகளும், அங்கு பணிபுரியும் சுமைதூக்கும் பணியாளர்கள் மற்றும் வாகன ஓட்டுநர்களின் நலன் சார்ந்த பணிகளும் 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும் என்பதை இம்மாமன்றத்திற்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

✵ ✵ ✵

# வனப் பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு வழங்கப்படும் இழப்பீட்டுத் தொகை ரூ.10 இலட்சமாக உயர்வு!

அறிவிப்பு எண் : 2 19.06.2017

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வனவளம், வன உயிரின வளம் பெருக சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை சார்பாக கீழ்க்கண்ட அறிவிப்புகளை இம்மாமன்றத்தில் அறிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

1. வனவளத்தையும், வன உயிரினங்களையும், பொதுமக்களையும் பாதுகாக்கும் மகத்தான பணியில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டுள்ள வனப் பணியாளர்கள் பணியில் ஈடுபட்டிருக்கும் போது, வன உயிரினத் தாக்குதலால் உயிரிழக்கும் துயர நேர்வுகளிலும், வனக் குற்றங்களில் ஈடுபடும் குற்றவாளிகளுடனான மோதல்களில் உயிரிழக்க நேரிடும் நேர்வுகளிலும், வீர தீர செயல் மற்றும் எதிர்பாராத அசம்பாவித சூழ்நிலை போன்ற நேர்வுகளிலும், காவலர்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வருகின்ற இழப்பீட்டுத் தொகைக்கு இணையாக, வனப் பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கும் இழப்பீட்டுத் தொகையை 4 இலட்சம் ரூபாயிலிருந்து 10 இலட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2. கடந்த 2013 முதல் 2015 வரையிலான காலத்திய இந்திய வன அளவை நிறுவனத்தின் வன அறிக்கையின்படி, நாட்டிலுள்ள மற்ற மாநிலங்களைக் காட்டிலும், வனம் மற்றும் மரங்கள் அடர்ந்த பரப்பளவு தமிழகத்தில் மிக அதிக அளவில் அதிகரித்துள்ளது.

தமிழகத்தினுடைய வனவளத்தை மேலும் பாதுகாக்கவும், அவ்வுணர்வினை அனைவரிடமும் வளர்க்கவும், வனப்பகுதியில் வாழ்ந்து வருகின்ற மலைவாழ் மக்களுடைய இயற்கைச் சார்ந்த வாழ்க்கை முறையினை தற்கால சந்ததியினருக்கு, குறிப்பாக, மாணாக்கர்களுக்கு கொண்டு சேர்க்கும் வகையிலும், உள்ளூர் மக்களை இயற்கைச் சுற்றுலா திட்டத்தில் முழுமையாக பங்கேற்கச் செய்து அவர்களது வேலைவாய்ப்பை பெருக்குவதுடன், சமூக, பொருளாதார மேம்பாட்டிற்கு வழிவகை செய்யும் வகையிலும் 'தமிழ்நாடு சூழல்சார் சுற்றுலாக் கொள்கை, 2017' உருவாக்கப்படும் என்பதை அறிவிப்பதில் பெரு மகிழ்ச்சியடைகிறேன்.

**3.** பவானி ஆறு, நீலகிரி மலையில் உற்பத்தியாகி காவிரி ஆற்றில் கலக்கிறது. இந்த ஆற்றின் நீர் 90 சதவீதம் கோயம்புத்தூர் மற்றும் ஈரோடு மாவட்டங்களின் பாசனத்திற்கு பயன்படுகின்றது. மேலும், கோயம்புத்தூர் மற்றும் ஈரோடு மாவட்டங்களுக்கு குடிநீர் ஆதாரமாகவும் பவானி ஆறு விளங்குகிறது. பவானி ஆற்றின் கரையோரப் பகுதிகளில் அமைந்துள்ள தொழிற்சாலைகள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் வடிகால் கழிவுநீர் வெளியேற்றத்தால் ஆற்று நீரில் ஏற்படும் தாக்கத்தை கண்காணிக்கும் வண்ணம், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் தற்போது மாதம் ஒருமுறை நீர் மாதிரி எடுத்து ஆய்வு செய்கின்றது. ஆற்று நீரின் தன்மையை தொடர்ச்சியாக 24 மணி நேரமும் கண்காணிக்கும் நோக்கத்துடன் நடப்பு நிதியாண்டில், பவானி ஆற்றில் 2 இடங்களில் இணைய வழி தொடர் நீர் தர கண்காணிப்பு நிலையங்கள் ஒரு கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும். இந்நிலையங்கள் தலைமை அலுவலகம் மற்றும் உரிய மாவட்ட அலுவலகங்களுடன் இணைய வழியாக இணைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

✲ ✲ ✲

# ரூ.210 கோடி செலவில், 43 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் உட்கட்டமைப்பு வசதிகள்!

அறிவிப்பு எண் : 3 19.06.2017

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பள்ளிக் கல்வித் துறைக்கு அளித்து வரும் அதே அளவு முக்கியத்துவத்தை உயர்கல்விக்கும் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் அளித்து வந்தார்கள். மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களால், கடந்த 6 ஆண்டுகளில் 21 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், 24 பல்கலைக் கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், 16 அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் 4 அரசு பொறியியல் கல்லூரிகள் என 65 புதிய கல்லூரிகளும், ஸ்ரீரங்கத்தில் இந்திய தகவல் தொழில்நுட்ப பயிலகம் மற்றும் தேசிய சட்டப்பள்ளி ஆகியவை துவக்கப்பட்டுள்ளன. எனவே தான் உயர்கல்வியில் தேசிய மாணவர் சேர்க்கை விகிதம் 24.5 என இருந்தாலும், தமிழ்நாட்டின் மாணவர் சேர்க்கை விகிதம் 44.3 ஆக உள்ளது. இதனால், இந்தியாவிலேயே தமிழ்நாடு முதன்மை மாநிலமாக விளங்குகிறது.

உயர் கல்வித் துறை சார்பாக கீழ்க்கண்ட அறிவிப்புகளை இம்மாமன்றத்தில் வெளியிடுவதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

1. கல்வியின் தரத்தினையும், மாணாக்கர்களின் அறிவுத் திறனையும் உயர்த்தும் பொருட்டு, கடந்த ஆறு ஆண்டுகளில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 961 புதிய

பாடப் பிரிவுகள் அறிமுகப்படுத்தப்பட்டன. இதன் மூலம் 2011–2012ஆம் கல்வியாண்டில் 7,17,442ஆக இருந்த மாணாக்கர்கள் எண்ணிக்கை 2016–2017ஆம் கல்வியாண்டில், 9,85,974–ஆக உயர்ந்துள்ளது. இவ்வளர்ச்சிக்கு மேலும் வலுசேர்க்கும் வகையில், 43 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் கூடுதல் வகுப்பறைகள், ஆய்வகங்கள், நூலகங்கள், கழிப்பறைகள், ஆசிரியர் ஓய்வறைகள், மாநாட்டு அறைகள், கூட்டரங்கங்கள், கூடுதல் அறைகள் போன்ற உட்கட்டமைப்பு வசதிகள் 210 கோடி ரூபாய் செலவில், இரண்டாண்டுகளில் ஏற்படுத்தப்படும். இந்த 43 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் கட்டப்படும் கட்டடங்கள், மறைந்த மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழாவினைக் குறிக்கும் வகையில் “**புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் நூற்றாண்டு விழா கட்டடங்கள்**” என்ற பெயரில் அழைக்கப்படும்.

இதற்கென, முதற்கட்டமாக, இந்த ஆண்டு 105 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்படும். மீதமுள்ள 105 கோடி ரூபாய் அடுத்த ஆண்டு ஒதுக்கீடு செய்யப்படும்.

2. மாநிலத்தின் அனைத்து மாவட்டங்களிலும் அரசு கலை மற்றும் அறிவியல், கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றன. மாணவர்கள் நீண்ட தூரம் பயணம் செய்து உயர்கல்வி கற்பதைத் தவிர்க்கும் பொருட்டும், குறைந்த கட்டணத்தில் உயர்கல்வி பெறுவதற்கும் தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் 7 புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் மற்றும் 3 புதிய பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் 2017–2018ஆம் கல்வியாண்டில் துவங்கப்படும்.

இதற்காக அரசுக்கு 100 கோடியே 31 இலட்சம் ரூபாய் செலவு ஏற்படும்.

**3.** அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் மிகக் குறைந்த கட்டணத்தில் மாணாக்கர்கள் பயின்று வருகின்றனர். இம்மாணாக்கர்கள், வேலைவாய்ப்பினை பெறுவதற்குத் தேவைப்படும் புதிய பாடப்பிரிவுகளை அறிமுகப்படுத்துவது அவசியமாகிறது. மாநிலத்தில் பின்தங்கிய பகுதியை சேர்ந்த மாணாக்கர்கள், பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவு மாணாக்கர்கள் மற்றும் அதிகளவில் மாணவிகள் உயர்கல்வி பெற வேண்டும் என்ற நோக்கத்தில், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 2017–2018ஆம் கல்வியாண்டிலிருந்து 268 புதிய பாடப்பிரிவுகள் (60 இளங்கலை, 75 முதுகலை, 133 ஆராய்ச்சி) அறிமுகப்படுத்தப்படவுள்ளன. இப்பாடப்பிரிவுகளை கையாள 660 உதவிப் பேராசிரியர் பணியிடங்கள் உருவாக்கப்படும்.

இதற்காக அரசிற்கு ஆண்டிற்கு 40 கோடியே 38 இலட்சம் ரூபாய் செலவு ஏற்படும்.

* * *



# ரூ.437.78 கோடி செலவில், உயர்நிலை மற்றும் மேனிலைப்பள்ளிகளுக்கு 30 கணினிகள் மற்றும் இதர சாதனங்கள்!

அறிவிப்பு எண் : 4 19.06.2017

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சமுதாயத்தின் விளிம்பில் உள்ள ஏழை எளிய மக்கள், பொருளாதார வளர்ச்சி பெற்று ஏனையோருக்கு இணையாக உயர்வடைய வேண்டும் என்றால், அவர்கள் கல்வி வளர்ச்சி பெற வேண்டும். மாநில முழுவதும் சிறந்த கல்வி அளிக்கப்பட்டால் தான் பொருளாதார வளர்ச்சி, அடித்தட்டு மக்களுக்கும் சென்றடையும். எனவேதான், கல்விக்கும் அதன் வளர்ச்சிக்கும் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் மிகுந்த முக்கியத்துவம் அளித்து வந்தார்கள்.

கடந்த ஆறு ஆண்டுகளில், மாணவ மாணவியருக்கு 4 இணைச் சீருடை, விலையில்லா பாட நூல்கள், விலையில்லா நோட்டுப் புத்தகங்கள், விலையில்லா புத்தகப்பை, விலையில்லா கணித உபகரணப் பெட்டிகள், கிரையான்ஸ், நில வரைபட புத்தகம் ஆகிய கல்வி உபகரணங்கள், ஓர் இணைக் காலணிகள், விலையில்லா மிதி வண்டிகள், கட்டணமில்லாப் பேருந்து பயணச் சலுகை, சத்தான மதிய உணவு போன்ற பல முன்னோடித் திட்டங்களை செயல்படுத்தி வந்தார்கள்.

மேலும், மேல்நிலைப் பள்ளி மாணாக்கர்களுக்கு விலையில்லா மடிக்கணினிகள், அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 10 முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் மாணாக்கர்களுக்கு

மொத்தம் 5,000 ரூபாய் கல்வி உதவித் தொகை போன்ற உன்னதத் திட்டங்களும், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களால் செயல்படுத்தப்பட்டது.

பள்ளிக் கல்வித் துறை சார்பாக கீழ்க்கண்ட அறிவிப்புகளை வெளியிடுவதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

1. வளர்ந்து வரும் தொழில்நுட்பச் சவால்களுக்கு ஈடு கொடுக்கும் வகையில், அரசுப் பள்ளி மாணாக்கர்கள் போதிய கணினி திறன்களை அடையும் வகையில், அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் உயர் தொழில்நுட்பக் கணினி ஆய்வகங்கள் (Hi-tech Labs) ஏற்படுத்தப்படும். இதன்படி, 3,090 உயர்நிலைப் பள்ளிகளுக்கு தலா 10 கணினிகளும், 2,939 மேல்நிலைப் பள்ளிகளுக்கு தலா 20 கணினிகளும், அதனுடன் தொடர்புடைய இதர சாதனங்களும் வழங்கப்படும். இதற்கென அரசுக்கு 437 கோடியே 78 இலட்சம் ரூபாய் செலவு ஏற்படும்.

2. அரசு தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் பயிலும் கிராமப்புற மாணவர்களுக்கு கணினி மூலமாக பாடங்களை பயிற்றுவிக்கும் வகையில் முதற்கட்டமாக, 3,000 தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் ஒரு பள்ளிக்கு ஓர் 'அறிவுத் திறன் வகுப்பறை', அதாவது (Smart Class Room) ஏற்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். ஒவ்வொரு பள்ளிக்கும் 2 இலட்சம் ரூபாய் வீதம், 60 கோடி ரூபாய் இதற்கென செலவிடப்படும்.

3. பள்ளிக் கல்வி இயக்ககம் 100 ஆண்டுகளுக்கும் மேலாக டி.பி.ஐ. வளாகத்தில் செயல்பட்டு வருகிறது. இக்கட்டடம் மிகவும் பழமை வாய்ந்ததாகும். இதனால், இதனை பராமரிப்பது கடினமாகவும், மிகுந்த செலவினம் கொண்டதாகவும் உள்ளது. அரசால் செயல்படுத்தப்படும் திட்டங்கள் தொடர்பாக பல்வேறு

மாவட்டங்களிலிருந்து அலுவலர்களும், பணியாளர்களும் அதிக அளவு இங்கு வந்து செல்ல வேண்டிய நிலை உள்ளது. மேலும், இந்த இயக்ககத்தில் இயங்கும் பல்வேறு பிரிவுகளுக்காக கூடுதல் இடவசதி தேவைப்படுகிறது. இதற்காக, ஒரு இலட்சம் சதுர அடியில் **33** கோடி ரூபாய் செலவில், பள்ளிக் கல்வி இயக்ககத்திற்கு புதிய கட்டடம் கட்டப்படும். இந்த கட்டடம் மறைந்த மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழாவினைக் குறிக்கும் வகையில் **"புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் நூற்றாண்டு விழா கட்டடம்"** என்ற பெயரில் அழைக்கப்படும் என்பதை பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**4.** தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாணாக்கர்களும் தரமான கல்வியை அளிப்பதோடு மட்டுமல்லாமல், அவர்கள் சிறப்பான சூழ்நிலையில் கல்வி கற்க வேண்டும் என்ற நோக்கில், உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கு தேவைப்படும் கூடுதல் வகுப்பறைகள், அறிவியல் ஆய்வகம், அறிவியல் உபகரணங்கள், கலை மற்றும் கைவினை அறைகள், கணினி அறைகள், நூலகம், கழிவறைகள் போன்ற உட்கட்டமைப்பு வசதிகள் **39** கோடியே ஒரு இலட்சம் ரூபாய் செலவில் ஏற்படுத்தி கொடுக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

✵ ✵ ✵

# காஞ்சிபுரத்தில் ரூ.15 கோடி செலவில், நவீனதரத்துடன் புதிய விளையாட்டு வளாகம்!

அறிவிப்பு எண் : 5 19.06.2017

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இளைஞர்கள் நாட்டின் செல்வம். விளையாட்டு, இதனை ஒருங்கிணைந்து செயல்படுவதன் முக்கியத்துவம், நேர்மையாக செயல்படும் பக்குவம் ஆகியவற்றை கற்றுத் தருவதுடன், வெற்றி, தோல்வியை சமமாக ஏற்றுக் கொள்ளக் கூடிய மனத் திண்மையையும் அளித்து சிறந்த பண்புகளை கூடிய மனிதனாக உருவாக்க உதவுகின்றன. எனவேதான், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் கல்விக்கு அளித்த அதே முக்கியத்துவத்தை விளையாட்டிற்கும் அளித்து வந்தார்கள்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் காட்டிய வழியில் செயல்படும் இந்த அரசின் சார்பாக, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை குறித்த கீழ்க்கண்ட அறிவிப்புகளை இம்மாமன்றத்தில் அறிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

1. காஞ்சிபுரம் மாவட்ட விளையாட்டு வளாகம் கட்டப்பட்டு 42 ஆண்டுகள் ஆகி விட்டதால், இந்த வளாகத்தில் பழுதடைந்த நிலையில் உள்ள கட்டடங்கள் மற்றும் விளையாட்டு உட்கட்டமைப்புகளை இடித்து விட்டு அதே இடத்தில், நவீன தரத்துடன் கூடிய புதிய விளையாட்டு வளாகம் ஒன்று 15 கோடி ரூபாய் செலவில் கட்டப்படும். இவ்வளாகம் பார்வையாளர் மாடம், மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர்நல அலுவலர் அறை, நிருவாக அறை,

பயிற்சியாளர் அறை, வீரர்கள் உடை மாற்றும் அறை, கழிவறைகள், சேமிப்பு அறை முதலான வசதிகளை உள்ளடக்கியதாக இருக்கும்.

**2.** திருநெல்வேலியில் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக வளாகத்தில் **5** கோடி ரூபாய் செலவில், நீச்சல் பந்தய குளம், பயிற்சி நீச்சல் குளம், உடற்பயிற்சி கூடம், உடை மாற்றும் அறைகள், கழிவறைகள், அலுவலகம் மற்றும் பயிற்சியாளர்கள் அறையுடன் கூடிய உலகத்தரம் வாய்ந்த நீச்சல்குள வளாகம் அமைக்கப்படும்.

**3.** ‘கெனாயிங்’ (Canoeing) மற்றும் ‘கயாக்கிங்’ (Kayaking) எனும் நீர் விளையாட்டு உலகம் முழுவதும் பிரபலம் அடைந்துள்ளது. தற்கால ஒலிம்பிக் விளையாட்டு போட்டிகளில் இவ்விளையாட்டு நடத்தப்பட்டு வருகிறது. சர்வதேச ‘ரெகெட்டா’ (Regatta) எனப்படும் மிகப்பெரிய அளவிலான படகு போட்டிகளை நடத்தும் மையமாக சென்னை திகழ்கிறது. எனவே, காஞ்சிபுரம் மாவட்டம், மேலக்கோட்டையூரில் தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டு பல்கலைக்கழக வளாகம் அருகில், ‘கெனாயிங்’ (Canoeing) மற்றும் ‘கயாக்கிங்’ (Kayaking) விளையாட்டுகளுக்கு, முதன்மை நிலை விளையாட்டு மையம் ஒன்று **4** கோடியே **60** இலட்சம் ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

✵ ✵ ✵



# சிறிய செயற்கைக்கோள் உருவாக்கிய கரூர் இளைஞர் திரு. ரிஃபாத் சாருக் அவர்களுக்கு ரூ.10 இலட்சம் அரசு நிதியுதவி!

அறிவிப்பு எண் : 6 24.06.2017

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கரூர் மாவட்டம் பள்ளப்பட்டியை சேர்ந்த 18 வயது இளைஞரான திரு. ரிஃபாத் சாருக் தலைமையிலான ஆறு மாணவர்கள் கொண்ட குழு உருவாக்கிய 64 கிராம் எடை கொண்ட மிகச் சிறிய செயற்கைக்கோள் சமீபத்தில், அமெரிக்காவில் உள்ள விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான "நாசா" நடத்திய போட்டியில் கலந்து கொண்டு, உலகத்தின் 57 நாடுகளிலிருந்து சமர்ப்பிக்கப்பட்ட 80,000 மாதிரிகளில் முதல் பரிசு பெற்றது. இந்த செயற்கைக்கோள் கடந்த 22.6.2017 அன்று விண்ணில் "கலாம் சாட்" என்ற பெயரில் "நாசா" ஏவுதளத்திலிருந்து ஏவப்பட்டது. முப்பரிமாண அச்சுத் தொழில் நுட்பத்தில் (3D) உருவாக்கப்பட்ட இந்த செயற்கைக்கோள் வானிலை, வான்வெளியில் உள்ள கதிர்வீச்சு, வெப்பம் ஆகியவற்றை ஆராயும் திறன் கொண்டது.

சென்னையிலிருந்து செயல்படும் "ஸ்பேஸ்கிட்ஸ்" என்ற அமைப்பு இந்த மாணவர்களுக்கு ஆக்கமும், ஊக்கமும் அளித்து உதவியது. இந்த சாதனையினை நிகழ்த்திய மாணவர்கள் ரிஃபாத் சாருக், யக்னா சாய், வினய் பரத்வாஜ், தனிஷ்க் திவேதி, கோபிநாத் மற்றும் முகம்மது அப்துல் காசிப் ஆகியோருக்கும், குறிப்பாக, அந்தக் குழுவின் தலைமை விஞ்ஞானியாக செயல்பட்ட திரு. ரிஃபாத் சாருக்கிற்கும் இம்மாமன்றத்தின் சார்பிலும்,

தமிழ்நாடு அரசின் சார்பிலும், எனது தனிப்பட்ட முறையிலும் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். இந்த சாதனையை படைத்து, இந்தியாவிற்கு, குறிப்பாக, தமிழகத்திற்கு பெருமைத் தேடித் தந்த மாணவர் திரு.ரிஃபாத் சாருக் தலைமையிலான மாணவர் குழுவினை மேலும் இதுபோன்ற பல சாதனைகளை செய்ய ஊக்கப்படுத்தும் விதமாக, தமிழக அரசின் சார்பில் 10 இலட்சம் ரூபாய் வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

✵ ✵ ✵



## மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கு ரூ.10 இலட்சம் செலவில், நடைப்பயிற்சி உபகரணங்கள்!

அறிவிப்பு எண் : 7 29.06.2017

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் இந்த அரசு, மாற்றுத் திறனாளிகளுக்கு ஏற்கெனவே நடைமுறைப்படுத்தி வந்த 3 சதவீத இடஒதுக்கீட்டினை, 4 சதவீதமாக தமிழ்நாடு அரசு பணிகளிலும் உயர்த்தி வழங்க ஆணையிட்டுள்ளது. இந்த 4 சதவீத இட ஒதுக்கீடானது அனைத்து அரசுப் பணியிடங்கள், பொதுத் துறை நிறுவனங்கள், வாரியங்கள், உள்ளாட்சி அமைப்புகள், கல்வி நிறுவனங்கள், அரசு உள்ளாட்சி அமைப்புகள், அரசின் நிதி உதவி பெறும் அமைப்புகள் ஆகியவற்றிற்குப் பொருந்தும். மாற்றுத் திறனாளிகளுக்கு மேலும் பயனளிக்கக் கூடிய வகையில், பின்வரும் அறிவிப்புகளை இம்மாமன்றத்தில் வெளியிடுவதில் நான் பெரு மகிழ்ச்சி அடைகிறேன்.

1. கை, கால்கள் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கு முடநீக்கியல் சாதனங்கள், ஊன்று கோல்கள் மற்றும் செயற்கை அவயங்கள் வழங்கப்பட்டு அவர்களுடைய சுதந்திரமான நடமாட்டத்திற்கு ஏதுவாக, பல்வேறு வகையான மறுவாழ்வு பணிகள் மாற்றுத் திறனாளிகள் நலத் துறையின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கால்கள் பாதிக்கப்பட்ட மூன்று

வயதிற்குட்பட்ட மாற்றுத் திறனாளி குழந்தைகளுக்கு நடக்க உதவும் நடைபயிற்சி உபகரணங்கள் (Rolator/Walker) நடப்பாண்டில் 1,000 குழந்தைகளுக்கு 10 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும்.

2. மாற்றுத் திறனாளிகள் உரிமைகள் சட்டம் 2016இல், மாற்றுத் திறனாளிகளுக்கு சம வாய்ப்புகள் கிடைக்கப் பெறுவதை உறுதி செய்திடும் வகையில், அனைத்து அரசு பொதுக் கட்டடங்களிலும் மின்தூக்கிகள், சாய்வு தள பாதை, கழிவறை வசதிகள் மற்றும் செவித்திறன் குறையுடையோர் எளிதில் அறியும் வண்ணம் குறியீடுகளும், பார்வையற்றோர் அறிந்துகொள்ளும் வண்ணம் பிரெய்ல் எழுத்துக்கள் மூலமும் தகவல் பலகைகள் அமைத்தல் உள்ளிட்ட வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தகைய வசதிகளை ஏற்படுத்திட, நிபுணத்துவம் வாய்ந்த தொழில் நுட்ப வல்லுநர் / பணியாளர்கள் அடங்கிய தணிக்கை குழு நடப்பாண்டில் அமைக்கப்படும். இக்குழு தன்னுடைய பணிகளை மேற்கொள்ளும் பொருட்டு, 20 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும். இதன் மூலம், மாநிலம் முழுவதும் மாற்றுத் திறனாளிகளுக்கு ஏற்ற தடையற்ற சூழலை முழுமையாகவும் விரைவாகவும் ஏற்படுத்திட இயலும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

✵ ✵ ✵

# தமிழ்நாட்டில் ரூ.1,347 கோடி மதிப்பில், 128 துணை மின் நிலையங்கள்!

அறிவிப்பு எண் : 8 29.06.2017

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தடையற்ற மின்சாரம் என்பது வாழ்க்கைக்கு மிகவும் அத்தியாவசியமான ஒன்றாகும். கடந்த 6 ஆண்டுகளில் பல்வேறு மின்திட்டப் பணிகள் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில் விரைந்து முடிக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் எடுத்த சீரிய நடவடிக்கைகளினால் தமிழ்நாடு தற்போது மின் மிகை மாநிலமாக திகழ்கிறது. அனைவரும் தரமான மின்சாரம் பெறும் வகையில், துணை மின் நிலையங்கள், மின் பாதைகள், மின் மாற்றிகள் ஆகியவை அமைக்கப்பட்டுள்ளன. 2008ஆம் ஆண்டு அமலில் இருந்த மின்கட்டுப்பாட்டு முறைகள் மறைந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அயராத முயற்சியினால், 05.06.2015 முதல் முழுவதுமாக நீக்கப்பட்டு, அனைத்து மின் நுகர்வோர்களுக்கும் தற்போது 24 மணி நேரமும் மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. 2016ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்ற பொதுத் தேர்தலின் போது, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக தேர்தல் அறிக்கையில், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் அளித்த வாக்குறுதியின்படி, அனைத்து வீட்டு மின் உபயோகிப்பாளர்களுக்கும், தற்போது நடைமுறையில் உள்ள கணக்கீட்டின்படி, 100 யூனிட் வரையிலான மின்சாரம் கட்டணம் இன்றி வழங்கப்பட்டு வருகிறது.

நடப்பாண்டில் மின்வாரியத்தால் மேற்கொள்ளப்பட உள்ள புதிய மின் திட்டங்கள் பற்றி இந்த மாமன்றத்தில் வெளியிடுவதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

1. நாகை மாவட்டம் மணல்மேடு பகுதியில் 650 கோடி ரூபாய் மதிப்பீட்டில், ஒரு புதிய 400 கிலோ வோல்ட் துணை மின் நிலையம் மற்றும் அதனோடு சேர்ந்த மின் பாதைகளும் அமைக்கப்படும்.

2. சென்னை மாநகரிலுள்ள கோயம்பேட்டில் 1,300 கோடி ரூபாய் மதிப்பீட்டில், புதிய 400 கிலோ வோல்ட் எரிவாயு காப்பிடப்பட்ட (GIS) துணை மின் நிலையம் மற்றும் அதனோடு சேர்ந்த மின் பாதைகளும் அமைக்கப்படும்.

3. தற்போது 230 கிலோ வோல்ட்டாக இருக்கின்ற தரமணி துணை மின் நிலையம் 710 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 400 கிலோ வோல்ட் எரிவாயு காப்பிடப்பட்ட (GIS) துணை மின் நிலையமாக தரம் உயர்த்தப்படும் .

4. இராமநாதபுரம் மாவட்டம், கடலாடி வட்டத்தில், நரிப்பையூர் மற்றும் அதன் அருகிலுள்ள கிராமங்களை உள்ளடக்கி 500 மெகாவாட் மிக உய்ய சூரியசக்தி மின்னழுத்த பூங்கா (Ultra Mega Solar Photovoltaic Power Park) 2,350 கோடி ரூபாய் மதிப்பீட்டில், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தால் பொறியியல்–கொள்முதல்–கட்டுமானம் (EPC) அடிப்படையில் அமைக்கப்பட்டு இயக்கப்படும்.

5. சென்னை பெருநகரின் மின்கட்டமைப்பை மேம்படுத்தும் விதமாக, கூடுதலாக 31 புதிய துணை மின் நிலையங்கள், இயக்கத்தில் உள்ள 314 உயரழுத்த மின்மாற்றிகளை திறன் உயர்த்தும் பணிகள், புதிய 33/11 கிலோ வோல்ட் மின்னூட்டிகள்

நிறுவும் பணிகள் மற்றும் இயக்கத்தில் உள்ள 33/11 கிலோ வோல்ட் மின்னூட்டிகளை வலுப்படுத்தும் பணிகள் ஆகியன 1,800 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

6. தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களில், 230 கிலோ வோல்ட் துணை மின் நிலையங்கள் நான்கு, 110 கிலோ வோல்ட் துணை மின் நிலையங்கள் நாற்பத்திநான்கு, 33 கிலோ வோல்ட் துணை மின் நிலையங்கள் 80 ஆக மொத்தம் 128 துணை மின் நிலையங்கள் 1,347 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

7. தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை, எரிசக்தி திறன் சேவை லிமிடெட் (EESL) உடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திட்டு, அதனால் அடுத்த மூன்றாண்டுகளுக்கு 11,000 கோடி ரூபாய் முதலீட்டுடன் மாநிலத்தில் பயனுள்ள ஆற்றல் செய்திறன் நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்ளவும், புதுப்பிக்கத்தக்க ஆற்றலை உயர்த்திடவும் மற்றும் புதைபடிவ எரிபொருள் நுகர்வினை குறைக்கவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

✵ ✵ ✵

# திருவள்ளூரில் ரூ.1,295 கோடி செலவில், ஒரு பல்முனை சரக்கு போக்குவரத்து பூங்கா!

அறிவிப்பு எண் : 9 29.06.2017

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இந்தியாவில் தொழில் துவங்கத் தேவையான உகந்த சூழ்நிலையும், சிறப்பான திறன் வாய்ந்த மனித வளத்தினையும், 24 மணி நேரம் கிடைக்கின்ற தரமான மின்சாரம், சுமுகமாக தொழில் தொடங்கிநடத்துவதற்கு அனைத்து சூழ்நிலைகளையும் தன்னகத்தே கொண்டுள்ளது தமிழ்நாடு. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் இந்தியாவிலேயே மகாராஷ்டிராவை அடுத்து இரண்டாவது இடத்தில் தமிழ்நாடு இருக்கிறது. தொழிற்சாலைகளின் எண்ணிக்கையிலும், தொழிற்சாலைகளில் பணிபுரிவோர் எண்ணிக்கையிலும், தமிழ்நாடு முதல் மாநிலமாகத் திகழ்கிறது. புதிய சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழிற்சாலைகள் பதிவு செய்வதிலும் தமிழ்நாடு முதல் மாநிலமாக விளங்குகிறது. தொழில் துறையில் நிகர மதிப்புக் கூட்டல் படி தமிழ்நாடு மூன்றாம் இடத்தில் உள்ளது. தொழில் நிறுவனங்களின் உற்பத்திப் பொருட்களின் மொத்த வருவாய் மதிப்பிலும், மொத்த ஏற்றுமதியிலும் மூன்றாம் இடத்தில் தமிழ்நாடு உள்ளது. வெளிநாட்டு நேரடி முதலீடுகளைப் பெறுவதில் தமிழ்நாடு முன்னிலை மாநிலமாக உள்ளது.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் அம்மாவின் அரசின் சார்பாக, தமிழ்நாட்டில் தொழில்

வளர்ச்சியினை மேலும் மேம்படுத்திட பின்வரும் அறிவிப்புகளை இம்மாமன்றத்தில் வெளியிடுவதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

1. திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டம், புழுதிவாக்கம் மற்றும் வாயலூர் கிராமங்களில் உள்ள சுமார் 360 ஏக்கர் நிலப்பரப்பில், தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம், மத்திய அரசின் தேசிய நெடுஞ்சாலை ஆணையக் குழுவுடன் இணைந்து ஒரு பல்முனை சரக்கு போக்குவரத்து பூங்கா (Multi Modal Logistics Park) 1,295 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த பல்முனை சரக்கு போக்குவரத்து பூங்காவை அமைப்பதால் போக்குவரத்து செலவுகள், வாகனங்களினால் ஏற்படும் மாசு மற்றும் சாலை நெரிசல் வெகுவாக குறைய வாய்ப்புள்ளது. இத்திட்டம் பொன்னேரி தொழில் முனைய (Node) மேம்பாட்டுத் திட்டத்தின் கட்டமைப்பு வசதிகளை உள்ளடக்கிய ஒன்றாகும்.

2. தூத்துக்குடி மாவட்டம், மீளவிட்டான் கிராமத்தில் தேசிய நெடுஞ்சாலை எண்.45B-ன் புறவழிச் சாலையையொட்டி, 1,032 ஏக்கர் பரப்பளவில், சிப்காட் தூத்துக்குடி தொழில் வளாகம் நிலை–I உருவாக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. அப்பகுதியில் காணப்படும் தொழில் மனைகளுக்கானத் தேவையைக் கருத்தில் கொண்டும், கடல்வழி, வான்வழி மற்றும் இரயில் வழிப் போக்குவரத்து வசதிகளைக் கருத்தில் கொண்டும், சிப்காட் தொழில் வளாகம் நிலை–Iஐ ஒட்டி, ஒட்டப்பிடாரம் வட்டத்தில், தெற்கு வீரபாண்டியபுரம் மற்றும் மீளவிட்டான் கிராமங்களில் சுமார் 1,600 ஏக்கர் பரப்பளவில், சிப்காட் தூத்துக்குடி தொழில் வளாகம் – நிலை II உருவாக்கப்படும்.

இவ்வளாகத்தினை மேம்படுத்தும் பொருட்டு, முதலாவதாக 600 ஏக்கர் பரப்பளவுக்கு அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளான உட்புறச் சாலைகள், தண்ணீர் வழங்குவதற்கான ஏற்பாடுகள், மழைநீர் வடிகால், சாலையோர மரங்கள், தெரு விளக்குகள் மற்றும் பிற வசதிகள் 60 கோடி ரூபாய் செலவில், இரண்டு வருட காலத்திற்குள்ளாக, உருவாக்கப்படும். இதன் மூலம் 500 கோடி ரூபாய் முதலீடும், 10 ஆயிரம் நபர்களுக்கு நேரடி வேலை வாய்ப்பும், 20 ஆயிரம் நபர்களுக்கு மறைமுக வேலைவாய்ப்பும் உருவாகும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

✵ ✵ ✵

# தொழிற்பேட்டை சங்கங்கள் அமைக்கவிருக்கும் திட்டங்களுக்கு ரூ.10 கோடி அரசின் பங்குத் தொகை!

அறிவிப்பு எண் : 10 29.06.2017

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு அம்மா அவர்கள் காட்டிய வழியில் செயல்படும் இந்த அரசின் சார்பாக, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் வளர்ச்சிக்காக கீழ்க்காணும் திட்டங்களை இந்த மாமன்றத்தில் அறிவிப்பதில் நான் பெருமை அடைகிறேன்.

1. தமிழ்நாட்டில் அனைத்து வசதியுடன் கூடிய தொழிற்பேட்டைகளை தொடங்குவது மற்றும் அவைகளைத் திறம்பட நிருவகிப்பது தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்தின் முக்கியமான செயல்பாடுகளாகும்.

தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் மூலம்,

அ) வேலூர் மாவட்டம், ஆற்காடு வட்டம், முள்ளுவாடி மற்றும் நாகலேரி கிராமங்களில் சுமார் 20 ஏக்கர் நிலப்பரப்பில் 4 கோடியே 74 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும்,

ஆ) திருவள்ளூர் மாவட்டம், ஊத்துக்கோட்டை வட்டம், ஏனம்பாக்கம் கிராமத்தில் 216.37 ஏக்கர் நிலப்பரப்பில், 58 கோடியே 82 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும்,

இ) திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் வட்டம், பெரியகோளாபாடி மற்றும் கண்ணக்குருக்கை கிராமங்களில் 57.18 ஏக்கர் நிலப்பரப்பில், 13 கோடியே 44 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும்,

மூன்று தொழிற்பேட்டைகள் நடப்பாண்டில் 77 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

2. தமிழ்நாட்டில் பதிவு செய்யப்பட்ட குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களில், குறு நிறுவனங்களின் எண்ணிக்கை 6.92 இலட்சம் ஆகும். ஈரோடு மாவட்ட குறு மற்றும் சிறு தொழில்கள் சங்கம் சார்பில், 6 கோடியே 52 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 20 சேமிப்பு கிடங்குகள், நிருவாக அலுவலகம், காட்சி மையம், பேச்சுவார்த்தை அரங்கம் ஆகியவை அமைக்கப்படும். இதன் மூலம் 700 குறுந்தொழில்கள் பயன்பெறும்.

காக்களூர் மாவட்ட குறு மற்றும் சிறு தொழில்கள் சங்கம் சார்பில், 4 கோடியே 64 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், பயிற்சி மையம், சந்தை மற்றும் காட்சி மையம், பேச்சுவார்த்தை அரங்கம் ஆகியவை அமைக்கப்படும். இதன் மூலம் 120 குறுந்தொழில்கள் பயன்பெறும்.

திருமுடிவாக்கம் தொழிற்பேட்டை சங்கம் சார்பில் (பகுதி I), 2 கோடியே 60 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், கழிவு நீர் சுத்திகரிப்பு ஆலை அமைக்கப்படும். இதன் மூலம் 60 குறுந்தொழில்கள் பயன்பெறும்.

திருமுடிவாக்கம் தொழிற்பேட்டை சங்கம் (பகுதி II), 5 கோடியே 1 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், பயிற்சி மையம், சந்தை மற்றும் காட்சி மையம், பொது கிடங்கு, பேச்சுவார்த்தை அரங்கம் ஆகியவற்றை அமைக்கும். இதன் மூலம் 100 குறுந்தொழில்கள் பயன்பெறும்.

மேற்கண்ட சங்கங்கள் அமைக்கவிருக்கும் திட்டங்களுக்கு அரசின் பங்குத் தொகையாக 10 கோடி ரூபாய் நிதி வழங்கப்படும்.

3. நீலகிரி மாவட்டத்தின் முக்கிய வாழ்வாதாரமாக தேயிலை விளங்குகிறது. தேயிலைத் தொழிற்சாலைகள் அம்மாவட்ட

சிறு தேயிலை விவசாயிகளின் பொருளாதார நிலையினை உயர்த்துவதில் முக்கிய பங்காற்றுகிறது. இருப்பினும், தேயிலைச் சந்தை அவ்வப்போது எதிர்கொள்ளும் விலை ஏற்றத்தாழ்வினால், தொழிற்கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளுக்கு இழப்பு ஏற்படுகிறது. இதனால், அத்தேயிலைத் தொழிற்சாலைகள், பசுந்தேயிலை வழங்கும் தொழிற்கூட்டுறவு சங்க உறுப்பினர்களுக்கு நியாயமான விலை வழங்கிட இயலாமல் போகிறது. இவ்வாறு ஏற்படும் சூழ்நிலையில், சிறு தேயிலை விவசாயிகளின் நலன் காக்கும் பொருட்டு, 12 கோடி ரூபாய் மதிப்பீட்டில், "விலையினை நிலைநிறுத்தும் நிதியம்" ஒன்றினை 'இண்ட்கோசர்வ்வுடன்' (Indcoserve) இணைந்து ஒரே தவணையாக 2014–2015ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசால் ஏற்படுத்தப்பட்டது. இருப்பினும், விலை ஏற்றத்தாழ்வு நிலை அடிக்கடி ஏற்படுவதாலும், சிறு தேயிலை விவசாயிகளின் நலன் பெரிதும் பாதிக்கப்படுவதாலும், இச்சிக்கலுக்கு நீண்டகால தீர்வு காண வேண்டியது அவசியமாகிறது. இந்த முயற்சியின் ஒரு பகுதியாக, நடப்பாண்டில், நீலகிரி மாவட்டத்தில் கைகாட்டி மற்றும் மகாலிங்கா தொழிற்கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளில் தலா 2 கோடியே 5 இலட்சம் ரூபாய் செலவில், இமாச்சல பிரதேசம், பாலம்பூர் இமாலயன் உயிரி வள தொழில்நுட்ப நிறுவன உதவியுடன் தேயிலை பாலிபினால்ஸ் / பசுந்தேயிலை சாறு கலந்த கேட்டச்சின் எனப்படும் மதிப்பு கூட்டப்பட்ட தேயிலை உற்பத்தி பிரிவுகள் தொடங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

✵ ✵ ✵

# சேலத்தில் ரூ.9.46 கோடி செலவில், குழந்தைகள் காப்பகத்திற்கான புதிய கட்டடம்!

அறிவிப்பு எண் : 11 29.06.2017

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் காட்டிய வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு, நடப்பாண்டில் சமூக நலத் துறை சார்பாக, கீழ்க்கண்ட அறிவிப்பினை இம்மாமன்றத்தில் வெளியிடுவதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

தமிழக அரசால் தற்போது 36 அரசு குழந்தைகள் காப்பகங்கள் செயல்பட்டு வருகின்றன. சேலம் மாவட்டத்தில் உள்ள அன்னை சத்தியா அம்மையார் நினைவு குழந்தைகள் காப்பகக் கட்டடம் கட்டப்பட்டு 38 ஆண்டுகள் கடந்து விட்ட நிலையில் மிகவும் பழுதடைந்துள்ளதால், தற்போதுள்ள பழைய கட்டடத்தை இடித்து விட்டு, அதே இடத்தில் 100 குழந்தைகள் தங்கும் வகையில், வகுப்பறைகள், அலுவலக அறை, உணவருந்தும் கூடம், நவீன சமையலறை, பண்டக பொருட்கள் வைப்பறை, துயிற்கூடங்கள் (கழிவறை மற்றும் குளியலறை வசதியுடன்) தியான அறை, பொழுது போக்கு அறை, பணியாளர்கள் அறை மற்றும் 10 பணியாளர் குடியிருப்புகள் கொண்ட அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய புதிய கட்டடம், 9 கோடியே 46 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

* * *



# கோயம்புத்தூரில் ரூ.442 கோடி மதிப்பீட்டில், பாதாளச் சாக்கடைத் திட்டம்!

அறிவிப்பு எண் : 12 03.07.2017

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் காட்டிய வழியில் செயல்படும் இந்த அரசின் சார்பாக, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்ந்த பின் வரும் அறிவிப்புகளை இந்த மாமன்றத்தில் வெளியிடுவதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

மத்திய அரசு, மாநில அரசு மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பங்களிப்புடன் அட்டல் நகர்ப்புற புத்துணர்வு மற்றும் நகர்ப்புற மாற்றத்திற்கான (AMRUT) திட்டத்தின் கீழ், பின்வரும் பணிகள் மேற்கொள்ளப்படும்.

1. வேலூர் மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட பகுதிகளான சத்துவாச்சாரி, அலமேல்மங்காபுரம் மற்றும் குணவட்டம் ஆகிய பகுதிகளில் 343 கோடியே 69 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்தப்படும். இதனால் வேலூர் மாநகராட்சியிலுள்ள 2 இலட்சத்து 62 ஆயிரம் பேர் பயன்பெறுவர்.

2. கோயம்புத்தூர் மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட குறிச்சி, குனியமுத்தூர் பகுதிகளில் 442 கோடி ரூபாய் மதிப்பீட்டில், பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தினால் 2 இலட்சத்து 58 ஆயிரத்து 734 பேர் பயன்பெறுவர்.

**3.** திருச்சிராப்பள்ளி மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட பொன்மலை மற்றும் அபிசேகபுரம் பகுதிகளில் **325** கோடி ரூபாய் மதிப்பீட்டில், பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்தப்படும். இதன் மூலம் ஒரு இலட்சத்து **77** ஆயிரத்து **454** பேர் பயன் பெறுவர்.

**4.** திருநெல்வேலி மாநகராட்சி இணைப்புப் பகுதிகளில் **326** கோடி ரூபாய் செலவில், பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின் மூலம் **2** இலட்சத்து **14** ஆயிரத்து **857** பேர் பயன் பெறுவர் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**5.** அடையாறு உப்பங்கழி மற்றும் கழிமுகப் பகுதியின் **358** ஏக்கர் பரப்பளவில் சீரமைப்புப் பணிகள் முழுமையாக நிறைவு பெற்றுள்ளது. இதனைத் தொடர்ந்து அடையாறு நதியின் தொடக்கம் முதல் முகத்துவாரம் வரையிலான **42** கிலோ மீட்டர் தூரத்தை **555** கோடியே **46** இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், சீரமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

✵ ✵ ✵

# சுயஉதவிக்குழுக்களுக்கு நடப்பாண்டில் ரூ.7,000 கோடி வங்கிக் கடன்!

அறிவிப்பு எண் : 13 03.07.2017

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஒரு மாநிலத்தின் உயிர் நாடியாக விளங்குவது கிராமங்கள் என்று சொன்னால் அது மிகையாகாது. ஊராட்சிகளில் வாழும் மக்கள் நலன் கருதி, நகரங்களில் கிடைக்கப்பெறும் அடிப்படை மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை கிராமங்களிலும் ஏற்படுத்துதல், ஊரகச் சாலைகளை மேம்படுத்துதல், வீட்டு வசதியினை அளித்தல், தூய்மையான சுற்றுப்புறம் மற்றும் சுகாதாரத்தைப் பேணுதல், ஊரக மக்களுக்கு வாழ்வாதார வாய்ப்புகளை ஏற்படுத்துதல் போன்ற பல்வேறு நடவடிக்கைகளை மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் எடுத்து வந்தார்கள். மேலும், 2011ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பேற்றவுடன், முதலமைச்சரின் சூரிய சக்தியுடன் கூடிய பசுமை வீடுகள் திட்டத்தை மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் அறிமுகப்படுத்தினார். இத்திட்டம் தமிழ்நாட்டு மக்களின் பேராதரவைப் பெற்றது.

நடப்பாண்டில், ஊரகப் பகுதி மக்கள் பயன் பெறும் வகையில், ஊரக வளர்ச்சித் துறையின் சார்பில் கீழ்க்கண்ட அறிவிப்புகளை இம்மாமன்றத்தில் வெளியிடுவதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

1. 2015–2016ஆம் ஆண்டில், பல்வேறு வகையான சாலைகளை ஒரே திட்டத்தின் கீழ் மேம்படுத்தும் வகையில், தமிழ்நாடு ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் 800 கோடி ரூபாய் மதிப்பீட்டில்

அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் கீழ், கடந்த 2 வருடங்களில், 8,875 கிலோ மீட்டர் நீளமுள்ள ஊரகச் சாலைகள் 1,600 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ், 2017–2018ஆம் ஆண்டில், 800 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் 3,500 கிலோ மீட்டர் நீளமுள்ள ஊரகச் சாலைகள் மேம்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

2. பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம் சிறப்பாக செயல்படுத்தப்பட்டுள்ளதைத் தொடர்ந்து, மத்திய அரசு, இத்திட்டத்தின் இரண்டாம் கட்டத்தினை செயல்படுத்திட தமிழக அரசுக்கு அனுமதி அளித்துள்ளது. இதன் வாயிலாக, 2017–2018ஆம் ஆண்டில் 2,659 கிலோ மீட்டர் நீளமுள்ள ஊரகச் சாலைகள் மற்றும் 25 உயர்மட்டப் பாலங்கள் 1,254 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.

3. ஊரகப் பகுதிகளில் உள்ள சுய உதவிக் குழுக்களின் கூட்டமைப்புகளை வலுப்படுத்திடவும், உறுப்பினர்கள் தங்களது கருத்துக்களை பகிர்ந்து கொள்வதற்கும், பயிற்சிகள் அளிப்பதற்கும், தாங்கள் உற்பத்தி செய்த பொருட்களை கண்காட்சி நடத்தி விற்பனை செய்வதற்கும் ஏதுவாக, ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு கட்டடங்கள் தலா 60 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 1,000 கட்டடங்கள் 600 கோடி ரூபாயில் கட்டப்படும்.

4. திறந்தவெளியில் மலம் கழித்தல் அற்ற “முழு சுகாதார தமிழகம்” என்ற இலக்கினை அடையும் வகையில், 2017–2018ஆம் ஆண்டில், தூய்மை பாரதம் இயக்கம் மற்றும் தேசிய வேலை உறுதித் திட்டத்தின் கீழ், 26.49 இலட்சம் தனி நபர் இல்லக் கழிப்பறைகள், தலா 12,000 ரூபாய் ஊக்கத் தொகையில் மொத்தம் 3,178 கோடி ரூபாயில் கட்டப்படும்.

5. திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் அனைத்து கிராம ஊராட்சிகளிலும் வெற்றிகரமாக செயல்படுவதை மேம்படுத்தும் வகையிலும், கழிவுகள் அகற்றப்படும் முறைகளை நவீனப்படுத்தும் விதமாகவும், மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளுக்கு அருகாமையில் உள்ள கிராம ஊராட்சிகளுக்கும், மலைப் பிரதேசங்களில் அமைந்துள்ள கிராம ஊராட்சிகளுக்கும், அதிகமான மக்கள் தொகை கொண்ட பெரிய கிராம ஊராட்சிகளுக்கும் கூடுதல் உட்கட்டமைப்பு வசதிகளாக, தெருவில் வைக்கப்படும் குப்பைத் தொட்டிகள் 200 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும், மூன்று சக்கர மிதிவண்டிகள் / தள்ளு வண்டிகள் 100 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும் மற்றும் மின்கலம் மூலம் இயக்கப்படும் தள்ளு வண்டிகள் 200 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும் வழங்கப்படும். மொத்தத்தில், இத்திட்டத்திற்கென 500 கோடி ரூபாய் செலவிடப்படும்.

6. சுய உதவிக் குழுக்களுக்குத் தேவையான கடன் உதவியை உரிய நேரத்தில் குறைந்த வட்டி விகிதத்தில் வங்கிகள் மூலம் பெற்றுத் தருவதன் வாயிலாக, பெண்கள் பொருளாதார மேம்பாடு அடையவும் மற்றும் கடன் சுமைகளிலிருந்து விடுபடவும் வழிவகை செய்யப்படுகிறது. மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்களின் பொருளாதார மேம்பாட்டிற்கென கடந்த 6 ஆண்டுகளில் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆட்சி காலத்தில் 32,848 கோடி ரூபாய் வங்கிகள் மூலம் கடனாக வழங்கப்பட்டுள்ளது. நடப்பாண்டில், மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு 7,000 கோடி ரூபாய் வங்கிக் கடன் வழங்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

✵ ✵ ✵

# மண்பாண்டத் தொழிலாளர்களின் மழைக்கால பராமரிப்பு உதவித்தொகை ரூ.5,000 ஆக உயர்வு!

அறிவிப்பு எண் : 14 05.07.2017

**மா**ண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே,

கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை சார்பில் கீழ்க்கண்ட அறிவிப்பினை இம்மாமன்றத்தில் வெளியிடுவதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

மழைக் காலங்களில் மண்பாண்டங்கள் செய்வதில் உள்ள சிரமங்களைக் கருத்தில் கொண்டு, மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் 2016 சட்டமன்ற பொது தேர்தலின் போது வெளியிட்ட தேர்தல் அறிக்கையில் ‘‘மண்பாண்ட தொழிலாளர்களுக்கு தற்போது வழங்கப்படும் 4,000 ரூபாய் மழைக் கால பராமரிப்பு உதவித் தொகையானது, 5,000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்’’என்ற வாக்குறுதியை அளித்திருந்தார்கள். அந்த வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் காட்டிய வழியில் செயல்படும் அம்மாவின் அரசு, மண்பாண்டத் தொழிலாளர்களின் மழைக் கால பராமரிப்பு உதவித் தொகையாக, தற்போது வழங்கப்பட்டு வரும் 4,000 ரூபாய், இனி 5,000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதன் மூலம், இத்தொழிலில் ஈடுபட்டு வரும் 12,236 குடும்பங்கள் பயன் பெறுவர்.

இதனால் அரசுக்கு ஆண்டொன்றுக்கு ஒரு கோடியே 22 இலட்சத்து 36 ஆயிரம் ரூபாய் கூடுதல் செலவு ஏற்படும்.

❋ ❋ ❋

# மயிலாடுதுறை, திண்டுக்கல், கிருஷ்ணகிரி, திருவள்ளூர் தலைமை மருத்துவமனைகளில் ரூ.80 கோடி மதிப்பீட்டில், 4 மேன்மைமிகு மையங்கள் (Centre of Excellence)!

அறிவிப்பு எண் : 15 05.07.2017

**மா**ண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே,

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் வழியில் செயல்படும் இந்த அரசு, மக்கள் நல்வாழ்வுத் துறையால் செயல்படுத்தப்பட இருக்கும் சில புதிய திட்டங்களை இம்மாமன்றத்தில் வெளியிடுவதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

1. புற்றுநோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உயர் சிகிச்சை அளிக்க வேண்டும் என்பதற்காக, மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள், சென்னை அடையார் புற்றுநோய் மையத்தை 120 கோடி ரூபாய் செலவில், புற்றுநோய்க்கான உயர் சிகிச்சை மையமாக அறிவித்தார்கள். இதற்கான கட்டடப் பணிகள் முழு வீச்சில் நடைபெற்று வருகிறது. இது மட்டுமின்றி, மதுரை, கோயம்புத்தூர், தஞ்சாவூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய நான்கு மண்டல புற்றுநோய் மையங்கள் 60 கோடி ரூபாய் செலவில் ஏற்படுத்தப்பட்டு, பணிகள் முடியும் தருவாயில் உள்ளன. இந்த ஆண்டு, ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனை, சென்னை, இராயப்பேட்டை அரசு மருத்துவமனை, சென்னை, அரசு இராஜாஜி மருத்துவமனை, மதுரை மற்றும் தஞ்சாவூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை ஆகிய நான்கு மருத்துவமனைகளில் 64 கோடி ரூபாய் செலவில்

புற்றுநோயாளிகளுக்கு நவீன சிகிச்சை அளிக்கும் பொருட்டு, நவீன 'லீனியர் ஆக்சிலேட்டர்' கருவி நிறுவப்படும்.

**2.** தாய்சேய் நலனைப் பேணிக் காக்க, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் கடந்த 6 ஆண்டுகளாக பல்வேறு நலத் திட்டங்களை செயல்படுத்தி வந்தார்கள். அந்த வகையில், மயிலாடுதுறை, திண்டுக்கல், கிருஷ்ணகிரி மற்றும் திருவள்ளூர் மாவட்ட தலைமை மருத்துவமனைகளில் தலா 20 கோடி ரூபாய் வீதம் மொத்தம் 80 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நான்கு மேன்மைமிகு மையங்கள் (Centre of Excellence) அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதன் மூலம் தாய் மற்றும் சேய் இறப்பு பெரிய அளவில் குறைக்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**3.** தமிழ்நாடு விபத்து மற்றும் அவசர சிகிச்சை முன்னெடுப்பு சேவை, தேசிய நலவாழ்வு குழும நிதி மற்றும் சாலை பாதுகாப்பு நிதியிலிருந்து திருப்பூர், இராமநாதபுரம், பெரம்பலூர், செய்யாறு, உளுந்தூர்பேட்டை, இராஜபாளையம், திருத்தணி, ஆத்தூர் மற்றும் காரைக்குடி அரசு மருத்துவமனைகளில் விபத்து மற்றும் அவசர சிகிச்சை மையங்கள் 57 கோடி ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும். இது தவிர, 10 தாலுக்கா மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் அவசரகால நிலைப்படுத்தும் மையம் ஏற்படுத்தப்படும். 5 தேசிய நெடுஞ்சாலைகளில் அனைத்து முதலுதவி வசதிகளைக் கொண்ட நடமாடும் அவசர சிகிச்சை ஊர்தி சேவை தொடங்கப்படும்.

**4.** தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம், தற்போது 17 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் மாவட்ட தலைமை மருத்துவமனைகளில் 18 எம்.ஆர்.ஐ. ஸ்கேன் கருவிகளை நிறுவி பராமரித்து வருகிறது. நடப்பாண்டில், காஞ்சிபுரம்,

திண்டுக்கல், விருதுநகர், இராமநாதபுரம், நாகப்பட்டினம், திருவள்ளூர், நாமக்கல், திருப்பூர் மற்றும் கள்ளக்குறிச்சி ஆகிய 9 மாவட்ட தலைமை மருத்துவமனைகளில் 45 கோடி ரூபாய் செலவில் எம்.ஆர்.ஐ. ஸ்கேன் கருவி நிறுவப்படும்.

5. தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம், அரசு மருத்துவ நிலையங்களுக்குத் தேவையான மருந்துகளை கொள்முதல் செய்து மருந்து கிடங்குகளில் சேமித்து வைத்து விநியோகம் செய்து வருகிறது. போதிய இடவசதி இல்லாத, கடலூர், புதுக்கோட்டை, திருவாரூர், வேலூர், விருதுநகர், கோயம்புத்தூர், காஞ்சிபுரம், மதுரை, நாகர்கோவில், தஞ்சாவூர், திருநெல்வேலி, தூத்துக்குடி, இராமநாதபுரம், திருவண்ணாமலை, திருச்சிராப்பள்ளி, நாமக்கல், கிருஷ்ணகிரி, திருவள்ளூர், திருப்பூர், சேலம், விழுப்புரம் மற்றும் நீலகிரி ஆகிய 22 மாவட்டங்களில் உள்ள மருந்து கிடங்குகளுக்கு கூடுதல் கட்டடங்கள் 33 கோடி ரூபாய் செலவில் கட்டப்படும்.

6. அரசு மருத்துவனைகளில் நடப்பாண்டில் 7 சி.டி. ஸ்கேன் கருவிகள் மணப்பாறை, மேட்டூர் அணை, மன்னார்குடி, பென்னாகரம், ஒசூர், பரமக்குடி, மற்றும் குளித்தலை ஆகிய 7 அரசு மருத்துவமனைகளில் 12 கோடியே 25 இலட்சம் ரூபாய் செலவில் நிறுவப்படும்.

7. தாய் சேய் நலப் பணிகளை திறம்பட செயல்படுத்தி வரும் 9,994 சுகாதார செவிலியர்களுக்காக 9 கோடியே 99 இலட்சம் ரூபாய் செலவில் கைக் கணினிகள் (Tab) வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

✵ ✵ ✵

# எர்ணாவூரில் ரூ.676.61 கோடி மதிப்பீட்டில், குடிசைப்பகுதி வாழ் மக்களுக்கு 6,874 அடுக்குமாடி குடியிருப்புகள்!

அறிவிப்பு எண் : 16 05.07.2017

---

**மா**ண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே,

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் 2023யின்படி, மாநிலம் முழுவதற்கும் உயர்தர உட்கட்டமைப்பை வழங்குவது, போதுமான வீட்டுவசதி திட்டங்களை நிறைவேற்றி தமிழ்நாட்டை 2023–க்குள்ளாக குடிசைகளற்ற மாநிலமாக உருவாக்கிட மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் கடந்த 6 ஆண்டுகளாக பல்வேறு வீட்டுவசதித் திட்டங்களை தமிழ்நாட்டு மக்களுக்கு வழங்கியுள்ளார்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் செயல்படும் இந்த அரசு, வீட்டு வசதித்துறை, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம், தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் மற்றும் நகர்ப்புற ஊரமைப்புத் துறை ஆகிய துறைகளின் பின்வரும் புதிய திட்டங்களைச் செயல்படுத்தும் என்பதை இம்மாமன்றத்திற்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

1. தமிழ்நாடு அரசு ஒரு புதிய குடியிருப்பு மற்றும் உறைவிடக் கொள்கை உருவாக்கும். வீடு கட்டும் செலவினத்தைக் குறைத்தல், பொருளாதாரத்தில் நலிவடைந்த மற்றும் குறைந்த வருவாய்ப் பிரிவினரை உள்ளடக்கிய அனைவருக்கும் போதுமான வீட்டுவசதியினை கிடைக்கச் செய்தல்; வாங்கத் தக்க விலையில்

மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த வீடுகள் கட்ட இடம் ஒதுக்கீடு செய்தல்; அனைவருக்கும் அடிப்படை வசதிகளான, மின்சாரம், குடிநீர் மற்றும் சாலை வசதிகளுடன் கூடிய வீடு வழங்குதலை உறுதி செய்தல்; நகர்ப்புற மக்களின் மாறிவரும் சமூகப் பொருளாதார நிலையினைக் கருத்தில் கொண்டு, நகர்ப்புறங்களில் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்; நீடித்த நிலையான சுற்றுச்சூழல் சார்ந்த வாழ்க்கை முறையினை நகர்ப்புறங்களில் உறுதி செய்தல்; நிலையான நகரமயமாக்குதலை ஊக்குவித்தல்; சட்டம் மற்றும் ஒழுங்குமுறை அமைப்புகளில் பொருத்தமான திருத்தங்களை நடைமுறைப்படுத்துதல்; பெருந்திட்டங்கள் (Master Plan) மற்றும் வளர்ச்சிக் கட்டுப்பாட்டு விதிகளில் (Development Control Rules) திருத்தங்கள் கொண்டு வருதல்; ஒற்றைச் சாளர முறையை உருவாக்குதல்; மனை வரைபடம் ஒப்புதல் மற்றும் கட்டட அனுமதி பெற காலக்கெடு நிர்ணயித்தல்; மூத்த குடிமக்கள் மற்றும் பணிபுரியும் பெண்கள் பாதுகாப்பினை கருத்தில் கொண்டு, வீடுகள் கட்டுதல் மற்றும் அதற்குரிய உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குதல்; இடரற்ற வாடகை வீடு வழங்கும் முறையினை உருவாக்குதல் போன்றவை இக்கொள்கையின் சிறப்பம்சங்களாகும்.

**2.** பிரதம மந்திரி வீட்டுவசதித் திட்ட நிதி (PMAY), சிறப்பு மாற்றத்தக்க வளர்ச்சி உரிமைச் சான்றிதழ் (Transferable Development Rights) மூலம் திரட்டப்படும் நிதி, பயனாளிகளின் பங்களிப்புத் தொகை மற்றும் தமிழக அரசால் அளிக்கப்படும் பற்றாக்குறை நிதி (Gap Fund) ஆகியவற்றை பயன்படுத்தி, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் மூலம், எர்ணாவூரில் **676** கோடியே **61** இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், **6,874** வீடுகள் குடிசைப் பகுதியில் வாழும் மக்களுக்கு கட்டித் தரப்படும்.

**3.** பிரதம மந்திரியின் அனைவருக்கும் வீட்டுவசதித் (PMAY-Urban) திட்டத்தில், பயனாளிகள் தாமாகவே வீடு கட்டும் (Beneficiary Led Construction) வகைப்பாட்டின் கீழ்,

தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தால் 1,86,308 தனி வீடுகள் 5 ஆயிரத்து 589 கோடியே 24 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்படும். மேலும், நடப்பாண்டில் பயனாளிகள் பங்களிப்புடன் வாங்கும் திறனுக்கேற்ற வீடுகள் கட்டும் (Affordable Housing in Partnership Component) வகைப்பாட்டின் கீழ் ஒரு குடியிருப்பு 10 இலட்சம் ரூபாய் வீதம் 14,828 அடுக்குமாடி குடியிருப்புகள் 1,482 கோடியே 80 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்படும். மேற்கண்ட இரண்டு வகைபாட்டின் கீழ், கட்டடப்படும் குடியிருப்புகளுக்கு மாநில அரசின் மானியமாக 2,007 கோடியே 53 இலட்சம் ரூபாய் அளிக்கப்படும்.

4. திட்டமிட்ட மற்றும் நீடித்த நிலையான நகர் வளர்ச்சி ஏற்படுத்திட, நிலப் பயன்பாடு குறித்து திட்டமிடுதல், சுற்றுச்சூழலுக்கு உகந்த திட்டங்களை வகுத்தல், பாதுகாப்பு அம்சங்களுடன் வசிக்குமிடங்கள் ஏற்படுத்துதல், வேலைவாய்ப்பு, உட்கட்டமைப்பு, போக்குவரத்து போன்ற தேவைகளை அறிந்து சிறப்பான தீர்வுகளை பரிந்துரைக்க, தகுதி பெற்ற தனிச் சிறப்புடைய நகரமைப்பு வல்லுநர்களை பணியில் ஈடுபடுத்துவது அவசியமாகிறது. நகரமைப்பு வல்லுநர்கள், மண்டல மற்றும் உள்ளூர் விதிமுறைகளை அறிந்து, மண்டலங்களுக்கு இடையேயான நகர வளர்ச்சி குறித்த அம்சங்களை ஆராய்ந்து அதற்கான தீர்வுகளை மேற்கொள்ள வேண்டும். இதற்காக மாநில அளவில் நகரமைப்பு வல்லுநர்களுக்கான ஒரு பணித் தொகுப்பினை உருவாக்கி, அதற்கென தனியாக பணிவிதிகள் உருவாக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. இப்பணித் தொகுப்பிலுள்ள நகரமைப்பு வல்லுநர்கள், நகர் ஊரமைப்புத் துறை, சென்னைப் பெருநகர் வளர்ச்சி குழுமம், உள்ளூர் திட்டக் குழுமங்கள் (LPA) மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு மாற்றுப்பணி அடிப்படையில் பணியமர்த்தப்படுவர். நகர் மற்றும் ஊரமைப்புத் துறையின் ஆணையாளர் பணிநிலை கட்டுப்பாட்டு தகவாளராக இருப்பார்.

✵ ✵ ✵

# டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தில் ரூ.13 கோடி மதிப்பீட்டில் கூடுதல் கட்டடம்!

அறிவிப்பு எண் : 17 05.07.2017

**மா**ண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே,

சட்டக் கல்வி மேம்பாட்டிற்காக நான் கீழ்கண்ட திட்டங்களை இம்மாமன்றத்தில் அறிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.

1. தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தின் சீர்மிகு சட்டப் பள்ளியில் பயிலும் மாணவர்களின் நலனைக் கருத்தில் கொண்டு, இப்பல்கலைக்கழகத்திற்கு குளிர்சாதன வசதி, மின்னணு மேடைகள் (Electronic Podiums), கணினி ஒலி வீச்சிகள், கண்காணிப்பு கேமராக்கள் ஆகியவற்றுடன் 1,040 மாணவர்கள் அமரக் கூடிய வகையில் 20 விரிவுரை அறைகள், இயக்குநர் அறை, அலுவலக அறைகள், ஆசிரியர் அறைகள், கௌரவ ஆசிரியர் அறைகள், கருத்தரங்க கூடம், மாதிரி நீதிமன்றக் கூடம், ஆவண அறைகள் மற்றும் மாணவியருக்கான பொது ஓய்வறை ஆகியவற்றை உள்ளடக்கி, தரை மற்றும் இரண்டு தளங்களை கொண்ட கூடுதல் கட்டடம் 13 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

2. மதுரை அரசு சட்டக் கல்லூரியில் பயின்று வருகின்ற மாணவர்களுக்கு கருத்தரங்குகள், சிறப்பு சட்ட வகுப்புகள், கலை நிகழ்ச்சிகள், பல்வேறு விழாக்கள் மற்றும் பட்டமளிப்பு விழா போன்ற நிகழ்ச்சிகள் நடத்துவதற்கு தற்போதைய கலையரங்கில் போதுமான இடவசதி இல்லாததை கருத்தில் கொண்டு, புதிய கலையரங்கம் ஒன்று; முதல் தளத்திலும், நூலகக் கட்டடத்தில் உள்ள இட நெருக்கடியை கருத்தில் கொண்டு, புதிய நூலகக் கட்டடத்தை தரை தளத்திலும் உள்ளடக்கிய புதிய கட்டடம் 8 கோடியே 37 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன். ✵



# ரூ.108 கோடி செலவில், தமிழகத்தில் மூன்று வேளாண் கல்லூரிகளில் உட்கட்டமைப்பு வசதிகள்!

அறிவிப்பு எண் : 18 11.07.2017

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நாட்டின் பொருளாதாரத்தின் அடித்தளமாக விளங்கும் வேளாண் தொழிலை வளர்ச்சி அடையச் செய்து, உணவு தானிய உற்பத்தியை பெருக்குவதிலும், உணவு உற்பத்தி செய்து மனித சமுதாயத்திற்கு வழங்கும் உழவர்களின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்துவதிலும், இந்தியாவிலேயே தமிழ்நாடு முதன்மை மாநிலமாக விளங்கும் வகையில், பல முனைப்பான நடவடிக்கைகளை மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் செயல்படுத்தினார்கள்.

அதன் காரணமாகவே, 2014–2015ஆம் ஆண்டு உணவு தானிய உற்பத்தி ஒரு கோடியே 27 இலட்சத்து 95 ஆயிரம் மெட்ரிக் டன் என உயர்ந்தது. 2011–2016 கால கட்டத்தில், நான்கு ஆண்டுகளாக 100 இலட்சம் மெட்ரிக் டன்களுக்கு மேல் உணவு தானிய உற்பத்தி செய்து சாதனை படைத்ததோடு மட்டுமல்லாமல், இதற்கான மத்திய அரசின் ‘கிரிஷி கர்மான்’ விருதுகளை நான்கு முறை தமிழ்நாட்டிற்காக பெற்று தந்தவர் மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள்.

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் காட்டிய வழியில் செயல்படும் இந்த அரசின் சார்பாக, வேளாண்மைத் துறை சார்ந்த பின் வரும் புதிய அறிவிப்புகளை வெளியிடுகிறேன்.

1. தற்போது நிலவி வரும் வறட்சியினைக் கருத்தில் கொண்டு, குறைந்த நீரில் அதிக விளைச்சலும், விவசாயிகளுக்கு வருமானமும் தரும் தோட்டக்கலை பயிர்கள் சாகுபடியினை ஊக்குவிப்பதற்கு, நடப்பாண்டில் 22 மாவட்டங்களில், தக்காளி, கத்தரி, வெண்டை போன்ற காய்கறி பயிர்களில் வீரிய ஒட்டு இரகங்கள் மற்றும் உயர் விளைச்சல் இரக சாகுபடி 11,250 ஏக்கர் பரப்பளவில் மேற்கொள்ளப்படும். இத்திட்டத்திற்காக 9 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும். இதன் மூலம், சுமார் 2,250 விவசாயிகள் பயன்பெறுவர். இதற்காக, வீரிய ஒட்டு இரக விதைகள் மற்றும் குழித்தட்டுகளில் வளர்க்கப்பட்ட காய்கறி நாற்றுகள், 50 சதவீத மானியத்தில் ஏக்கருக்கு 8,000 ரூபாய் வரை வழங்கப்படும்.

2. சுற்றுச்சூழல் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு, அம்மாவின் அரசு 2012ஆம் ஆண்டில், தமிழ்நாடு சூரிய சக்திக் கொள்கை ஒன்றை வகுத்து, பல்வேறு வகைகளில் சூரிய சக்திப் பயன்பாட்டினை ஊக்குவித்து வருகிறது. கடந்த 4 ஆண்டுகளாக, 102 கோடி ரூபாய் மானியத்தில், 2,826 சூரிய சக்தி மூலம் இயங்கும் பம்ப் செட்டுகள் நிறுவப்பட்டுள்ளன. தமிழக விவசாயிகளிடையே சூரிய சக்தி மூலம் இயங்கும் பம்ப்செட்டுகளுக்கானத் தேவை அதிகம் இருப்பதால், தமிழ்நாடு அரசு, நடப்பாண்டில் இவ்வகை மோட்டார் பம்ப் செட்டுகளை 1,000 விவசாயிகளுக்கு 90 சதவிகித மானியத்தில் வழங்கும். 30 சதவீத மானியம், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் மூலம் 15 கோடி ரூபாயும், மீதமுள்ள 60 சதவிகித மானியம், வேளாண்மை பொறியியல்துறை மூலம் செயல்படுத்திட, 29 கோடியே 94 இலட்சம் ரூபாய் நிதியும் ஒதுக்கப்படும்.

3. கோயம்புத்தூரில் உள்ள தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக வளாகத்தில் 430 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 10 ஆண்டு கால செயல்திட்டமாக 'உயிரி தொழில்நுட்ப மகத்துவ மையம்' (Centre of Excellence for Bio-technology) ஒன்று நிறுவப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். நடப்பாண்டில் இம்மையத்தின் ஆயத்தப் பணிகள் 51 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும். இம்மையத்தில், விரைவில் செயல்படும் நொதிகள், பழுக்க வைக்கும் உயிரி ஹார்மோன்கள், செடிகளின் சீரமைப்புக்கான நொதிகள் போன்ற உயிரி வேளாண் இடுபொருட்கள், வேளாண் மூலக் கூறுகள் மற்றும் உயிரி செயலாக்க முறைகள், வணிக ரீதியாக தமிழ்நாடு விவசாயிகளுக்குப் பயன்படும் வகையில், பொது மற்றும் தனியார் நிறுவன கூட்டு முயற்சியுடன் உருவாக்கப்படும்.

4. அறுவடைக்குப் பின், விளைபொருள் வீணாவதை குறைக்கவும், பண்ணையளவில் மதிப்புக்கூட்டி விற்பனை செய்யவும் தோட்டக்கலை விளைபொருட்களை சேகரித்து, தரம் பிரித்து, சிப்பம் கட்டி, விநியோகத் தொடர் மேலாண்மையை மேம்படுத்துவதற்காக, நடப்பாண்டில், பண்ணை அளவில் 597 சிப்பம் கட்டும் அறைகள் (Pack houses) அமைக்கப்படும். இதற்காக, சிப்பம் கட்டும் அறை ஒன்றுக்கு 2 இலட்சம் ரூபாய் வீதம், 11 கோடியே 94 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்படும்.

5. வேளாண் சார்ந்த அனைத்துத் துறைகளின் சேவைகளை ஒரே இடத்தில் விவசாயிகள் பெற்றிடும் வகையில், வட்டார அளவில் 146 ஒருங்கிணைந்த வேளாண் விரிவாக்க மையங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. கிராம அளவில் இயங்கி வரும் 550 துணை வேளாண் விரிவாக்க மையங்களில் பல கட்டடங்கள் பழுதடைந்த நிலையில் உள்ளன. இதனை சரி செய்து, நவீனப்படுத்தும்

முயற்சியாக, முதற்கட்டமாக நடப்பாண்டில், 160 துணை வேளாண் விரிவாக்க மையங்கள் 48 கோடி ரூபாய் செலவில் புனரமைக்கப்படும்.

6. திருச்சிராப்பள்ளியில் மகளிர் தோட்டக்கலைக் கல்லூரியும், குடுமியான்மலை, ஈச்சங்கோட்டை மற்றும் வாழவச்சனூர் ஆகிய இடங்களில் மூன்று வேளாண் கல்லூரிகளும் புதிதாக மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆட்சியில் அமைக்கப்பட்டன. இம்மூன்று வேளாண் கல்லூரிகள் உள்ளிட்ட பல்கலைக்கழக இதர மையங்களான, கோயம்புத்தூர் மற்றும் தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள கிள்ளிகுளம் வேளாண் கல்லூரிகள், பெரியகுளம் தோட்டக்கலைக் கல்லூரி, மேட்டுப்பாளையம் வனக்கல்லூரி, வம்பன் பயறு ஆராய்ச்சி நிலையம், கடலூர் கரும்பு ஆராய்ச்சி நிலையம், உதகமண்டலம் தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம் உள்ளிட்ட பல்வேறு நிலையங்களில் மாணவர் பயில்திறன் சிறப்புற, நூலகம், கூடுதல் வகுப்பறைகள், ஆராய்ச்சிக் கூடங்கள், விடுதிகள், கலையரங்கம், மாணவர்களுக்கு தூய்மையான குடிநீர் போன்ற பல்வேறு அடிப்படை வசதிகளும், விதை மையம் (Seed Hub) உள்ளிட்ட உட்கட்டமைப்பு வசதிகளும் நபார்டு வங்கியின் உதவியுடன் ஏற்படுத்தப்படும். இதற்காக, நடப்பாண்டில் 108 கோடி ரூபாய் ஒதுக்கப்படும்.

7. விவசாயிகளுக்கு தரமான இடுபொருட்கள் மற்றும் தொழில்நுட்பங்கள் உரிய நேரத்தில் சென்றடையும் வகையில், வேளாண் விரிவாக்க சேவையினை மேம்படுத்திட, அரசு உரிய நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இதன் ஒரு பகுதியாக, நடப்பாண்டில் 430 வேளாண் உதவி அலுவலர் பணியிடங்கள் தமிழ்நாடு பணியாளர் தேர்வாணையம் மூலம் நிரப்ப நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

✵ ✵ ✵

## ரூ.94.18 கோடி மதிப்பீட்டில், பல்வேறு அரசு துறை அலுவலகங்களுக்கு கூடுதல் கட்டடங்கள் மற்றும் மாநில பேரிடர் பணிகளை மேம்படுத்திட ரூ.67.40 கோடி செலவில், நவீன கருவிகள்!

அறிவிப்பு எண் : 19 11.07.2017

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் வழியில் செயல்படும் தமிழக அரசின் சார்பாக வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சார்ந்த அறிவிப்புகளை இந்த மாமன்றத்தில் வெளியிடுவதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

1. அரசின் சேவைகளை எளிதாகவும், விரைவாகவும், பொதுமக்கள் பெறுவதை மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தன்னுடைய அரசின் கொள்கையாகவே ஏற்று செயல்படுத்தி வந்தார்கள். ஈரோடு மாவட்டத்தில் மாவட்ட பஞ்சாயத்து அலுவலகம், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, எய்ட்ஸ் கட்டுப்பாட்டு மையம், பால் கூட்டுறவு சங்க அலுவலகம், கைத்தறி மற்றும் துணிநூல் துறை, தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்கக அலுவலகம், கூட்டுறவு சங்கங்களின் துணை பதிவாளர் அலுவலகம், வேளாண்மை துணை இயக்குநர் அலுவலகம், குடிநீர் வடிகால் வாரிய அலுவலகம், சமூக நலத் துறை அலுவலகம் உள்ளிட்ட இதர அரசுத் துறை அலுவலகங்கள் பல்வேறு இடங்களில், வாடகை கட்டடங்களில் இயங்கி வருகின்றன. மேற்கண்ட அலுவலகங்கள் ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக பெருந்திட்ட வளாகத்திலேயே செயல்பட, 52 கோடியே 96 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கூடுதல் கட்டடங்கள் கட்டப்படும். இந்த கட்டடம் மறைந்த மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்.

அவர்களின் நூற்றாண்டு விழாவினைக் குறிக்கும் வகையில் **“புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழா கட்டடம்”** என்ற பெயரில் அழைக்கப்படும் என்பதை பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**2.** மதுரை மாவட்டத்தில், செய்தி–மக்கள் தொடர்புத் துறை, தணிக்கை துறை, மாவட்ட கருவூலம், ஆதிதிராவிடர் நல அலுவலகம், வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், மாவட்ட வழங்கல் அலுவலகம், மண்டல கலால் அலுவலகம் உள்ளிட்ட இதர அரசுத் துறை அலுவலகங்கள் பல்வேறு இடங்களில், வாடகை கட்டடங்களில் இயங்கி வருகின்றன. மேற்கண்ட அலுவலகங்கள் மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலக பெருந்திட்ட வளாகத்திலேயே செயல்பட, **26** கோடியே **62** இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கூடுதல் கட்டடங்கள் கட்டப்படும். இந்த கட்டடம் மறைந்த மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழாவினைக் குறிக்கும் வகையில் “புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழா கட்டடம்” என்ற பெயரில் அழைக்கப்படும் என்பதை பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**3.** நாமக்கல் மாவட்டத்தில் இந்து அறநிலையத் துறை, கைத்தறி மற்றும் துணிநூல் துறை, பட்டு வளர்ச்சித் துறை, தமிழ்நாடு தொழில் முதலீட்டு கழக கிளை அலுவலகம், கல்வித் துறை அலுவலகங்கள், பால்வளத் துறை, குடிநீர் வடிகால் வாரிய அலுவலகம், கால்நடை பராமரிப்புத் துறை அலுவலகம் மற்றும் உள்ளாட்சி நிதித்தணிக்கை உதவி இயக்குநர் அலுவலகம் ஆகிய அரசுத் துறை அலுவலகங்கள் பல்வேறு இடங்களில், வாடகை கட்டடங்களில் இயங்கி வருகின்றன. மேற்கண்ட அலுவலகங்கள் நாமக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலக பெருந்திட்ட வளாகத்திலேயே செயல்பட, **14** கோடியே **60** இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கூடுதல் கட்டடங்கள் கட்டப்படும்.

**4.** பேரிடர்களின் போது, மாநில அரசு, பல்வேறு துறைகளை ஒருங்கிணைத்து முறையான மீட்பு மற்றும் சீரமைப்புப் பணிகளை மேற்கொள்கின்றது. பேரிடர் கால பாதிப்பு மிக அதிக அளவில் உள்ள போது, மாநில துறைகள் மட்டுமல்லாமல், தேசிய பேரிடர்

மீட்புப் படையும், மீட்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. பேரிடர்களின் போது ஏற்படுகின்ற இன்னல்களை குறைக்கும் விதமாகவும், பேரிடர் காலங்களில் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு மிக துரிதமாக மீட்பு உதவிகளை உடனுக்குடன் கால விரயமின்றி அனுப்பிடவும், பாதிப்பிற்குள்ளான பகுதிகளையும், மக்களையும் எளிதில் சென்றடைவதற்கும், உள்ளூர் நிலப் பகுதி பற்றி நன்கு அறிந்திருக்கும் ஒரு தனி அமைப்பு தேவைப்படுகிறது. எனவே, தேசிய பேரிடர் மீட்புப் படை வழியில் ஏற்கனவே உள்ள மாநில பேரிடர் மீட்புப் படையினை (SDRF) பலப்படுத்திடவும் மற்றும் பெரும் பேரிடர்களின் போது அனைத்து விதமான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளவும், காவல் துறையில் தனியாக ஒரு பட்டாலியன் “தமிழ்நாடு பேரிடர் மீட்புப் படை” (TNDRF) என்ற ஒரு புதிய பெயரில் உருவாக்கப்படும். இதன் திறன் மேம்பாட்டிற்காகவும், தகவல் தொடர்பு மற்றும் மீட்பு உபகரணங்கள் வாங்குவதற்கும், மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து 15 கோடி ரூபாய் வழங்கப்படும்.

**5.** பருவ நிலை மாறுபாடுகளின் காரணமாக, வரலாறு காணாத பேரிடர் நிகழ்வுகளை தமிழகம் சமீப காலமாக தொடர்ந்து சந்தித்து வருகிறது. மீட்பு பணிகளில் ஈடுபடும் பல்வேறு துறைகளின் திறன் மேம்பாட்டிற்காகவும், மீட்பு மற்றும் தகவல் தொடர்பு பணிகளை மேம்படுத்துவதற்காகவும் நவீன கருவிகளை தமிழ்நாடு அரசு மாநில பேரிடர் மேலாண்மை நிதியின் மூலம் வழங்கி வருகிறது. அதன் தொடர்ச்சியாக, இந்த வருடம், சென்னை மாநகராட்சி, தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் துறை, சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம், கடலோரக் காவல் படை, வனத் துறை, பொதுப்பணித் துறை, ஊர்க் காவல் படை, நெடுஞ்சாலைத் துறை போன்ற துறைகளுக்கும் மற்றும் மாவட்ட ஆட்சியர்களுக்கும் தகவல் தொடர்பு, தேடுதல் மற்றும் மீட்பு சாதனங்கள் உள்ளிட்ட நவீன கருவிகள் வாங்கிட 52 கோடியே 40 இலட்சம் ரூபாய் மாநில பேரிடர் மேலாண்மை நிதியிலிருந்து வழங்கப்படும் என்பதை தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

✲ ✲ ✲



# ரூ.49.9 கோடி செலவில், 150 கால்நடை மருத்துவ நிலையங்கள்!

அறிவிப்பு எண் : 20 14.07.2017

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் கடந்த ஆறு ஆண்டுகளாக கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறைக்கு மிகுந்த முக்கியத்துவம் அளித்து பல முன்னோடித் திட்டங்களை தீட்டி, செயல்படுத்தி வந்தார்கள்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் காட்டிய வழியில் செயல்படும் அம்மாவின் அரசின் சார்பாக, கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறை சார்ந்த கீழ்க்கண்ட அறிவிப்புகளை இம்மாமன்றத்தில் வெளியிடுவதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

1. நடப்பாண்டில், 49 கோடியே 9 இலட்சம் ரூபாய் செலவில், 150 கால்நடை மருத்துவ நிலையங்கள் நபார்டு வங்கியின் நிதியுதவிடன் புதிதாகக் கட்டப்படும்.

2. நடப்பாண்டில், 93.86 இலட்சம் கால்நடைகளுக்கு நோய்த் தொற்றுகளை தடுக்கும் வகையில், 18 கோடியே 70 இலட்சம் ரூபாய் செலவில் தடுப்பூசிகள் போடப்படும்.

3. தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் கீழ், கோடுவெளியில் உணவு மற்றும் பால்வளத் தொழில்நுட்பக் கல்லூரி இயங்கி வருகிறது. இக்கல்லூரியில்

பயிலும் மாணாக்கர்களின் நலன் கருதி உட்கட்டமைப்பு வசதிகளை சர்வதேச தரத்திற்கு உயர்த்தும் நோக்குடன், வகுப்பறைக் கட்டடங்கள் மற்றும் ஆய்வுக் கூடங்கள் ஆகியன 14 கோடி ரூபாய் செலவில், நபார்டு வங்கி நிதியுதவியுடன் மேம்படுத்தப்படும்.

4. உற்பத்தியாளர்களிடமிருந்து கூடுதலாக பெறப்படும் பாலை கையாள, திண்டுக்கல், சிவகங்கை, புதுக்கோட்டை, தஞ்சாவூர், வேலூர், காஞ்சிபுரம்–திருவள்ளூர், விருதுநகர், தருமபுரி மற்றும் திருநெல்வேலி மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களில் குளிர்பதன வசதி, நவீன பாலகம் அமைத்தல், பால் பதப்படுத்தும் இயந்திரங்கள் நிறுவுதல், கழிவுநீர் சுத்திகரிப்பு ஆலையை மேம்படுத்துதல், தீவனக் கிடங்குகள், நெய் நிரப்பும் இயந்திரங்கள், தரக் கட்டுப்பாடு ஆய்வகம், பால்பை நிரப்பும் இயந்திரங்கள் மற்றும் இதர உபகரணங்கள் போன்ற உட்கட்டமைப்பு வசதிகள், 24 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

5. தமிழகத்தில் கிராம அளவில் சுமார் 12,000 தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் உள்ளன. கிராம அளவில் பால் உற்பத்தியாளர்களிடமிருந்து பால் கொள்முதல் செய்யும் பணியுடன், பால் தரப் பரிசோதனை செய்தல், கால்நடை தீவனம் வழங்குதல் போன்ற இதர பணிகளில் ஈடுபட்டு வரும் சுமார் 20,000 பணியாளர்களுக்கு, அச்சங்கங்களின் பால் உற்பத்தி மற்றும் அவை ஈட்டும் இலாபம் ஆகியவற்றை அடிப்படையாக கொண்டு ஊதியம் நிர்ணயம் செய்யப்படுகிறது. இவர்களது ஊதியத்தை உயர்த்தி வழங்குமாறு வைத்த கோரிக்கையை பரிசீலனை செய்து, அவர்களது பணி மூப்பு அடிப்படையில், அனைத்து முதுநிலை பணியாளர்களுக்கும் பயன் அளிக்கும் வகையில், மாற்று ஏற்பாடாக, பணப்பயன் பெறும் மாற்றுத் திட்டத்தை அரசு பரிசீலித்து

வருகிறது. தொடக்க பால் உற்பத்தியாளர்கள் சங்கங்களின் 20,000 பணியாளர்கள் உடனடியாக பயன் பெறும் வகையில், அவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு 200/– ரூபாய் கூடுதலாக வழங்கப்படும். இதற்கான 5 கோடி ரூபாய் செலவினம் சங்க நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும்.

6. மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் 2012ஆம் ஆண்டில், நாகை மாவட்டம், நாகப்பட்டினத்தில் இந்தியாவிலேயே முதலாவது மீன்வளப் பல்கலைக்கழகத்தை உருவாக்கினார்கள். தற்போது, மீன்வளப்பிரிவில் தேவைப்படும் மனிதவளத் தேவையினை பூர்த்தி செய்திடும் வகையில், நடப்பாண்டில், நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம் வட்டம், தலைஞாயிறு பேரூராட்சியில் அமைந்துள்ள ஓரடியம்புலம் கிராமத்தில் ஒரு புதிய மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் துவக்கப்படும். தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகத்தின் கீழ் நிறுவப்படும் இந்த புதிய மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில், நடப்பாண்டிலிருந்து 20 மாணவர்கள் மீன்வள இளநிலை பட்டப்படிப்பிற்கு சேர்க்கப்படுவார்கள். இந்த மீன்வளக் கல்லூரிக்குத் தேவையான அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள் 15 ஏக்கர் பரப்பிலும், 50 ஏக்கர் பரப்பளவில் நன்னீர் மற்றும் உவர்நீர் மீன்பண்ணைகளும் அமைக்கப்படும். இந்த மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தினை அமைப்பதற்கு 28 கோடியே 82 இலட்சம் ரூபாய் முதற்கட்டமாக வழங்கப்படும்.

7. சென்னை, இராயபுரத்தில் ஒரு மீன்வளப் பயிற்சி நிலையமும், மீன்வளர்ப்புத் தொழில்நுட்பங்களில் பல்வேறு பயிற்சிகள் வழங்க காஞ்சிபுரம் மாவட்டம் முட்டுக்காட்டிலுள்ள மீன்வளப் பல்கலைக்கழக வளாகத்தில் பயிற்சி மையமும், 13 கோடியே 80 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

8. தமிழ்நாடு மீன்வளப் பல்கலைகழகத்தின், சென்னையிலுள்ள வாணியஞ்சாவடி முதுகலை பட்ட மேற்படிப்பு வளாகத்தில் இந்தியாவிலேயே முதன் முறையாக, ‘மீன்வள வணிக மேலாண்மை’ (MBA in Fisheries Enterprises Management) முதுகலைப் பட்டப்படிப்பு அறிமுகப்படுத்தப்பட்டு, ஆண்டு தோறும் 40 மாணவர்கள் நடப்பாண்டிலிருந்து சேர்க்கப்படுவார்கள். மேலும், மத்திய அரசின் உயிர் தொழில்நுட்பத் துறையின் உதவியுடன், கடல்சார் உயிர் தொழில்நுட்ப (Marine Biotechnology) முதுகலைப் பட்டப்படிப்பு தொடங்கப்பட்டு 12 மாணவர்கள் சேர்க்கப்படுவார்கள். இவை தவிர, இந்தியாவிலேயே முதன்முதலாக, ‘மீன்வள மருந்தியலில்’ (Fisheries Pharmacology) முதுகலைப் பட்டப்படிப்பும் தொடங்கப்படும். இந்த நிலையத்தில் நவீன நூலகம், அதி நவீன ஆய்வுக் கூடங்கள் மற்றும் ஆராய்ச்சியினை மேற்கொள்ள உயிரணு மரபியல், மூலக்கூறு உயிரியல், மரபுசங்கிலி தொடர் வேதிவினை, நொதியியல்,நுண்ணுயிரியல் மற்றும் உயிர்–வேதியியல் ஆய்வகங்கள் உருவாக்கப்படும். இந்த மீன்வள முதுநிலை பட்டப்படிப்புகளுக்கான கூடுதல் கல்விக் கூட வசதிகள் 6 கோடியே 35 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஏற்படுத்தப்படும்.

9. கன்னியாகுமரி மாவட்டம், மணக்குடி மீனவ கிராமத்தில், பழையாறு ஆறு, கடலில் சங்கமிக்கும் இடத்தில் மீன்வளத் துறைக்குச் சொந்தமான 10 ஏக்கர் பரப்பளவு கொண்ட மீன் பண்ணை அமைந்துள்ள பகுதியில், சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் விதமாக, நடப்பாண்டில் மீன் வளர்ப்பு குளம், படகு சவாரி வசதிகள், நடைப் பயிற்சிக்கான நடைபாதை தளம், புல்வெளி, வண்ண மீன் காட்சியகம், குழந்தைகள் விளையாட்டுப் பகுதி மற்றும் உணவக வசதிகளுடன் மணக்குடி சூழியல் பாதுகாப்பு பூங்கா 10 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும்.

**10.** மீன்வளத் துறையால் சேத்துப்பட்டு ஏரியில் அமைக்கப்பட்டிருக்கும் பொழுதுபோக்கு தூண்டில் மீன்பிடிப்பு மற்றும் பசுமைப் பூங்காவிற்கு வரும் பார்வையாளர்களின் தேவைக்காக தற்போது அமைக்கப்பட்டுள்ள ஒரு பன்னடுக்கு வாகன நிறுத்தகம் **9** அடுக்குகள் கட்டுவதற்கு வடிவமைக்கப்பட்டு, **5** அடுக்குகள் மட்டும் கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. இதன் அருகில் அமைக்கப்பட்டு இருக்கும் கீழ்ப்பாக்கம் மெட்ரோ இரயில் நிலையத்தினைப் பயன்படுத்தும் பயணிகளின் வாகன நிறுத்தத் தேவைகளையும் கருத்தில் கொண்டு, சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்துடன் இணைந்து தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழகத்தின் மூலம் விரிவான ஆய்வு மேற்கொண்டு, இரு நிறுவனங்களும் வருவாயினை பகிர்ந்து கொள்ளும் வகையில் கூடுதல் தளங்கள் கட்டப்படும்.

**11.** வண்ணமீன்கள் வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள வணிகர்களை ஒருங்கிணைத்து, சர்வதேச அளவில் வண்ணமீன்கள் வர்த்தகத்தை மேம்படுத்திடும் விதமாக, வண்ணமீன்கள் வளர்ப்பு சார்ந்த அனைத்து பொருட்களும் ஒரே இடத்தில் கிடைக்கும் வகையில், தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக் கழகத்தின் மூலம், பொதுமக்கள் மற்றும் தொடர்புடைய வர்த்தகர்களை ஈர்க்கும் பொழுதுபோக்கு வசதிகளுடன் கூடிய தேசிய வண்ணமீன் வானவில் பேரங்காடி சென்னை மாதவரத்தில் **3** கோடியே **50** இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்படும்.

✵ ✵ ✵

# கிராமப்புற பெண் கல்வி ஊக்குவிப்புத் திட்டத்தில் பயன்பெறும் பயனாளிகளின் ஆண்டு வருமான உச்சவரம்பு ரூ.72,000 ஆக உயர்வு!

அறிவிப்பு எண் : 21 14.07.2017

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பிற்படுத்தப்பட்டோர், மிக பிற்படுத்தப்பட்டோர், சீர் மரபினர் மற்றும் சிறுபான்மை நலத்துறை அறிவிப்புகளை இம்மாமன்றத்தில் அறிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

1. பொருளாதார மேம்பாட்டு திட்டத்தின் கீழ், ஆண்டு வருமானம் கிராமப்புறங்களில் 40,000/– ரூபாய்க்கு மிகாமலும், நகர்ப்புறங்களில் 60,000/– ரூபாய்க்கு மிகாமலும் உள்ள பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பினருக்கு விலையில்லா வீட்டுமனைகள், தையல் இயந்திரங்கள் மற்றும் சலவைப் பெட்டிகள் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் அரசால் தொடர்ந்து ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் காட்டிய வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு, இத்திட்டத்தின் கீழ், அதிக பயனாளிகள் பயனடையும் வகையில், தற்போது உள்ள கிராமப்புற மற்றும் நகர்ப்புற பயனாளிகளின் ஆண்டு வருமான உச்சவரம்பு 72,000 ரூபாயாக உயர்த்தப்படும்.

2. கிராமப்புற பெண் கல்வி ஊக்குவிப்புத் திட்டத்தின் கீழ், பயன் பெறும் மிக பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவியர்களின் பெற்றோர்களது ஆண்டு வருமான உச்சவரம்பு 25,000 ரூபாயிலிருந்து 72,000 ரூபாயாக உயர்த்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

# ரூ.437.96 கோடி செலவில், மாநில பெரும்பரப்பு வலையமைப்பின் மூன்றாம் கட்ட செயல்பாடுகள்!

அறிவிப்பு எண் : 22 14.07.2017

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழக அரசின் சார்பில், தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த அறிவிப்புகளை இந்த மாமன்றத்தில் வெளியிடுவதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

1. 'தமிழ்நாடு மாநில பெரும்பரப்பு வலையமைப்பு' என்பது, தேசிய மின்னாளுமைத் திட்டத்தின் கீழ் ஏற்படுத்தப்பட்டுள்ள மாநில மற்றும் மத்திய அரசுகளின் ஒரு பகிர்வுத் திட்டமாகும். இந்த வலையமைப்பு தமிழ்நாடு மின்னணு நிறுவனம் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த வலையமைப்பு இரண்டு படிநிலைகளை கொண்டு, முதல் நிலையில், மாநில தலைநகரத்துடன் மாவட்ட தலைநகரங்களும், இரண்டாம் நிலையில், மாவட்ட தலைநகரங்களுடன் வருவாய்க் கோட்ட அலுவலகங்கள், வட்டாட்சியர் அலுவலகங்கள் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலகங்களும் இணைக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு மாநில பெரும்பரப்பு வலையமைப்பின் இரண்டு கட்ட செயல்பாடுகள் முடிவடைந்த நிலையில், தற்போது மூன்றாம் கட்ட செயல்பாடுகள் 2017–2022 வரையிலான 5 ஆண்டு காலத்திற்கு 437 கோடியே 96 இலட்சம் ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இது அரசு

துறைகளுக்கும் பொதுமக்களுக்கும் பெரும்பயன் அளிக்கக் கூடியதாக அமையும்.

**2.** தமிழகத்தில் உள்ள ஒவ்வொரு மாவட்டத்திலும் “அம்மா இ–கிராமம்” என ஒரு கிராமம் தெரிவு செய்யப்பட்டு, அந்த கிராமத்திற்கு, தகவல் தொழில் நுட்பவியல் வசதியினைக் கொண்ட கம்பியில்லா ஹாட்ஸ்பாட் (WiFi Hotspot), திறன்மிகு தெரு விளக்குகள் (Smart Street Lighting), தொலைக்கல்வி (Tele Education), தொலை மருத்துவம் (Tele Medicine) போன்ற சேவைகள் வழங்கப்படும்.

தமிழ்நாடு அரசு கேபிள் டிவி மற்றும் தமிழ்நாடு மின்னணு நிறுவனங்களின் கூட்டாண்மை சமூகப் பொறுப்பு நிதியிலிருந்தும் (Corporate Social Responsibility Fund) மற்றும் அந்தந்தத் துறைகளின் திட்ட ஒதுக்கீட்டிலிருந்தும், தமிழ்நாடு மின்ஆளுமை முகமையின் மூலம் இத்திட்டம் செயல்படுத்தப்படும். இதன்மூலம் ஊராட்சி அளவில், இது வரை கிடைக்கப் பெறாத நவீன தொழில்நுட்ப அடிப்படையிலான சேவைகளை கிராமங்களுக்குக் கொண்டு செல்ல முடியும். அதாவது, மின்வகுப்பறைகள் மூலம் பிற இடங்களில் நடத்தப்படும் சிறப்பான பாடத் திட்டங்களைக் காணொலிக்காட்சி மூலமும், இணையவழி மூலமும் கிராமப் பள்ளிகளை அடையச் செய்யலாம். அதுபோன்றே, பெரிய நகரங்களில் உள்ள சிறப்பு மருத்துவர்களின் ஆலோசனைகளை, கிராமத்தில் இருந்து கொண்டே தொலைமருத்துவம் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

**3.** தமிழ்நாட்டிலுள்ள **12,524** கிராம ஊராட்சிகளை Optical Fibre மூலம் இணைத்து அரசின் பல்வேறு சேவைகள் பொதுமக்களுக்கு சென்று அடைய மத்திய மாநில அரசுகளுக்கு இடையேயான புரிந்துணர்வு ஒப்பந்தம் (Memorandum of

Understanding (MoU)) எனது முன்னிலையில் **25.04.2017** அன்று தலைமைச் செயலகத்தில் கையெழுத்திடப்பட்டது.

கிராமப்புற பகுதிகளில் செயல்படுத்தப்படும் மேற்கண்ட திட்டத்தின் பயன்கள் மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சிப் பகுதிகளையும் சென்றடைய Optical Fibre மூலம் இணைத்து, டிஜிட்டல் புரட்சியின் பயன்களை தமிழ்நாட்டிலுள்ள அனைவரும் பெற்றிடும் வகையிலும், அவரவர் இல்லங்களுக்கு அருகில் தமிழ்நாடு அரசின் பல்வேறு சேவைகளை இணையம் மூலம் பெறவும், நகர்ப்புற பகுதிகளிலும் Optical Fibre நெட்வொர்க் திட்டத்தை செயல்படுத்த அரசு முடிவெடுத்துள்ளது. இத்திட்டம் "தமிழ்நெட்" (TamilNet) என்று அழைக்கப்படும். இத்திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு தமிழ்நாடு அரசு கேபிள் டிவி மற்றும் தமிழ்நாடு மின்னணு நிறுவனம் போன்ற நிறுவனங்களிடமிருந்தும், பொது மற்றும் தனியார் கூட்டு முயற்சியிலும் செயல்படுத்தப்படும்.

✵ ✵ ✵

# ரூ.13.87 கோடி செலவில், 11 ஆதிதிராவிடர் நல விடுதிகளுக்கு சொந்தக் கட்டடங்கள்!

அறிவிப்பு எண் : 23 19.07.2017

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் இந்த அரசின் சார்பாக ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேலும் மேம்படுத்தும் வகையில், கீழ்க்காணும் அறிவிப்பினை இந்த மாமன்றத்தில் அறிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

தமிழகத்தில் தற்பொழுது இத்துறையின் கீழ் 1,324 ஆதிதிராவிடர் நல விடுதிகளும், 42 பழங்குடியினர் விடுதிகளும், 314 அரசு பழங்குடியினர் உண்டு உறைவிடப் பள்ளிகளும் இயங்கி வருகின்றன. தமிழக அரசு எடுத்து வரும் பல்வேறு நடவடிக்கைகளின் பயனாக, பள்ளிகளில் இடை நிற்றல் கணிசமாக குறைந்துள்ளது. அதன் தொடர்ச்சியாக, நடப்பாண்டில் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வரும் 11 ஆதிதிராவிடர் நல விடுதிகளுக்கு 13 கோடியே 87 இலட்சம் ரூபாய் மதிப்பில் சொந்தக் கட்டடங்கள் கட்டப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

❋ ❋ ❋

# 908 வேட்டைத் தடுப்புக் காவலர்களுக்கு மாதாந்திர ஊதியம் ரூ.10,000 ஆக உயர்வு!

அறிவிப்பு எண் : 24 19.07.2017

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாடு வனத்துறையில் காடுகளின் உட்பகுதிகள் மற்றும் பாதுகாக்கப்பட்ட வனப் பகுதிகளில் வேட்டைத் தடுப்பு முகாம்கள் செயல்படுவதால், வேட்டையாடுதல் மற்றும் திட்டமிட்ட கடத்தல் போன்றவை கணிசமான அளவில் தடுக்கப்பட்டுள்ளது. இப்படிப்பட்ட கடினமான பணியில் ஈடுபட்டு வரும் 908 வேட்டை தடுப்புக் காவலர்களுக்கு தற்போது வழங்கப்படும் மாதாந்திரத் தொகுப்பு ஊதியம் 6,750/– ரூபாயிலிருந்து 10,000/– ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன்.

✵ ✵ ✵

# ரூ.28.61 கோடி செலவில், 3 புதிய அரசு தொழிற் பயிற்சி நிலையங்கள்!

அறிவிப்பு எண் : 25 19.07.2017

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாட்டில் தொழிலாளர்களின் நலன் மற்றும் உரிமைகளைப் பாதுகாக்கும் வகையில் நலத் திட்டங்கள் தீவிரமாக செயல்படுத்தப்பட்டும், சமூகப் பாதுகாப்புச் சட்டங்கள் உறுதியாக கண்காணிக்கப்பட்டும் வருகின்றன. மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தமிழ்நாடு கட்டுமானம் சார்ந்த தொழில்களில் பணிபுரியும் தொழிலாளர்களின் நலன் காத்திட, 1994ஆம் ஆண்டு தமிழ்நாடு உடலுழைப்பு தொழிலாளர்கள் (கட்டுமான தொழிலாளர்கள்) நலத் திட்டத்தினையும், தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நல வாரியத்தினையும் உருவாக்கினார்கள்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் காட்டிய வழியில் செயல்படும் அம்மாவின் அரசு சார்பாக, தொழிலாளர் நலன் சார்ந்த பின்வரும் திட்டங்களை இம்மாமன்றத்தில் அறிவிப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

1. அமைப்புசாரா தொழிலாளர்களின் குடும்பத்தினருக்கு அத்தொழிலாளர் இயற்கை மரணம் அடைந்தால், தற்போது வழங்கப்பட்டு வரும் உதவித் தொகை 15,000/– ரூபாயிலிருந்து 20,000/– ரூபாயாக உயர்த்தப்படும். இதே போன்று அமைப்புசாரா தொழிலாளர்களின் குடும்பத்தினருக்கு தற்போது வழங்கப்பட்டு

வரும் ஈமச் சடங்கு உதவித் தொகை 2,000/– ரூபாயிலிருந்து 5,000/– ரூபாயாக உயர்த்தப்படும்.

2. தமிழகத்தில் பொருளாதாரத்தில் பின்தங்கிய ஏழை, எளிய குடும்பத்தைச் சேர்ந்த மாணவ, மாணவியரின் நலனுக்காகவும், தொழிற்திறன் பெற்ற மனித வளத்தை பெருக்குவதற்காகவும், தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் தொழிற்பயிற்சி நிலையங்கள் (Industrial Training Institutes) செயல்பட்டு வருகின்றன. தற்போது தமிழகத்தில் 85 அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. நடப்பாண்டில் வேலூர் மாவட்டத்தில் வாணியம்பாடி, அணைக்கட்டு, குடியாத்தம், ஆலங்காயம், ஜோலார்பேட்டை ஆகிய வட்டாரப் பகுதி மாணவ, மாணவியர் பயன்பெறும் வகையில், வாணியம்பாடியிலும், ஈரோடு மாவட்டத்தில் கோபிசெட்டிபாளையம், சத்தியமங்கலம், நம்பியூர், அந்தியூர், பவானிசாகர், தாளவாடி ஆகிய வட்டாரப் பகுதி மாணவ, மாணவியர் பயன்பெறும் வகையில், கோபிசெட்டிப்பாளையத்திலும், திருவாரூர் மாவட்டத்தில் திருத்துறைப்பூண்டி, முத்துப்பேட்டை, மன்னார்குடி, திருவாரூர் மற்றும் தஞ்சாவூர் மாவட்டத்தில் சேதுபாவாசத்திரம், பேராவூரணி ஆகிய வட்டார பகுதி மாணவ, மாணவியர் பயன்பெறும் வகையில், கோட்டூரிலும் தலா 200 மாணவ மாணவியர் தொழிற்பயிற்சி பெறும் வகையில், விடுதியுடன் கூடிய 3 புதிய அரசு தொழிற் பயிற்சி நிலையங்கள் 28 கோடியே 61 இலட்சம் ரூபாய் செலவில் துவக்கப்படும்.

3. தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டம் என்பது ஒரு விரிவான சமூக பாதுகாப்பு திட்டமாகும். இத்திட்டத்தின் கீழ்,

தொழிலாளர் மற்றும் அவரது குடும்பத்தினருக்கு காப்புறுதி வசதியுள்ள நிறுவனத்தில் வேலையில் சேர்ந்த நாள் முதல் முழுமையான மருத்துவ வசதிகள் அளிக்கப்படுகின்றன. தமிழ்நாட்டில் 216 தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்கள் மற்றும் 10 தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளில் 2,093 படுக்கைகளோடு மருத்துவ சேவை அளிக்கப்பட்டு வருகிறது. தொழிலாளர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தினர் பயன்பெறும் வகையில், நடப்பாண்டில் ஒட்டன்சத்திரம், நெல்லியாளம், கள்ளக்குறிச்சி, சிதம்பரம், பவானி, குன்னூர், கீழ்குண்டா (ஊட்டி), பாப்பிரெட்டிப்பட்டி, அரவக்குறிச்சி, பூதலூர் ஆகிய பத்து இடங்களில் புதிய தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்கள் 12 கோடியே 41 இலட்சம் ரூபாய் செலவில் திறக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதன் மூலம் 31,699 தொழிலாளர்கள் பயன் பெறுவர்.

✵ ✵ ✵

# ரூ.85,047 கோடி மதிப்பீட்டில், 107.55 கி.மீ நீளத்தில் மூன்று மெட்ரோ இரயில் வழித்தடங்கள்!

அறிவிப்பு எண் : 26 19.07.2017

**மா**ண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் வழியில் செயல்படும் அம்மாவின் அரசின் சார்பாக திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை சார்ந்த கீழ்க்காணும் அறிவிப்புகளை இம்மாமன்றத்தில் வெளியிடுவதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

1. மெட்ரோ இரயில் திட்டத்தின், இரண்டாம் கட்டமாக 45.77 கி.மீ. நீளத்தில் மாதவரத்திலிருந்து சிறுசேரி வரையிலும், 17.12 கி.மீ. நீளத்தில் சென்னை புறநகர் பேருந்து நிலையத்திலிருந்து கலங்கரை விளக்கம் வரையிலும் மற்றும் 44.66 கி.மீ. நீளத்தில் மாதவரத்திலிருந்து சோழிங்கநல்லூர் வரையிலும் மொத்தம் 107.55 கி.மீ. நீளத்தில் மூன்று மெட்ரோ இரயில் வழித்தடங்களை 85,047 கோடி ரூபாய் என்ற உத்தேச மதிப்பீட்டளவில் செயல்படுத்துவதற்கு மாநில அரசின் கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கப்பட்டு மத்திய அரசின் ஒப்புதலுக்காகவும், நிதியுதவிக்காகவும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதில் கலங்கரை விளக்கத்தில் இருந்து வடபழனி வழியாக சென்னை புறநகர் பேருந்து நிலையம் வரை அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ள நான்காவது வழித்தடத்தினை, விருகம்பாக்கம் மற்றும் வளசரவாக்கம் ஆகிய பகுதிகளில் ஆற்காடு சாலையில் அதிகரித்து வரும் போக்குவரத்து நெரிசலைக் கருத்தில்

கொண்டு, கலங்கரை விளக்கம் முதல் வடபழனி, போரூர் வழியாக பூந்தமல்லி வரை நீட்டிப்பு செய்ய அரசு முடிவெடுத்துள்ளது. இதற்கான விரிவான துணை திட்ட அறிக்கையை (Supplementary DPR) தயாரிக்கும் பணியை சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் மேற்கொள்ளும். இத்திட்டத்தினை செயல்படுத்துவதால் சுமார் 3,850 கோடி ரூபாய் கூடுதல் செலவாகும்.

2. சென்னையைத் தொடர்ந்து, கோயம்புத்தூர் மாநகரில் பெருகி வரும் போக்குவரத்து நெரிசலை தீர்க்கும் வகையில், புதிய மெட்ரோ இரயில் திட்டம் செயல்படுத்தப்படும். இதற்கான விரிவான சாத்தியக்கூறு / திட்ட அறிக்கையை தயாரிக்கும் பணியினை சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் மேற்கொள்ளும். இத்திட்டத்திற்கு மத்திய அரசின் மூலமாக ஜெர்மன் நிதி நிறுவனமான கே.எப்.டபுள்யூ (KFW)-விடம் நிதியுதவி பெறப்படும்.

3. மாநிலச் சமச்சீர் வளர்ச்சி நிதி திட்டத்தின் கீழ், தமிழ்நாட்டில் உள்ள மலை மற்றும் வனப் பகுதிகளில் வாழும் மிகவும் பின்தங்கிய மலைவாழ் மக்களின் வாழ்க்கை தரத்தினை மேம்படுத்துவதற்காக ஒரு திட்டம் வகுக்கப்படும். அடிப்படை வசதிகளை அளிப்பதில் உள்ள ஏற்றத்தாழ்வுகளை நீக்குதல், குறைந்த மக்கட்தொகை கொண்ட குக்கிராமங்களை இணைக்க சாலை மற்றும் போக்குவரத்து வசதி செய்தல், பல்லுயிர் பாதுகாப்பு, அழிக்கப்பட்ட மற்றும் வளம் குன்றிய வனப் பகுதிகளை பசுமைமயமாக்கல், மண் அரித்தலை தடுத்தல் மற்றும் நீர்வளத்தினை மேம்படுத்துதல், வேளாண்மை மற்றும் அதைச் சார்ந்த தொழில்களை மேம்படுத்தி, தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல், சுற்றுச்சூழல் குறித்த கல்வி, நீராதாரத்தினை மேம்படுத்தல் ஆகியவை இத்திட்டத்தின் நோக்கங்களாகும். இத்திட்டம் மாநிலத் திட்டக் குழுவால் செயல்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

✵ ✵ ✵



# தொழிலாளர் நலனுக்காக போராடும் சிறந்த ஒருவருக்கு 'சிங்காரவேலர்' விருது!

அறிவிப்பு எண் : 27 19.07.2017

**த**மிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை சார்பாக கீழ்க்கண்ட அறிவிப்புகளை இம்மாமன்றத்தில் அறிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

1. மதுரை, உலகத் தமிழ்ச் சங்கத்தில் தமிழர்களின் உயரிய பண்பாட்டுப் பாரம்பரியத்தினைப் பறைசாற்றும் வகையில், தமிழர் பண்பாட்டுப் பாரம்பரிய அருங்காட்சியகம் 50 கோடி ரூபாய் மதிப்பில் நிறுவப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்கென இந்த ஆண்டு முதற்கட்டமாக, 15 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்படும்.

2. சிந்தனைச் சிற்பி சிங்கார வேலர் (18.02.1860 – 11.02.1946) ஆங்கில ஏகாதிபத்தியத்துக்கு எதிராக தம் வழக்கறிஞர் தொழிலையே துறந்த பெருந்தகை, தொழிலாளர்களுக்காகக் குரல் கொடுத்தவர், அவர்கள் நலனுக்காகப் பல போராட்டங்களில் பங்கேற்றவர், இந்திய பொதுவுடைமை இயக்கத்தின் தந்தை, இந்தியத் தொழிற்சங்க இயக்கத்தின் முன்னோடி, அறிவியல் தமிழறிஞர், பொதுச் சொத்துகள் மக்கள் நலனுக்காகப் பயன்பட வேண்டும் என்கிற பொதுவுடைமைக் கருத்தை வலியுறுத்தியவர், "பொதுவுடைமை இயக்கத்தின் விதிகள் மனித நேயத்துக்கு இசைவானது" என்று வலியுறுத்தியவர்.

அவர்தம் வழியில், தமிழில் அறிவியல் கருத்துக்களை நூலாக எழுதுபவர்களிலும், சமுதாய முன்னேற்றத்திற்காகவும், சமத்துவக் கொள்கைக்காகவும், தொழிலாளர் நலனுக்காகவும்,

போராடுபவர்களிலும் சிறந்த ஒருவருக்கு தமிழ் வளர்ச்சித் துறை சார்பாக 'சிங்காரவேலர் விருது' ஆண்டுதோறும் சித்திரை தமிழ் புத்தாண்டு விருதுகளோடு வழங்கப்படும்.

விருதுத் தொகையாக ஒரு இலட்சம் ரூபாயும், ஒரு சவரன் தங்கப்பதக்கமும், தகுதியுரையும் வழங்கிப் பொன்னாடை அணிவித்து, விருதாளர் சிறப்பிக்கப்படுவார் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

3. ஜனநாயகத்தின் 4ஆவது தூணாக விளங்குபவர்கள் பத்திரிகையாளர்கள். காலம் நேரம் பாராமல் உழைக்கின்ற பத்திரிகையாளர்கள், தாங்கள் ஓய்வு பெற்ற பின், மன நிறைவோடும், மன அமைதியோடும் வாழ்ந்திட வேண்டும் என்பதில் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் மிகுந்த அக்கறை கொண்டிருந்தார்கள். அதனால்தான் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் 2011இல் ஆட்சிப் பொறுப்பேற்ற போது 5,000/– ரூபாயாக வழங்கப்பட்டு வந்த பத்திரிகையாளர்களின் மாதாந்திர ஓய்வூதியத்தை 8,000/– ரூபாயாகவும், அதே போல, அவர்களது குடும்பத்திற்கு வழங்கப்பட்டு வந்த குடும்ப ஓய்வூதியத்தை 2,500/– ரூபாயிலிருந்து 4,750/– ரூபாயாகவும் உயர்த்தி வழங்கினார்கள். மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் அம்மாவின் அரசு, இன்றைய பொருளாதாரச் சூழலையும், பத்திரிகையாளர் நலனையும் கருத்தில் கொண்டு, பத்திரிகையாளர்களின் ஓய்வூதியம் 8,000/– ரூபாயிலிருந்து 10,000/– ரூபாயாகவும், அவர்களது குடும்பத்திற்கு வழங்கப்படும் குடும்ப ஓய்வூதியம் 4,750/– ரூபாயிலிருந்து 5,000/– ரூபாயாகவும் உயர்த்தி வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

✵ ✵ ✵

# ரூ.20 கோடி செலவில் திருப்பணி செய்யப்படும் கிராமப்புற திருக்கோயில்களின் எண்ணிக்கை 2,000 ஆக உயர்வு!

அறிவிப்பு எண் : 28 19.07.2017

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இந்துக்கள் சீனாவில் உள்ள மானசரோவர் மற்றும் நேபாளத்தில் உள்ள முக்திநாத் திருத்தலங்களுக்குச் சென்று வழிபட, மானியம் வழங்கும் திட்டத்தை மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் கடந்த 2011ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பேற்ற பின் துவக்கி வைத்தார்கள்.

1. இந்த இரு யாத்திரைகளையும் மேற்கொள்ள தமிழகத்தில் உள்ள யாத்ரீகர்களிடமிருந்து நல்ல வரவேற்பு உள்ளதால், மானியம் பெறும் பயனாளிகளின் எண்ணிக்கை 500–லிருந்து 1,000ஆக உயர்த்தப்படும். நடப்பு நிதியாண்டில் இதனால் அரசுக்கு ஒரு கோடியே 25 இலட்சம் ரூபாய் கூடுதல் செலவு ஏற்படும்.

2. இந்து சமய அறநிலையத் துறை ஆளுகையின் கீழ் இல்லாத ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வசிக்கும் பகுதிகளில் உள்ள திருக்கோயில்களின் புனரமைப்பு திருப்பணிகளுக்கு நிதி வழங்கும் நோக்குடன், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் திருக்கோயில் ஒன்றுக்கு ஒரு இலட்சம் ரூபாய் வீதம் நிதியுதவி வழங்கி வந்தார்கள். 2017–2018ஆம் ஆண்டில்,

கிராமக் கோயில்களைப் புதுப்பிப்பதற்காக கோயில் ஒன்றிற்கு தலா ஒரு இலட்சம் ரூபாய் வழங்குவதுடன், இத்திட்டத்தில் பயன்பெறும் கோயில்களின் எண்ணிக்கை 500–லிருந்து 1,000 ஆக இரட்டிப்பாக்கப்படும் என நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டது.

இத்திட்டத்திற்கு கிராமப்புறங்களில், குறிப்பாக, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வசிக்கும் பகுதிகளிலிருந்து அதிக கோரிக்கைகள் வந்த வண்ணம் உள்ளதால், திருப்பணி செய்யப்படும் இத்தகைய கிராமப்புற திருக்கோயில்களின் எண்ணிக்கை 2,000 ஆக உயர்த்தப்படும். இத்திட்டத்திற்கு நடப்பாண்டில் திருக்கோயில் நிதியிலிருந்து 20 கோடி ரூபாய் செலவிடப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

❋ ❋ ❋



# போக்குவரத்து தொழிலாளர்களுக்கு ஓய்வுக்கால பலன்களுக்கான தொகை ரூ.2,147.39 கோடி வழங்கப்பட்டுள்ளது!

அறிவிப்பு எண் : 29 10.01.2018

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மனித வாழ்வின் முன்னேற்றத்திற்கும், பொருளாதார மேம்பாட்டிற்கும், முக்கியமானதாக விளங்குவது போக்குவரத்து வாகனங்கள் என்று சொன்னால் அது மிகையாகாது. இதில், சாலைப் போக்குவரத்து முக்கியப் பங்கு வகிக்கிறது.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள், போக்குவரத்துத் துறையின் மேம்பாட்டிற்காகவும், போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தினரின் நலனை மேம்படுத்திடவும், எண்ணற்ற திட்டங்களை வகுத்து செயல்படுத்தினார்கள்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு போக்குவரத்துக் கழகங்களின் நிதிப் பற்றாக்குறையை கருத்தில் கொண்டு, போக்குவரத்துக் கழகங்களுக்கு முன்னுரிமை கொடுத்து, 2011ஆம் ஆண்டு முதல் 2017ஆம் ஆண்டு வரை, அதிகப்படியான நிதி வழங்கி வந்துள்ளது.

கடந்த காலங்களில், அதிகரித்து வந்த செலவினத்தை ஈடு செய்வதற்கு ஏற்ப, நிரந்தர நிதி ஆதாரத்தை ஏற்படுத்தாததால், போக்குவரத்துக் கழகங்கள் பெரும் நஷ்டத்தில் இயங்கின.

இச்சூழ்நிலையில், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில், போக்குவரத்துக் கழகங்களின் நிதி நிலைமையை சரி செய்யும் பொருட்டு, நிதி ஆதாரத்தை ஏற்படுத்துவதற்கான உத்திகளை கடைபிடித்ததோடு, அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு கடந்த 2011 முதல் இந்நாள் வரை, டீசல் விலை ஏற்றத்திற்கான தொகை 2,848.36 கோடி ரூபாயை அரசு மானியமாக வழங்கியுள்ளது. மேலும், மாண்புமிகு அம்மாவின் அரசு பொது மக்களின் நலன் கருதி, போக்குவரத்துக் கட்டணத்தை குறைந்த அளவிலேயே பராமரித்து வருகிறது.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, கடந்த 2011ஆம் ஆண்டு முதல் 2017ஆம் ஆண்டு வரை, அரசு போக்குவரத்துக் கழகங்களின் நிதிப் பற்றாக்குறையை ஈடு செய்திட, 5,138.57 கோடி ரூபாய் அளவிற்கு நிதி வழங்கியுள்ளது. 2017–2018ஆம் ஆண்டில் மட்டும், ஓய்வு பெற்ற போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்களுக்கு நிலுவைத் தொகை வழங்கிட 1,397.39 கோடி ரூபாயும், தற்போது பணிபுரியும் தொழிலாளர்களுக்கு அகவிலைப்படி உள்ளிட்ட நிலுவைத் தொகைக்காக, 291.99 கோடி ரூபாயும் தமிழ்நாடு அரசு வழங்கியுள்ளது.

போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்களின் நலனில் அக்கறை கொண்ட மாண்புமிகு அம்மாவின் அரசு, போக்குவரத்துக் கழகங்களில் 30.11.2017 வரை பணியாற்றி ஓய்வு பெற்ற தொழிலாளர்களுக்கு வழங்க வேண்டிய நிலுவைத் தொகைக்காக 750 கோடி ரூபாயினை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு வழங்கும் என்பதை இம்மாமன்றத்தில் அறிவிப்பதில் பெருமகிழ்ச்சி கொள்கிறேன். மேலும், இந்த அறிவிப்பின் மூலம் வழங்கப்படும் 750 கோடி ரூபாய் தொகையானது, போக்குவரத்துக் கழக ஓய்வு

பெற்ற தொழிலாளர்களுக்கு பொங்கல் பண்டிகைக்கு முன்னதாக அளிக்கப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்போது, அரசால் வழங்கப்படும் இத்தொகையுடன் சேர்த்து, போக்குவரத்துக் கழக ஓய்வு பெற்ற தொழிலாளர்களுக்கு வழங்க வேண்டிய ஓய்வு காலப் பலன்களுக்காக மட்டும், இதுவரை தமிழ்நாடு அரசு **2,147.39** கோடி ரூபாய் வழங்கியுள்ளது என்பதையும் இம்மாமன்றத்திற்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆகவே, போக்குவரத்துக் கழக தொழிலாளர்களின் கோரிக்கைகள் பலவற்றை ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள நிலையில், போராட்டத்தில் ஈடுபட்டு வரும் தொழிலாளர்கள், பொது மக்களின் நலன் கருதி, தங்கள் போராட்டத்தை உடனடியாக கைவிட்டு, பணிக்குத் திரும்புமாறு இந்த அவையின் வாயிலாக கேட்டுக் கொள்கிறேன்.

✵ ✵ ✵



# தமிழ்நாடு உதயமான சனவரி 14ஆம் நாளினை தமிழ்நாடு பொன் விழா ஆண்டாக கொண்டாட தமிழ்நாடு அரசு முடிவு!

அறிவிப்பு எண் : 30 11.01.2018

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாட்டின் வரலாறும், தமிழ் மக்களின் பண்பாடும், மிகவும் தொன்மை வாய்ந்தவை ஆகும்! பூமியில், முதல் மனிதன் தோன்றியது தமிழ் பேசும் நிலத்தில் தான் என்று மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் சொல் ஆராய்ச்சிகளால் விளக்கியுள்ளார்.

"வட வேங்கடம் தென்குமரி ஆயிடைத்
தமிழ்கூறு நல்லுலகம்"

என்று, வடக்கே வேங்கட மலை முதல், தெற்கே குமரி வரை, 'தமிழ்நாடு' சீரோடும் சிறப்போடும் விளங்கியதை வரையறுத்துச் சொல்கிறார்!

தொடர்ந்து, இருபதாம் நூற்றாண்டில் இணையில்லாத் தமிழ்ப்பெருங்கவியாய் விளங்கிய மகாகவி பாரதியார்,

"வள்ளுவன் தன்னை உலகினுக்கே – தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு" என்றும்

"கல்வி சிறந்த தமிழ்நாடு – புகழ்
கம்பன் பிறந்த தமிழ்நாடு" என்றும்

'தமிழ்நாடு' என்ற உணர்வோடு பாடி அன்றைக்கே பரவசப்படுத்தினார்.

"நம் நாடு தமிழ்நாடு,
நாமெல்லாம் தமிழ் மக்கள்"

என்று புரட்சிக்கவிஞர் பாவேந்தர் பாரதிதாசனார் ஆணித்தரமாக உரைத்தார்.

இவ்விதமாக, ஆளுமைத் திறம்கொண்ட தமிழ்ப் புலவர்கள் 'தமிழ்நாடு' என்று வாயாரப் பாடி மனதார அழைத்த நாடு, நம் தமிழ்நாடு!

நம்மோடு ஆந்திரம், கருநாடகம், கேரளம் இணைந்து, 'பிரசிடன்சி ஆப் மெட்ராஸ்' என்று ஆங்கிலத்திலும், 'சென்னை மாகாணம்' என்று தமிழிலும் அழைக்கப்பட்டு வந்த நிலையில், இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின்படி, மாநில பிரிவினை ஏற்படுத்தப்பட்ட பிறகு, சென்னை மாகாணம் என்னும் பெயரை மாற்றித் 'தமிழ்நாடு' எனப் பெயர் மாற்றப்படவேண்டும் என்று அன்றைக்கு ஆளுங்கட்சியாக இருந்த காங்கிரஸ் அரசின் முன்பாக **1956**ஆம் ஆண்டு, ஜூலையில், கோரிக்கையினை தியாகி சங்கரலிங்கனார் அவர்கள் முன் வைத்தார்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் தலைமையிலான அரசு அமைந்தவுடன், **1967–**ஆம் ஆண்டு அப்போதைய "சென்னை மாகாணத்திற்கு" "தமிழ்நாடு" என்று பெயர் சூட்ட, சட்டமன்றப் பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதன் தொடர்ச்சியாக, **1969–**ஆம் ஆண்டு ஜனவரி மாதம் **14**ஆம் நாள் "தமிழ்நாடு" என்று நமது மாநிலத்திற்கு பெயர் சூட்டப்பட்டது.

பேரறிஞர் அண்ணா அவர்கள் 2ஆவது உலகத் தமிழ் மாநாட்டினையும், புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் 5ஆவது உலகத் தமிழ் மாநாட்டினையும், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் 8ஆவது உலகத் தமிழ் மாநாட்டினையும் சிறப்பாக நடத்தி, தமிழின் பெருமையையும், தொன்மையையும் உலகறியச் செய்தார்கள்.

புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் தமிழுக்கென்று தனிப் பல்கலைக்கழகத்தினை தஞ்சாவூரில் நிறுவினார்கள். மதுரையில் உலகத் தமிழ்ச் சங்கத்தை தோற்றுவித்தார்கள்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தமிழுக்கு மேலும் பெருமை சேர்க்கும் வகையிலும், தமிழர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்கும் வகையிலும், சித்திரை முதல் நாளை மீண்டும் தமிழ் புத்தாண்டாக அறிவித்தார்கள். உலக நீதி நூலான திருக்குறளை அதிக மக்கள் பேசும் சீன, அரபு மற்றும் கொரிய மொழிகளிலும், பாரதியார், பாரதிதாசன் பாடல்கள் மற்றும் ஔவையாரின் “ஆத்திச் சூடி” ஆகியவை சீன மற்றும் அரபு மொழிகளிலும், மொழி பெயர்த்து தமிழர்களின் பெருமைகளை உலகறியச் செய்தார்கள். தமிழ் அறிஞர்களை சிறப்பிக்கும் வகையில்

“முதலமைச்சர் கணினித் தமிழ் விருது”,
“தமிழ்த் தாய் விருது”
“தமிழ்ச் செம்மல் விருது”
“அம்மா இலக்கிய விருது”

போன்ற 55 விருதுகளை அறிவித்தார்கள்.

தமிழுக்கு மேலும் மகுடம் சூட்டும் வகையில், தமிழ் மொழியின் தொன்மை, இலக்கியம், இலக்கணம் மற்றும் பண்பாடு தொடர்பான ஆய்வுகள் மேற்கொண்டு, தமிழ் மொழியின் சிறப்பினை

ஆவணப்படுத்தி உலகெங்கும் கொண்டு செல்ல, அமெரிக்காவில் உள்ள 'ஹார்வேர்டு பல்கலைக்கழகத்தில்' தமிழ் இருக்கை அமைத்திட மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் அம்மாவின் அரசு, 10 கோடி ரூபாய் வழங்கி உள்ளது.

வரும் ஜனவரி 14ஆம் நாள், வரலாற்று சிறப்பு மிக்க நமது மாநிலம் "தமிழ்நாடு" என்ற பெயரோடு 50ஆவது ஆண்டில் காலடி எடுத்து வைப்பதை முன்னிட்டு "தமிழ்நாடு" பொன் விழா ஆண்டாக மாண்புமிகு அம்மாவின் அரசு கொண்டாட முடிவு செய்துள்ளது என்பதை இந்த மாமன்றத்தில் தெரிவிப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

நம் கண் போன்றத் தமிழ் மொழி மற்றும் தமிழர்களின் பெருமையை பறை சாற்றும் வகையில், கலை, விளையாட்டு, கட்டுரை, கவிதை, பேச்சுப் போட்டி போன்ற நிகழ்ச்சிகள் சென்னையிலும், அனைத்து மாவட்டங்களிலும் சிறப்பாக நடத்தப்படும். தமிழ் ஆராய்ச்சியில் சிறந்து விளங்கும் இளம் தமிழ் ஆய்வாளர்கள் தெரிவு செய்யப்பட்டு, சென்னையில் நடைபெறும் நிறைவு விழாவில் இவர்கள் அனைவரும் சிறப்பிக்கப்படுவார்கள்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் அம்மாவின் அரசு, "தமிழுண்டு, தமிழ் மக்களுண்டு - இன்பத் தமிழுக்கு நாளும் செய்வோம் நல்ல தொண்டு" என்ற பாவேந்தரின் வரிகளுக்கேற்ப, தமிழ் மொழியையும், தமிழ்நாட்டையும் கண்ணின் மணி போல தொடர்ந்து காத்து வரும் என்பதை இந்த மாமன்றத்தில் பெருமையோடு தெரிவித்துக் கொண்டு அமைகின்றேன்.

✵ ✵ ✵

## 08.01.2018 அன்று சட்டமன்றத்தில் மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரையின் மீது நடைபெற்ற விவாதத்திற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்களின் பதிலுரை – 12.01.2018

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நூறாண்டு பேசும் – ஓராண்டு சாதனை! சாதனை புரிந்த ஈராண்டு – சரித்திரம் பேசும் பல்லாண்டு! மூன்றாண்டு ஆட்சி – முழுமையான வளர்ச்சி! நாடு போற்றும் – நான்காண்டு ஆட்சி! ஐந்தாண்டு ஆட்சி – அளவில்லா மாட்சி! அதற்கு முத்தாய்ப்பாக 32 வருடங்களுக்குப் பிறகு மீண்டும் தொடர்ந்து மலர்ந்தது எங்கள் அம்மாவின் ஆட்சி.

நல்லாட்சி நல்கிய மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், மாண்புமிகு துணை சபாநாயகர் அவர்களுக்கும், மாண்புமிகு எதிர்கட்சி தலைவர், எதிர்கட்சி துணைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு கொறடா அவர்களுக்கும், கழகத்தின் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், எனது மனமார்ந்த புத்தாண்டு வாழ்த்துக்கள் மற்றும் பொங்கல் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

“நானே போடப் போறேன், சட்டம்
பொதுவில் நன்மை புரிந்திடும் திட்டம்
நாடு நலம் பெறும் திட்டம்”

என்று மாண்புமிகு பொன்மனச் செம்மல், மக்கள் திலகம், நூற்றாண்டு விழா நாயகன் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள், நாட்டுக்கு நலம் பயக்கும் பல தொலைநோக்குத் திட்டங்களை வகுத்து செயல்படுத்தினார்கள்.

மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்களின் வழியில் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள்,

‘மக்களுக்காகவே திட்டங்கள்;
திட்டங்களுக்காக மக்கள் அல்ல’

என்று ஆட்சியாளர்களுக்கான புதிய இலக்கணத்தை வகுத்து, அவ்வழியில் மக்கள் நலத் திட்டங்களை செயல்படுத்தி, தமிழ்நாட்டை முதன்மை மாநிலமாக மாற்றிய அரசியல் வித்தகராகத் திகழ்ந்தார்கள்.

‘இருந்தாலும், மறைந்தாலும் – பேர் சொல்ல வேண்டும்,
இவர் போல யாரென்று – ஊர் சொல்ல வேண்டும்’

என்ற புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் வைர வரிகளுக்கு உயிர் கொடுத்த தங்கத் தாரகை! உழைக்கும் மக்களின் ஒப்பற்ற தாய்! ஏழைகளின் துன்பங்களை நீக்கி நின்ற எங்கள் குல தெய்வம்! சரித்திரம் பேசும் சாதனைத் தலைவி! தனித்து நின்று களம் கண்ட புறநானூற்றுக் காவியம்! விழி அசைவில், கோடி மக்கள் வாழ்வில் துன்பம் தீர்த்து, விரல் அசைவில், கோடி மக்கள் வாழ்வில் இன்பம் சேர்த்த மக்கள் தலைவி! உலக நாடுகளும், வரலாற்று ஏடுகளும், ஓயாது உச்சரித்த உயிரெழுத்து! அடைத்து கிடந்த காவிரியை விடுவிக்க, யார் வருவார் – என காத்திருந்த தமிழ்நாட்டிற்கு, துணிவு, ஆற்றல், விடா முயற்சியால் காவிரியை மீட்ட காவிரித்

தாய்! முல்லைப் பெரியாறு முடங்கியபோது, எல்லைப் பகுதியில் ஏற்பட்ட பிரச்சினைகளின், பல்லைப் பிடுங்கிய சட்ட நாயகி! ஏங்கிய ஏழைகளின் பசி தீர்க்க, விலையில்லா அரிசி தந்த, ஈடு இணையற்ற தலைவி!

'மக்களால் நான், மக்களுக்காகவே நான்' என்று வாழ்ந்த வரலாற்று அதிசயம்! அமைதி! வளம்! வளர்ச்சி! என்ற தாரக மந்திரத்தோடு, தமிழ்நாட்டை வளர்ச்சிப் பாதையில் பீடு நடை போட வைத்த எங்கள் கலங்கரை விளக்கம்.

நோக்குமிடம் எல்லாம் நீக்கமற நிறைந்திருக்கும் எங்கள் அன்பின் வடிவம், ஆற்றலின் பிறப்பிடம், இணையில்லா நம்பிக்கை நட்சத்திரம் ஈகையின் அடையாளம், உழைப்பின் உருவம், ஊக்கத்தின் உதாரணம், அன்றும், இன்றும், என்றென்றும் மக்களின் மனதை விட்டு நீங்காத புரட்சித்தலைவி அம்மா அவர்களை மீண்டும் வணங்குகிறேன்.

மேதகு ஆளுநர் அவர்கள் இந்த மாமன்றத்தில் 08.01.2018 அன்று ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவித்து, மாண்புமிகு துணை சபாநாயகர் திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன் அவர்களால் முன்மொழியப்பட்டு, மாண்புமிகு உறுப்பினர் திரு. முருகுமாறன் அவர்களால் வழிமொழியப்பட்ட தீர்மானத்தின் மீது நடைபெற்ற விவாதத்தில், சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துக்களை எடுத்துக் கூறியுள்ளார்கள். ஆக்கபூர்வமான கருத்துகளை தெரிவித்தவர்கள், பாராட்டியவர்கள், குறை கூறியவர்கள் என அனைவருக்கும் எனது நன்றியினை முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன்.

"உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேரா தியல்வது நாடு"

என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாக்கிற்கு ஏற்றாற்போல், பள்ளிக் குழந்தைகளுக்கு சத்துணவில் பல வகை கலவை சாதமும்,

பெரியவர்களுக்காகவும், தொழிலாளர்களுக்காகவும் அம்மா உணவகம் அமைத்து பசியை போக்கியும், பிறந்த குழந்தைகளுக்கு அம்மா குழந்தை நல பரிசுப் பெட்டகம் வழங்கியும், அக்குழந்தைகள் நலனுக்கென தாய்ப்பால் வங்கிகள் ஏற்படுத்தியும், பள்ளிக்குச் செல்லும் வளரிளம் பெண்களுக்குச் சானிட்டரி நாப்கின் வழங்கியும், பிணியைப் போக்கும் வண்ணம் மக்கள் நல்வாழ்வுத் துறையில், ‘முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்’ வழங்கியும், மாநிலத்தில் சட்டம் ஒழுங்கு காக்கும் வகையில், காவல் துறைக்கு பல்வேறு வசதிகள் வழங்கியும்,

“தமிழகமே எனது குடும்பம்,
தமிழ்நாட்டு மக்களே என் பிள்ளைகள்,
தமிழக மக்களின் நலனே என் நலன்”

எனக்கூறி, மக்களின் மனதில் நீங்கா இடம் பெறும் வகையில் ஆட்சி செய்தார் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள்.

நாட்டின் வருங்காலமாக விளங்கும் பள்ளி மாணவர்களின் நலனில் அக்கறை கொண்ட மாண்புமிகு அம்மா அவர்கள், பள்ளிக் குழந்தைகளுக்கு வழங்கி வந்த 2 இணை சீருடையை 4 இணையாக உயர்த்தியும், புத்தகங்கள், கணித உபகரணங்கள், மிதி வண்டிகள் உட்பட பல்வேறு விலையில்லாப் பொருட்களையும், அறிவியல் அறிவு மேம்படுத்திக் கொள்ள, அவர்களுக்கு விலையில்லா மடிக் கணினியும் வழங்கினார்கள். தாலிக்குத் தங்கம், திருமண நிதியுதவி, 2ஆவது பசுமைப் புரட்சிக்கு சிறப்பு வேளாண் தொகுப்புத் திட்டம், அதிக அளவில் பால் கொள்முதல் செய்து வெண்மைப் புரட்சி, கிராமப்புற பொருளாதாரத்தை மேம்படுத்தும் விலையில்லா கறவை மாடுகள், 4 ஆடுகள் வழங்கும் திட்டம், பெண்களின் வேலைப் பளுவினைக் குறைக்க, விலையில்லா மிக்சி, கிரைண்டர் மற்றும் மின் விசிறி வழங்கும் திட்டம் – போன்ற திட்டங்களால் தமிழ்நாட்டில்

சமூகப் பொருளாதார புரட்சி ஏற்படுத்தியதோடு, பிற மாநிலத்திலும் தாக்கத்தை ஏற்படுத்தும் விதத்தில் செயல்படுத்தினார்கள்.

மின்சாரப் பிரச்சினையைக் கண்டு, தமிழ்நாட்டிற்கே வரத் தயங்கிய முதலீட்டாளர்களின் நிலையை மாற்றி, மின் மிகை மாநிலமாக தமிழ்நாட்டை மாற்றியே தீருவேன் என்று சபதமேற்று, பல்வேறு திட்டங்களின் மூலம் வெற்றி கண்டு, தமிழ்நாட்டை மிளிரச் செய்தவர் நமது புரட்சித்தலைவி அம்மா அவர்கள்.

தமிழ்நாட்டின் டெல்டா விவசாயிகளின் பாசன நீர்த் தேவையை பூர்த்தி செய்யும் வகையில், மாபெரும் சட்டப் போராட்டம் நடத்தி, காவிரி நதிநீர் பங்கீட்டிற்கான ஆணையை மத்திய அரசிதழில் வெளியிட வைத்தார்கள்.

ஏறி வரும் விலைவாசி உயர்வை ஏழை எளியவர்களும் சமாளிக்க, பண்ணைப் பசுமை காய்கறி திட்டம், ஊரகப் பகுதிகளின் முன்னேற்றத்தை உறுதி செய்ய தாய்த் திட்டம், பொது விநியோகத் திட்டத்தின் மூலம் அளிக்கப்படும் அத்தியாவசியப் பொருட்கள் கடத்தலை தடுக்கவும், முறையான விநியோகத்தை உறுதி செய்யவும் மின்னணு குடும்ப அட்டை வழங்குதல், அம்மா உணவகம், அம்மா மருந்தகம், அம்மா உப்பு, அம்மா குடிநீர், அம்மா சிமெண்ட் போன்ற காலத்தால் அழியாத பல்வேறு திட்டங்களை அளித்து, மக்கள் மனதில் நீங்கா இடம் பிடித்த மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் அம்மாவின் அரசு, அந்தத் திட்டங்களை எல்லாம் தொடர்ந்து செயல்படுத்தி வருவதோடு, மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழியில் பல்வேறு புதிய அறிவிப்புகளையும், குடிமராமத்து போன்ற புதிய திட்டங்களையும் செயல்படுத்தி வருகிறது.

மாண்புமிகு அம்மா அவர்கள் தேர்தல் அறிக்கையில் கூறியதற்கேற்ப, நான் பதவியேற்ற உடன் **500** மதுபானக்

கடைகளை உடனடியாக மூடவும், மீனவர்களுக்கென வீடுகள் கட்டுவதற்கு 85 கோடி ரூபாய்க்கு ஒப்புதல் வழங்கியும், பணிக்கு செல்லும் பெண்களுக்கு அம்மா இரு சக்கர வாகனம் மானிய விலையில் வழங்கவும், அதற்கான மானியத் தொகையை உயர்த்தி வழங்கவும், வேலை வாய்ப்பற்ற இளைஞர்களுக்கு உதவித் தொகையை உயர்த்தியும், கர்ப்பிணிப் பெண்களுக்கான உதவித் தொகையை 12,000 ரூபாயிலிருந்து 18,000 ஆயிரம் ரூபாயாக உயர்த்தியும் உத்தரவிட்டேன்.

கடும் வறட்சியால் பாதிப்புக்கு உள்ளான விவசாயப் பெருங்குடி மக்களுக்கு, வறட்சி நிவாரணமும், சென்ற ஆண்டு சென்னையில் ஏற்பட்ட பெருமழை காரணமாக, பாதிக்கப்பட்டவர்களை நேரில் சென்று ஆறுதல் தெரிவித்து, அவர்தம் இன்னல்களைப் போக்க, தற்போதுள்ள வரம்புகளைத் தளர்த்தி, அதிகப்படியான நிவாரணத் தொகையும் வழங்கப்பட்டுள்ளது. போராட்டத்தில் ஈடுபட்டு வந்த போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு நியாயமான ஊதிய உயர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டு, பல ஆண்டுகளுக்கும் மேலாக நிலுவையில் இருந்த ஓய்வு காலப் பலன்களை வழங்குவதற்கு பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதுடன், அவர்களது போராட்டமும் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

அரசு ஊழியர்களுக்கு, மத்திய அரசு பணியாளர்களுக்கு வழங்கப்பட்ட 7ஆவது ஊதியக் குழுவின் திருத்திய ஊதியமாக வழங்க 14 ஆயிரத்து 719 கோடி ரூபாயினை கூடுதல் செலவினமாக ஒதுக்கீடு செய்து, அதை வரலாறு காணாத வகையில் விரைந்து வழங்கி, இந்த அரசின் மீதான அவர்களது நம்பிக்கை உறுதிப்படுத்தப்பட்டது. 30 மாவட்டங்களில் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழாக்கள் நடத்தப்பட்டு, அந்தந்த மாவட்ட மக்களுக்கு நன்மை பயக்கும் வளர்ச்சிப் பணிகளுக்கான அறிவிப்புகளை வெளியிட்டு, அவற்றை

நடைமுறைப்படுத்த நடவடிக்கைகள் துரிதமாக எடுக்கப்பட்டு வருகிறது.

அமெரிக்காவில் உள்ள 'ஹார்வர்டு பல்கலைக் கழகத்தில்' தமிழ் இருக்கை அமைப்பதற்கு இந்த அரசின் சார்பில் 10 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

மக்களுக்குப் பயன் தரும் பல்வேறு கொள்கை முடிவுகளை எடுப்பதும், வளர்ச்சித் திட்டப் பணிகளை துரிதமாக செயல்படுத்துவதும் ஒரு மாநில முதலமைச்சரின் முக்கிய பணியாகும். அதை செவ்வனே செய்யும் வண்ணம், கடந்த 10 மாதங்களில் மட்டும் 4 ஆயிரத்து 903 கோப்புகள் எனது பரிசீலனைக்கு பிறகு உத்தரவிடப்பட்டுள்ளது என்பதையும், இன்றளவில், எனது அலுவலகத்தில் எந்த கோப்பும் நிலுவையில் இல்லை என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மழை, வெள்ளம், புயல், வறட்சி போன்ற இயற்கை பேரிடர்கள், அரசியல் திருப்பங்கள், போராட்டங்கள் என எது வந்தாலும், அவற்றுக்கெல்லாம் திடமாகத் தீர்வு காண்பது மட்டுமின்றி, கடின உழைப்பையும் மாண்புமிகு அம்மா அவர்களிடம் கற்றுக் கொண்டதன் பயனாக, பல பிரச்சினைகளுக்கு நல்ல முடிவு எட்டப்பட்டுள்ளது. இதன் மூலம், மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் இருந்து ஓரடியும் பிறழாமல் இந்த அரசு வெற்றி நடைபோடுகிறது என்பதை இந்த மாமன்றத்திற்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

வருங்கால இந்தியாவின் சிற்பிகளை உருவாக்கும் இடம் பள்ளிக்கூடங்கள். எனவே, பள்ளிக் கல்வித் துறைக்கு மாண்புமிகு அம்மாவின் வழியில் செயல்படும் இந்த அரசும் மிகுந்த முக்கியத்துவம் அளிக்கிறது. தமிழ்நாடு முழுவதும் 1,599 பள்ளிகள் கடந்த ஏழு ஆண்டுகளில் பல்வேறு நிலைகளில் தரம் உயர்த்தப்பட்டு உள்ளன.

பள்ளிக் கல்வியைப் பொறுத்த வரை, மாணவர்கள் பள்ளிக்குச் செல்வதற்கு இலவச பேருந்து அட்டை முதல் கல்லூரிக்குச் செல்ல உதவும் மடிக்கணினி வரை பல்வேறு வகையிலான விலையில்லாப் பொருட்களை மாண்புமிகு அம்மாவின் வழியில் வந்த இந்த அரசு தொடர்ந்து வழங்கி வருகிறது.

அவர்களின் நலனுக்கு மேலும் முக்கியத்துவம் அளிக்கும் வகையில் வெளியிடப்பட்ட, மதிப்பெண் அடிப்படையிலான தரப் பட்டியல் முறை ஒழிப்பு, குறுஞ்செய்தி மூலம் தேர்வு முடிவுகள், ஆண்டின் தொடக்கத்திலேயே பொதுத் தேர்வுக்கான கால அட்டவணை, மேல்நிலைக் கல்வியின் தரத்தினை உயர்த்த 11 ஆம் வகுப்பிற்கும் பொதுத் தேர்வு, 12 ஆம் வகுப்பு வரையிலான அனைத்து பாடத் திட்டங்களை மாற்றியமைக்க குழு அமைத்தல் போன்ற வரலாற்றுச் சிறப்பு மிக்க சீர்திருத்த நடவடிக்கைகள், பள்ளிக் கல்வித் துறையில், பெரும் புத்துணர்வையும், புரட்சியையும் ஏற்படுத்தியது என்றால், அது அம்மாவின் அரசினால் மட்டுமே சாத்தியம்.

மேலும், அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளி மாணவர்கள், பல்வேறு போட்டித் தேர்வுகளில் பங்கேற்கும் வகையில், அவர்களுக்கு சிறப்பு பயிற்சிகள் வழங்குவதற்கு பயிற்சி மையங்கள் துவங்கப்பட்டு உள்ளன. இது தவிர, பள்ளி மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு சிறப்பாகச் செயல்படும் பள்ளிகளுக்கு ‘புதுமைப் பள்ளி’ விருதும், குழந்தைச் சேர்க்கை மற்றும் பள்ளி மேலாண்மையில் சிறந்து விளங்கும் ஆசிரியர்களுக்கு ‘கனவு ஆசிரியர்’ விருதும் இந்த அரசு வழங்கவுள்ளது.

மாண்புமிகு அம்மாவின் அரசு உயர் கல்விக்கு கொடுத்த முன்னுரிமை மிகப்பெரிய பலன்களை அளிக்கத் தொடங்கி விட்டது. இதை நான் சொல்லவில்லை; மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் வெளியிட்ட அறிக்கை சொல்கிறது. நாட்டிலேயே உயர்

கல்வி சேர்க்கையில், தமிழ்நாடு 46.9 சதவீதம் என்ற அளவுடன் முதன்மை மாநிலமாக விளங்குகிறது. இது தேசிய சராசரியான 25.2 சதவீதத்தை விட இரண்டு மடங்கு கூடுதலாகும்.

மாண்புமிகு அம்மாவினுடைய 6 ஆண்டு கால ஆட்சியிலே, 4 பொறியியல் கல்லூரிகள், 16 பாலிடெக்னிக் கல்லூரிகள், 21 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், 24 பல்கலைக் கழக உறுபு கல்லூரிகள் என மொத்தம் 65 கல்லூரிகளை தமிழ்நாட்டிலே நிறுவியதன் விளைவுதான் இது, என்பதை பெருமையுடன் கூறிக் கொள்கிறேன். மாண்புமிகு அம்மாவின் வழியில் வந்த இந்த அரசும் 8 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், 3 பல்கலைக் கழக உறுப்பு கல்லூரிகள், ஒரு பாலிடெக்னிக் கல்லூரி ஆகியவற்றை நிறுவியுள்ளது.

தமிழ்நாட்டில் பின்தங்கிய மாவட்ட மக்களும் சட்டக் கல்வி பயில ஏதுவாக, விழுப்புரம், தருமபுரி மற்றும் இராமநாதபுரம் ஆகிய மூன்று மாவட்டங்களில் புதிய சட்டக் கல்லூரிகள் 6.81 கோடி ரூபாய் மதிப்பீட்டில் துவக்கப்பட்டு, 2017–2018 கல்வியாண்டு முதல் செயல்பட்டு வருகின்றன.

மக்களின் நலனில் அதிக அக்கறை கொண்ட மாண்புமிகு அம்மாவின் அரசு, மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம் மூலமாக கடந்த 10 மாதங்களில் மட்டும், 4 ஆயிரத்து 468 மருத்துவர்கள் உட்பட, 6 ஆயிரத்து 438 பணியாளர்களைத் தேர்வு செய்துள்ளது. இது தவிர, கடந்த ஓராண்டில் 620 கோடியே 69 இலட்சம் ரூபாய் செலவில், புதிதாக கட்டப்பட்ட மருத்துவமனை கட்டடங்கள் என்னால் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் கிராமத்திலுள்ள ஏழை, எளிய மக்களுக்குக் கூட, தரமான மருத்துவ வசதி கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

ஒரு விபத்து மனித வாழ்க்கையை புரட்டிப் போட்டு விடுகிறது. விபத்தால் பாதிக்கப்பட்ட மனிதனின் உறுப்புகள் இன்னொரு மனிதனுக்கு வாழ்வளிக்கிறது. இத்தகைய மனித உறுப்பு மாற்று அறுவை சிகிச்சையில் தமிழ்நாடு தான், இந்தியாவிலேயே முன்னோடி மாநிலமாகத் திகழ்ந்து வருகிறது. இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் தான் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவ மனைகளில் அதிக அளவிலான உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைகள் நடைபெற்று வருகின்றன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்காக 2015, 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளுக்கான முதன்மை மாநிலத்திற்கான தேசிய விருதுகளை தமிழ்நாடு வென்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. இது தவிர, இங்கிலாந்திலிருந்து வெளியாகும் ‘பிரிட்டிஷ் மெடிக்கல் ஜர்னல்’ என்ற பத்திரிகை, தமிழ்நாட்டின் உடல் உறுப்பு தான செயல்பாடுகள் பிற நாடுகளும் பின்பற்றத் தக்கதாக உள்ளது என புகழாரம் சூட்டியுள்ளது.

இந்திய மருத்துவக் குழுமத்தின் புதிய சீரமைப்புகளுக்கு தமிழ்நாடு அரசு தன்னுடைய கடுமையான எதிர்ப்பை தெரிவித்துள்ளது. இது தமிழ்நாட்டு மாணவர்களின் எதிர்காலத்தை கடுமையாக பாதிக்கும் என்பதாலும், மாநில அரசின் உரிமைகளை பறிப்பதாக உள்ளதாலும், இந்த புதிய சீரமைப்புகளுக்கு தமிழ்நாடு அரசு தன்னுடைய கடுமையான எதிர்ப்பை தொடர்ந்து தெரிவிக்கும் என்பதை உறுதிபட தெரிவித்துக் கொள்கிறேன்.

பொது விநியோகத் திட்டத்தின் கீழ் 330 கோடி ரூபாய் செலவில், கணினிமயமாக்க மின்னணு குடும்ப அட்டைகள் வழங்கும் திட்டம் கடந்த 01.04.2017 அன்று என்னால் துவங்கி வைக்கப்பட்டது. தற்போது மொத்தமுள்ள 1.94 கோடி குடும்ப அட்டைகளில், 1.88 கோடி குடும்ப அட்டைகளுக்கு, மின்னணு குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. இத்திட்டத்தின் மூலமாக போலி குடும்ப அட்டைகள் களையப்படுவதுடன், விநியோகத்தில் இருந்த முறைகேடுகளைத் தடுப்பதில் இவ்வரசு வெற்றி கண்டுள்ளது.

2016ஆம் ஆண்டு மாண்புமிகு அம்மா அவர்கள் தேர்தல் அறிக்கையில் அறிவித்தவாறு, 12 இலட்சத்து 2 ஆயிரத்து 75 சிறு, குறு விவசாயிகள் பயன் பெறும் வண்ணம், அவர்கள் பெற்ற பயிர்க் கடன், நடுத்தர கால வேளாண் கடன், பண்ணை சார்ந்த நீண்ட காலக் கடன்களை 5 ஆயிரத்து 318 கோடியே 73 இலட்சம் ரூபாய் அளவுக்கு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

பண மதிப்பு இழப்பு (Demonetizaton) நடவடிக்கையால், பாதிக்கப்பட்ட விவசாயிகள் பயிர்க் கடனை திரும்ப செலுத்த ஏதுவாக, குறுகிய கால கடன்களை, மத்திய காலக் கடன்களாக மாற்றி அமைத்ததோடு, 3 இலட்சத்து 48 ஆயிரத்து 323 விவசாயிகளுக்கு ஆயிரத்து 640 கோடியே 79 இலட்சம் ரூபாய்க்கு புதிய பயிர்க் கடன் வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் இரண்டாம் பசுமைப் புரட்சியை ஏற்படுத்தி, விவசாயப் பெருமக்களின் வருமானத்தை இருமடங்காக உயர்த்திட, மாண்புமிகு அம்மாவின் அரசு, வேளாண்மை துறைக்கு அரிய பல திட்டங்களை கொண்டு வந்தது. இதன் விளைவாக, மத்திய அரசின் அதிக விளைச்சலுக்கான 'கிரிஷி கர்மான் விருதினை' கடந்த 2011–2012, 2013–2014, 2014–2015 மற்றும் 2015–2016 ஆகிய 4 ஆண்டுகளில் தமிழ்நாடு அரசு தொடர்ந்து பெற்றுள்ளது என்பதை பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் 140 வருடங்களில் இல்லாத வரலாறு காணாத வறட்சி ஏற்பட்டதனால், மாநிலம் முழுவதும் வறட்சியால் பாதிக்கப்பட்டது என அறிவிக்கப்பட்டதோடு, 33 சதவீதத்திற்கும் அதிகமாக ஏற்பட்ட பயிர் இழப்புக்கு, இடுபொருள் மானியமாக 2 ஆயிரத்து 247 கோடி ரூபாய் நிதியை ஒதுக்கீடு செய்து, நேரடியாக 25 இலட்சத்து 35 ஆயிரம் விவசாயிகளின் வங்கிக் கணக்கில் குறைந்த கால இடைவெளியில், மானியத் தொகை வரவு வைக்கப்பட்டது.

மாண்புமிகு அம்மாவின் அரசு மேற்கொண்ட சீரிய நடவடிக்கைகளின் பயனாக, சென்ற ஆண்டில் பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ், 15 இலட்சத்து 37 ஆயிரம் விவசாயிகள் பதிவு செய்துள்ளனர். விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொண்டு, மாநில அரசு தன் பங்காக 564 கோடியே 70 இலட்சம் ரூபாயை மானியமாக காப்பீட்டு நிறுவனங்களுக்கு உரிய நேரத்தில் வழங்கியது. இதனால், வறட்சியால் பாதிப்படைந்த 9 இலட்சத்து 27 ஆயிரத்து 909 விவசாயிகளுக்கு இழப்பீட்டுத் தொகையாக 2 ஆயிரத்து 980 கோடி ரூபாய் காப்பீட்டு நிறுவனங்களால் வழங்க ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

இதுவரை 2 ஆயிரத்து 546 கோடியே 50 இலட்சம் ரூபாய் அளவுக்கு விவசாயிகளின் வங்கிக் கணக்கில் நேரடியாக இத்தொகை வரவு வைக்க வங்கிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளது. இந்தியாவிலேயே, அதிக அளவு இழப்பீட்டுத் தொகையை விவசாயிகளுக்கு பெற்றுக் கொடுத்தது தமிழ்நாடு தான் என்பதை பெருமையுடன் இப்பேரவைக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டில், உள்ள தென்னை விவசாயிகளின் வருமானம் பெருகிட, அவர்களின் 50 ஆண்டு கால கோரிக்கையான 'நீரா பானம்' உற்பத்தி செய்ய, மாண்புமிகு அம்மாவின் அரசு அனுமதி வழங்கும் என 18.04.2017 அன்று நான் அறிவித்தேன். இதனைத் தொடர்ந்து, கடந்த சட்டமன்ற கூட்டத் தொடரில் இதற்கான ஒப்புதல் அளிக்கப்பட்டு, 21.12.2017 அன்று அறிவிக்கை வெளியிடப்பட்டது. இந்த அறிவிக்கையின்படி, அனுமதிக்கப்பட்ட தென்னை உற்பத்தியாளர் நிறுவனம் அல்லது கூட்டுறவு சங்கம் மூலம் நீராபானம் உற்பத்தி செய்ய உரிமம் வழங்கப்படும். தமிழ்நாட்டு மக்கள் அனைவருக்கும் நீராபானம் எளிதில் கிடைப்பதற்கும், ஏற்றுமதி வாய்ப்பினை உருவாக்குவதற்கும், மத்திய அரசின் தென்னை வளர்ச்சி வாரியத்தின் ஒத்துழைப்புடன், மாண்புமிகு அம்மாவின்

அரசு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும். இதன் மூலம் தென்னை விவசாயிகள் பல மடங்கு கூடுதல் வருமானம் பெற இயலும் என்பதோடு, இளைஞர்களின் வேலைவாய்ப்புகளும் கூடும்.

டெல்டா விவசாயிகளின் நலனைப் பாதுகாக்கும் நோக்கத்துடன், **2017–2018**ஆம் ஆண்டில் **56** கோடியே **92** இலட்சம் ரூபாய் செலவில், குறுவை சிறப்பு தொகுப்புத் திட்டமும், **41** கோடியே **15** இலட்சம் ரூபாய் செலவில் சம்பா சிறப்பு தொகுப்புத் திட்டமும் செயல்படுத்தப்பட்டுள்ளது.

மானாவாரி விவசாயிகளின் நலனுக்காக தமிழ்நாட்டில் மற்றுமொரு சிறப்புத் திட்டமாக **802.90** கோடி ரூபாய் மதிப்பீட்டில், மானாவாரி சிறப்பு தொகுப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இது மட்டுமல்லாது, **40** இலட்சம் சிறு, குறு விவசாயிகளை ஒருங்கிணைத்து, கூட்டுப் பண்ணைய முறையை ஊக்குவிக்க முதற்கட்டமாக நடப்பாண்டில், **100** கோடி ரூபாய் ஒதுக்கீட்டில் கூட்டுப் பண்ணையத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

நுண்ணீர் பாசனத்திற்கு இந்தியாவிலேயே எங்கும் இல்லாத அளவில், சிறு, குறு விவசாயிகளுக்கு **100** சதவிகித மானியமும், பிற விவசாயிகளுக்கு **75** சதவிகித மானியமும் வழங்க கடந்த **2011–2012**ஆம் ஆண்டிலேயே மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களால் உத்தரவிடப்பட்டு, இந்தத் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தினை தமிழ்நாடு அரசு தொடர்ந்து சிறப்புற செயல்படுத்தி வந்த காரணத்தினால், மத்திய அரசு இத்திட்டத்திற்கு **2016–2017**ஆம் ஆண்டில் வழங்கிய **110** கோடி ரூபாய் மானியத்தை **2017–2018**ஆம் ஆண்டில் **285** கோடி ரூபாயாக உயர்த்தி வழங்கியுள்ளது.

இத்துடன், தமிழ்நாடு அரசு தனது பங்கான 518 கோடியே 75 இலட்ச ரூபாயும் சேர்த்து, 803 கோடியே 75 இலட்சம் ரூபாய் மானியத்தில், நுண்ணீர்ப் பாசன அமைப்புகளுக்கு வழங்க நடவடிக்கை எடுத்து வருகிறது.

மத்திய அரசு தற்போது அமல்படுத்திய ஜி.எஸ்.டி. வரிவிதிப்பினால், நுண்ணீர் பாசன அமைப்புகளின் விலையானது உயர்ந்துள்ளது. விவசாயிகள் இந்த விலை உயர்வினால் பாதிக்கப்படாமல் இருக்க, மாண்புமிகு அம்மாவின் அரசு முடிவெடுத்து, நுண்ணீர்ப் பாசன அமைப்பிற்கான ஜி.எஸ்.டி வரி விதிப்பினால் விவசாயிகள் செலுத்தும் கூடுதல் நிதியினை, தமிழ்நாடு அரசே ஏற்று அதற்கான ஆணையை பிறப்பித்துள்ளது. இதன்மூலம், நுண்ணீர் பாசன முறையினை அமைக்க முன்வரும் விவசாயிகளை கூடுதல் நிதிச் சுமையிலிருந்து இந்த அரசு பாதுகாத்துள்ளது.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் பிறந்த நாளையொட்டி கடந்த 2011–2012ஆம் ஆண்டு முதல் மரக் கன்றுகள் நடும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டமானது, 2017–2018ஆம் ஆண்டு மாபெரும் அளவில், 65 கோடியே 85 இலட்சம் ரூபாய் செலவில், 31 மாவட்டங்களில் 69 இலட்சம் மரக்கன்றுகள் நடப்படும் திட்டமாக செயல்படுத்தப்படும்.

மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, இந்திய மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமையை நிலைநாட்டிட, 1974ஆம் ஆண்டு ஒப்பந்தத்தை ரத்து செய்து, இலங்கை அரசிடமிருந்து கச்சத் தீவை மீட்பதே நிரந்தரத் தீர்வாக அமையும் என்ற உறுதியான நிலைப்பாட்டினை, மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மாவின் வழியிலேயே, அம்மாவின் அரசும் மத்திய அரசிடமும், உச்ச நீதிமன்றத்திலும் தொடர்ந்து வலியுறுத்தும்.

இது தவிர, இந்த அரசின் இடையறாத முயற்சியின் காரணமாக, ஈரான் சிறையிலிருந்த 15 மீனவர்களும், இலங்கை சிறையிலிருந்த

263 மீனவர்களும் விடுவிக்கப்பட்டு, சொந்த ஊர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர் என்பதை மகிழ்ச்சியுடன் அவையில் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், இலங்கை அரசால் கைப்பற்றப்பட்ட தமிழ்நாட்டு மீனவர்களின் படகுகளை மீட்பதற்கு, இந்த அரசு, மத்திய அரசின் மூலமாக தனது நடவடிக்கையினை தீவிரப்படுத்தும்.

கடந்த 30.11.2017 அன்று வீசிய ‘ஓகி’ புயலினால் கன்னியாகுமரி மாவட்டம் மிக கடுமையாக பாதிக்கப்பட்டது. மாண்புமிகு அம்மாவின் அரசு எடுத்த போர்க்கால நடவடிக்கையின் காரணமாகவும், முன்பு எப்போதும் இல்லாத அளவிற்கு நிவாரணம் வழங்கியதாலும், குறுகிய காலத்தில் கன்னியாகுமரி மாவட்டம் இயல்பு நிலைக்கு திரும்பியது.

‘ஓகி’ புயலினால் பாதிக்கப்பட்டோருக்கு பல்வேறு நிவாரணங்களை அறிவித்திருந்தாலும், தற்போது ரப்பர் விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த, குலசேகரம் ஒழுங்குமுறை விற்பனைக் கூட வளாகத்தில் புகை மூட்ட அறை ஒன்றினை 68 இலட்சம் ரூபாய் மதிப்பில் அமைத்திடவும், இதனை ரப்பர் உழவர் உற்பத்தியாளர் நிறுவனம் மூலம் செயல்படுத்திடவும் உத்தரவிட்டுள்ளேன். மேலும், தேவைக்கேற்ப, பல்வேறு திட்டங்களை ரப்பர் விவசாயிகளுக்கு மாண்புமிகு அம்மாவின் அரசு வழங்க இருக்கிறது.

ஆழ்கடலுக்குச் சென்று நாளது தேதி வரை கரை திரும்பாத கடைசி மீனவர் கிடைக்கின்ற வரையில், தேடுதல் பணி தொடர்ந்து நடைபெற மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களை தொடர்ந்து வலியுறுத்தி வருகிறேன். மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் அவர்களுக்கு விலை மதிப்பில்லா உயிர்களை மீட்கும் பொருட்டு, இதனை வலியுறுத்தி சமீபத்தில் கடிதம் எழுதியுள்ளேன்.

மாநில அரசின் நிதிநிலை பற்றிப் பல்வேறு சந்தேகங்கள், கருத்துக்கள் இம்மாமன்றத்தில் எழுப்பப்பட்டுள்ளன. மாமன்றத்திற்கு வெளியிலும் இதுபற்றி சில கருத்துக்கள் அவ்வப்போது தெரிவிக்கப்படுகின்றன.

நேற்று கூட, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், ஆளுநர் உரை பத்தி 4இல், மாநில நிதிநிலை சிறப்பாக பராமரிக்கப்பட்டு வருகிறது என முதலில் கூறிவிட்டு, அதே பத்தியில் நிதி நெருக்கடி உள்ளதாகக் கூறியுள்ளது முரண்பட்ட நிலை எனக் குறிப்பிட்டார். நேற்றே மாண்புமிகு துணை முதலமைச்சர் பதில் அளித்தபடி, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் முழு பத்தியையும் பார்க்காமல், அவருக்குச் சாதகமான சில வார்த்தைகளை எடுத்துக் கொண்டு முரண்பாடு உள்ளதாகக் கூறினார். ஆளுநர் உரையில், “வருவாய் வரவுகளின் வளர்ச்சி குறைந்து, வருவாய்ப் பற்றாக்குறை கடுமையாக உயர்ந்து வரும் நிலையிலும் கூட, நிதிப் பற்றாக்குறையையும், மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் கடனின் விகிதத்தையும் வரையறுக்கப்பட்ட அளவிற்குள் இந்த அரசு தொடர்ந்து கட்டுப்படுத்தி வருகிறது” என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு மாநிலத்தின் சிறந்த நிதி மேலாண்மைக்கு அளவுகோல், நிதிப் பற்றாக்குறையும், மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் கடன் அளவும் தான். அதை சீராகவும், சிறப்பாகவும் இந்த அரசு பராமரித்து வருகிறது. வருவாய்ப் பற்றாக்குறை உள்ள நிலையைத் தான் நிதி நெருக்கடி எனக் குறிப்பிட்டு, அந்த நிலையையும் சமாளித்து ஊதிய உயர்வு அரசு அலுவலர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது எனக் குறிப்பிடப்பட்டு உள்ளது. எனவே, நிதி மேலாண்மை என்பது கடினமான நிதிநிலைச் சூழலில், எப்படிப் பராமரிக்கப்படுகிறது என்பதை பொறுத்துத் தான். எனினும், திட்டங்களுக்கு உரிய நிதி வழங்கப்பட்டு வருகிறது என்றும், அது குறைக்கப்படவில்லை என்றும், ஆளுநர் உரையில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

2016–2017ஆம் ஆண்டு திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் நிதிப் பற்றாக்குறை 2.96 சதவீதமாக மதிப்பிடப்பட்டு, பின்னர் திருத்த மதிப்பீட்டில் 4.58 சதவீதமாக உயர்த்தப்பட்டது. 2016–2017ஆம் ஆண்டில், 3 சதவீத வரையறையைக் கடப்பதற்கு முக்கிய காரணம், 'உதய்' திட்டத்தின் கீழ், 22 ஆயிரத்து 815 கோடி ரூபாய் மின்சார வாரியத்தின் கடனை, மாநில அரசே ஏற்றுக் கொண்டதுதான். இதற்கென மத்திய அரசு நிதிப் பற்றாக்குறை வரம்புக்கு, 2016–2017ஆம் ஆண்டிற்கு மட்டும் விலக்கு அளித்துள்ளது. 'உதய்' திட்டம் நீங்கலாக, நிதிப் பற்றாக்குறை கணித்ததால், அது திருத்த மதிப்பீட்டின்படி 2.88 சதவீதமாக இருந்தது. 2016–2017ஆம் ஆண்டின் முதல் நிலைக் கணக்குகளின்படி, நிதிப் பற்றாக்குறை 56 ஆயிரத்து 171 கோடி ரூபாயாகவும், நிதிப் பற்றாக்குறைக்கான விகிதாச்சாரம் 4.19 சதவீதமாகவும், உதய் திட்டத்தின் கீழ் ஏற்கப்பட்டுள்ள கடன் நீங்கலாக, நிதிப் பற்றாக்குறை 33,356 கோடி ரூபாயாகவும், நிதிப் பற்றாக்குறைக்கான விகிதாச்சாரம் 2.49 சதவீதமாகவும் இருந்தது.

நிதிப் பற்றாக்குறை 3 சதவீத வரையறையைக் கடக்கும் என்பதை அறிந்து, தமிழ்நாடு நிதி மேலாண்மை மற்றும் பொறுப்புடைமைச் சட்டத்திற்கு, 2016–2017ஆம் ஆண்டிற்கு மட்டும் விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. 2017–2018ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டின்படி, மாநில மொத்த உற்பத்தி மதிப்பில், நிதிப் பற்றாக்குறை 2.79 சதவீதமாக, 3 சதவீதம் என்ற வரையறைக்குள்ளாக இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது.

மற்ற மாநிலங்களுடன் தமிழ்நாட்டை ஒப்பீடுகையில், 2017–2018ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில், நிதிப் பற்றாக்குறை, மாநில மொத்த உற்பத்தியில், மத்திய பிரதேசத்தில் 3.49 சதவீதமாகவும், தெலுங்கானாவில் 3.49 சதவீதமாகவும், உத்தர பிரதேசத்தில் 2.97 சதவீதமாகவும், கேரளாவில் 3.44 சதவீதமாகவும்

உள்ளன. மத்திய அரசின் நிதிப் பற்றாக்குறை, 2017–2018ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டின்படி, 3.20 சதவீதமாக மதிப்பிடப்பட்டுள்ளது. எனவே, தமிழ்நாட்டின் நிதிநிலை மத்திய அரசைக் காட்டிலும், மற்ற மாநிலங்களைக் காட்டிலும் கட்டுக்குள் நிருவகிக்கப்படுகிறது என்பது தெளிவாகிறது.

மேலும், நிதிக் குழுவின் பரிந்துரைகளின்படியும், நிதிநிலை நிருவாகப் பொறுப்புடைமைச் சட்டத்தின்படியும், நிதிப் பற்றாக்குறை 2016–2017ஆம் ஆண்டைத் தவிர்த்து, வரையறுக்கப்பட்டுள்ள மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பில் 3 சதவீதத்திற்கு உள்ளாகவே கட்டுப்படுத்தப்பட்டு வருகிறது. எனவே, தமிழ்நாட்டில் நிதி நிருவாகம் சீராகவே நிருவகிக்கப்படுகிறது என்பதையும் இந்த மாமன்றத்திற்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், ஆளுநர் உரையை, வரவு–செலவு திட்ட அறிக்கையைப் போல் எதிர்பார்த்து பேசியுள்ளார். ஆளுநர் உரை என்பது அரசின் திட்டங்களை கோடிட்டுக் காட்டும் ஒரு முன்னுரை தான். இதில் அரசு செயல்படுத்தி வரும் திட்டங்களைக் குறிப்பிட்டுப் பேசுவது மரபு. ஆனால் புதியத் திட்டங்களை ஆளுநர் உரையில் அறிவிக்க வேண்டும் என்பது அவசியம் இல்லை. அதுவும் ஓரிரு மாதங்களில் வரவு–செலவு திட்ட அறிக்கை சமர்ப்பிக்க உள்ள நிலையில், ஆளுநர் உரையில் புதிய திட்டம் அறிவிப்பது தேவையற்றது. ஏனெனில், அதற்கான நிதி ஆதாரத்தை உடனடியாக தர இயலாது.

அதனால் தான், பாரதப் பிரதமரின் ஊரக வீட்டு வசதித் திட்டம், முதலமைச்சரின் பசுமை வீடுகள் திட்டம் ஆகிய திட்டங்கள், ஊரகப் பகுதிகளில் ஏழைகளுக்கு விலையில்லா வீடுகளை வழங்குகிறது என்று கோடிட்டுக் காட்டி, நகர்ப்புற வீட்டு வசதித் திட்டங்களுக்கு சில விபரங்கள் தரப்பட்டுள்ளது. எல்லாத் திட்டங்களுக்கான சாதனைகளையும், செலவிட்ட தொகைகளையும் ஒதுக்கீடு செய்த

நிதி பற்றிய விவரங்களையும், ஆளுநர் உரையில் குறிப்பிடுவது சாத்தியமில்லை.

மத்திய அரசிடம் நிலுவையாக உள்ள மானியத் தொகை என்று, மாநில அரசு குறிப்பிட்டவை பெரும்பாலும் நடப்புத் திட்டங்களில் தான். அவற்றுக்கான நிதி அவ்வப்போது விடுவிக்கப்பட்டு வருகிறது. இது குறித்த ஆய்வினை, தலைமைச் செயலாளர் அவர்கள் காலாண்டுக்கு ஒரு முறை ஆய்வு செய்து வருகிறார். இதில், ஏற்படும் நிலுவையை விடுவிக்க அவ்வப்போது மத்திய அரசை, இந்த அரசு தொடர்ந்து வலியுறுத்தியும் வருகிறது.

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், தேசிய பேரிடர் நிவாரண நிதியிலிருந்து இந்த அரசு வெகு குறைவாகவே மத்திய அரசிடமிருந்து பெற்றுள்ளது என்று தெரிவித்திருந்தார். தேசிய பேரிடர் நிவாரண நிதியிலிருந்து நிதியுதவி கோரி மாநில அரசு சமர்ப்பிக்கும் கோரிக்கைகளில், தற்காலிக நிவாரணத்திற்கு மட்டும் தான் பேரிடர் நிவாரண நிதியிலிருந்து விடுவிக்கப்படுகிறது. நிரந்தரப் பணிகளுக்கு திட்டங்களைச் சார்ந்து தான் நிதி பெறப்படுகிறது. அதனால் தான், நாம் கோரும் நிதியைவிட, மத்திய அரசு விடுவிக்கும் நிதி குறைவாக இருக்கிறது. இது போலத்தான் திமுக ஆட்சிக் காலத்திலும், கோரிக்கை விடுவித்த மொத்த நிதியும் முழுமையாக எந்தக் காலத்திலும் பெற்றதில்லை.

இதற்கு உதாரணமாக சொல்ல வேண்டும் என்றால், கடந்த 2008ஆம் ஆண்டு திமுக ஆட்சி, மத்திய அரசிடமிருந்து நீசா புயலுக்காக 3,789 கோடி ரூபாய் கோரப்பட்டதில் 570.16 கோடி ரூபாய் தான் ஒதுக்கீடு பெறப்பட்டது. அதேபோல, கடந்த 2010ஆம் ஆண்டில் மத்திய அரசிடமிருந்து வெள்ள நிவாரணத்திற்காக 1,929.21 கோடி ரூபாய் கோரப்பட்டது. இதில் 317.17 கோடி ரூபாய் தான் ஒதுக்கப்பட்டுள்ளது. அதேபோல, கடந்த 2011ஆம் ஆண்டில் மத்திய அரசிடமிருந்து தானே புயலுக்காக 5,248 கோடி ரூபாய்

கோரப்பட்டதில், 638.13 கோடி ரூபாய் ஒதுக்கீடு பெறப்பட்டது. அதேபோல நிறைய இருக்கிறது. எதற்காக சொல்கிறேன் என்றால், நாம் மத்திய அரசிடம் கோரிக்கை வைக்கிறோம். ஆனால், அவர்கள் குறிப்பிட்ட அளவு தான் விடுவிக்கிறார்கள். இதைக்கூட திமுக ஆட்சியிலே கடந்த 2008 ஏப்ரலில் அப்போது நிதியமைச்சராக இருந்த மதிப்பிற்குரிய அன்பழகன் அவர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள். “மத்திய அரசிடம் 1,500 கோடி ரூபாய் அளவிற்கு கடந்த டிசம்பரில் ஏற்பட்ட வெள்ள பாதிப்பிற்கு நிதி கேட்டீர்கள் என்ன ஆயிற்று என்று கேட்கிறீர்கள். மத்திய அரசு அதை பரிசீலனை செய்து கொண்டு இருப்பதாக தான் அறிகிறேன். ஆனால், பலபேர் என்ன நினைக்கிறார்கள், 1,500 கோடி ரூபாய் கேட்டால், 1,000 கோடி ரூபாய் தருவார்களா, 1,200 கோடி ரூபாய் தருவார்களா என்று ஒரு கணக்கு வைத்துக் கொண்டு அவ்வளவு பெரிய தொகை வரவில்லையே என்று குறைபடும் ஒரு தவறான கண்ணோட்டம் இருக்கிறது.

அது எந்த கட்சி ஆட்சியிலே இருந்தாலும், இந்த இடர் அல்லது விபத்து சீராக ஏற்படுகின்ற போது, அதற்கு வழங்குவதற்கு என்று ஒரு நிதி அந்தந்த மாநிலத்திற்கு என்று ஆண்டொன்றுக்கு இவ்வளவு என்று முதலிலே ஒதுக்கப்பட்டு, அது தீர்மானிக்கப்படுகிறது. அப்படி ஏறத்தாழ 250 கோடி ரூபாய் தமிழகத்திற்கு உரியதாக இருக்கிறது. அந்த 250 கோடியிலே 75 விழுக்காடு மத்திய அரசு தருகிறது. 25 விழுக்காடு மாநில அரசு தந்து அந்த நிதி அதற்கு என்று செலவழிக்கப்படுகிறது. ஆனால், மத்திய அரசிடம் இயற்கை இடர்பாடுகளை களைவதற்கு அவர்களிடம் கேட்கின்ற நிதிகள், உடனடியாக செயல்படவேண்டிய பணிகளுக்காக நிதி தருவார்கள். நிரந்தரமாக செய்யப்பட வேண்டிய பணிகள் எல்லாம் மாநில அரசின் திட்டத்தில் சேர்த்து கொள்ளப்பட வேண்டும். மாநில அரசினுடைய திட்டத் தொகையிலே அவை சேர்க்கப்பட வேண்டும். ரோடு போட வேண்டும், பாலம் கட்ட வேண்டும், அணை கட்ட வேண்டும் என்று இவையெல்லாம்

ஒருவேலை அதிலே சேர்வதாக இருந்தால், அவை நிரந்தரப் பணிகள். அந்த நிரந்தரப் பணிகளுக்கு திட்டப் பணிகளில் தான் சேர்த்து, அந்தந்த மாநிலங்கள் செய்து கொள்ள வேண்டும்.

ஆகவே, இப்போது இந்த ரூபாய் 1,500 கோடியில், மத்திய அரசின் பரிசீலனையில் உள்ளதாக இருக்கக்கூடியது 500 கோடி ரூபாய் மட்டுமே. அது உடனடிப் பணிகளுக்காக அதற்கு அனுமதி செலவு செய்திருக்கிறோம். அந்த உடனடியாக செயல்படுகின்ற அந்த காரியங்களுக்கு அவர்கள் எவ்வளவு நிதி தருவார்கள் என்பது தெரியாவிட்டாலும் கூட, எந்தக் கடனையும் நிறுத்தி வைக்கப்படவில்லை. செய்யப்பட வேண்டிய காரியங்கள் மாநில அரசினுடைய பொறுப்பிலே செய்யப்பட்டு இருக்கின்றன. தொடர்ந்து செயல்படுத்தப்படும் என்றும் தெரிவித்துக் கொள்கிறேன்". இதை எதற்காக சொல்லுகின்றேன் என்றால், நேற்று நீங்கள் கேட்ட கேள்விக்கான விளக்கம்.

அரசின் அனைத்துத் திட்டங்களும் அனைத்து மக்களுக்கும் சென்றடைய வேண்டும் என்பதே, மாண்புமிகு அம்மா அவர்களின் விருப்பமாகும். அவ்வாறு சென்றடைவதற்கு அரசு ஊழியர்களின் பணி இன்றியமையாத ஒன்றாகும். எனவே, அரசில் காலிப் பணியிடங்களை நிரப்புவதில் இந்த அரசு மிகுந்த அக்கறை காட்டி வருகிறது. இதன் விளைவாக, 16.02.2017 முதல் 30.11.2017 வரையிலான காலத்தில் 5 ஆயிரத்து 902 பணியாளர்கள் பல்வேறு துறைகளில் உள்ள பணியிடங்களுக்காக தேர்வு செய்யப்பட்டுள்ளனர் என்பதை பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

சரக்குகள் மற்றும் சேவைகள் வரி விதிப்பு முறை பற்றி மத்திய அரசு பாராட்டப்பட்டது, மாநில சுயாட்சிக்கு எதிராக உள்ளதாக சில கருத்துகள் கூறப்பட்டன.

மாண்புமிகு அம்மாவின் அரசு மறைமுக வரிச் சீர்திருத்தம் மேற்கொள்ளும்போது, மாநிலத்தின் உரிமைகள் பறிபோய்விடக்

கூடாது என்றும், மாநில அரசுக்கு இழப்பு ஏற்படக் கூடாது என்றும் தான் வலியுறுத்தி வருகிறது. அந்த வகையில், மத்திய அரசு 01.07.2017 முதல் நடைமுறைப்படுத்திய சரக்குகள் மற்றும் சேவைகள் வரிவிதிப்பு முறைச் சட்டமானது, வரைவு சட்ட முன்வடிவு நிலையில் இருந்தபோது, அதில் இடம் பெற்றிருந்த பாதகமான சில அம்சங்கள் குறித்தும் குரல் எழுப்பிய மாநிலங்களில், தமிழ்நாடு முக்கிய மாநிலமாகும். அதனால் தான், மாநிலத்திற்கு பாதகமான சில அம்சங்கள், நிறைவேற்றப்பட்ட சட்டத்தின் இறுதி வடிவில் களையப்பட்டது.

உதாரணமாக, மாநிலங்களுக்கு ஏற்படக்கூடிய இழப்பீட்டை ஈடுசெய்ய வேண்டும் என்ற தமிழ்நாடு அரசின் கோரிக்கையை ஏற்று, கடந்த 2015–2016ஆம் ஆண்டில் இந்தப் புதிய வரியில் இணைக்கப்பட்ட வரிகள் மூலம் பெற்ற வருவாயை அடிப்படையாகக் கொண்டு, ஒவ்வொரு ஆண்டிற்கும் 14 சதவீதம் வளர்ச்சி என்ற வீதத்தில் கணக்கிட்டு, இழப்பீட்டுத் தொகை வழங்க வழிவகை செய்யப்பட்டது. மேலும், பெட்ரோல், டீசல் மீதான வரியும், சரக்குகள் மற்றும் சேவைகள் வரியின் கீழ் கொண்டு வரப்படவில்லை. இதன் மீது மாநில அரசு தான், தொடர்ந்து வரி விதித்து வருகிறது.

இத்திருத்தங்களுக்குப் பின்னரே, தமிழ்நாடு அரசு அந்த சட்டத்திற்கு இசைந்தது. இதன் பின்னரே, மாநில அரசும் தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிகள் சட்டம், 2017 சட்டமன்றத்தில் நிறைவேற்றி, சட்டம் 01.07.2017 முதல் நடைமுறைக்கு வந்தது. கடந்த ஆறு மாதங்களாக மத்திய அரசும், மாநிலத்திற்கு உரிய இழப்பீட்டுத் தொகையையும் வழங்கி வருகிறது.

மாநில ஜி.எஸ்.டி. (SGST) மற்றும் ஒருங்கிணைந்த ஜி.எஸ்.டி. (IGST) மூலம் மாநில அரசுக்கு ஜூலை மாதம் 0.24 கோடி ரூபாயும், ஆகஸ்ட் மாதத்தில் 2 ஆயிரத்து 852.16 கோடி ரூபாயும், செப்டம்பர் மாதத்தில் 3 ஆயிரத்து 143.35 கோடி ரூபாயும், அக்டோபர் மாதத்தில் 3 ஆயிரத்து 89.66 கோடி ரூபாயும், நவம்பர் மாதத்தில் 2 ஆயிரத்து

874.29 கோடி ரூபாயும் மற்றும் டிசம்பர் மாதத்தில் 3 ஆயிரத்து 43.57 கோடி ரூபாயும் வரி வருவாயாக பெறப்பட்டது.

மேலும், ஜூலை மற்றும் ஆகஸ்ட் மாதத்திற்கான இழப்பீட்டுத் தொகையாக, 614.10 கோடி ரூபாயும், செப்டம்பர் மற்றும் அக்டோபர் மாதத்திற்கான இழப்பீட்டுத் தொகையான, 30.27 கோடிக்கு, இதுவரை 17.90 கோடி ரூபாயும், ஆக மொத்தம் 632 கோடி ரூபாயை இதுவரை இழப்பீட்டுத் தொகையாக மத்திய அரசு வழங்கியுள்ளது.

நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களுக்கான இழப்பீட்டுத் தொகையாக 422.24 கோடி ரூபாயை தமிழ்நாடு பெற வேண்டியுள்ளது. இந்த நிலுவைத் தொகை விரைவில் விடுவிக்கப்பட உள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். எனவே, தமிழ்நாட்டின் வரி வருவாய் அளவும், உரிமையும் இதன் மூலம் பாதுகாக்கப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், ஜி.எஸ்.டி. கவுன்சில் நடத்தும் கூட்டங்களில் நமது மாநிலத்தின் சார்பில் பல்வேறு கோரிக்கைகள் வைக்கப்பட்டு, அதிக அளவிலான பொருட்களுக்கு வரி விலக்கும், வரி குறைப்பும் செய்யப்பட்டுள்ளன என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் நீர்நிலைகளை மீட்டெடுப்பதற்கும், அவற்றுக்கு புத்துயிர் அளிக்கவும், வேளாண் பெருங்குடி மக்களின் பங்களிப்புடன் செயல்படுத்தப்படும் திட்டம் தான் குடிமராமத்துத் திட்டமாகும்.

இத்திட்டத்தின் கீழ், 2016–2017ஆம் ஆண்டில் 30 மாவட்டங்களில் ஆயிரத்து 492 பணிகள் 81 கோடியே 95 இலட்சம் ரூபாய் செலவில் நிறைவு பெற்றுள்ளன. இந்தத் திட்டத்தின் மூலம் நீர்நிலைகள் தூர்வாரப்பட்டு, எடுக்கும் வண்டல் மண் வேளாண் பெருமக்களின் விவசாய நிலத்தை வளப்படுத்தும் நோக்குடன் “வண்டல் மண் வழங்கும் திட்டம்” நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது.

மாண்புமிகு எதிர்கட்சி துணைத் தலைவர் அவர்கள், எவ்வளவு ஏரிகள் தூர் வாரப்பட்டு இருக்கின்றது என்ற வினாவை எழுப்பியிருக்கிறார்கள். கிட்டத்தட்ட 1,519 ஏரிகள் தூர்வாருவதற்காக திட்டமிடப்பட்டது. இது விவசாயிகளின் பங்களிப்போடு நிறைவேற்றுகின்ற திட்டம். அந்தந்த பகுதிகளில் இருக்கின்ற விவசாயிகள், அந்த பாசன ஏரிக்கு உட்பட்டு பாசனம் பெறுகின்ற விவசாயிகள் இந்த திட்டத்திலே இணைத்து செயல்படுத்துகின்ற திட்டம் 'குடிமராமத்து' திட்டம். ஆகவே, இந்த திட்டம் ஒரு முன்னோடியான திட்டம். இது முழுக்க முழுக்க விவசாயிகளாலேயே நிறைவேற்றப்படுகின்ற திட்டம். ஆகவே, அந்த விவசாயிகளாலேயே நிறைவேற்றப்படுகின்ற திட்டமாக இருந்தால் தான் அங்கே முழுமையான பணி நடைபெறும் என்ற எண்ணத்தின் அடிப்படையிலே இந்த குடிமராமத்து திட்டம் இன்றைக்கு நடைமுறைப்படுத்தப்பட்டு இருக்கின்றது.

மாண்புமிகு எதிர்கட்சி துணைத் தலைவர் அவர்கள் கேட்கின்ற விளக்கத்தை நான் அவர்களுக்கு கடிதம் மூலம் தருகின்றேன். இந்த திட்டத்தில் எந்த தவறும் நடைபெறாது. ஏனென்றால், அந்த விவசாயிகளின் பெயரில் தான் Bill–லே போகும். Cheque விவசாயிகளின் பெயரில் தான் தருவார்கள். வேறுயாரும் வாங்க முடியாது. அதனால் எந்த தவறாக இருந்தாலும் கண்டுபிடித்து விடலாம். எந்த தவறும் நடைபெறாமல் இருப்பதற்காகத் தான், அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அங்கு பதிவு செய்கின்ற விவசாயிகள் குழுவிற்கு, அந்தந்த பாசன ஏரிக்கு உட்பட்ட விவசாயக் குழுவிற்கு தான், அந்த பணியை ஒப்படைக்கிறார்கள். அதற்கு மாற்றுக்கருத்தே கிடையாது. அது எந்த கட்சியாக இருந்தாலும் சரி. கட்சி என்ற பாகுபாடே கிடையாது. ஆகவே, அந்த விவசாயிகள் குழுவிற்கு இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டு, பணிகள் நடைபெற்று கொண்டிருக்கிறது. அற்புதமான

திட்டம். இதில் ஏதாவது குறைபாடு இருந்தால் சுட்டிக்காட்டினால், அதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இந்த தருணத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

2017–2018ஆம் ஆண்டில் 331 கோடியே 68 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 2,065 பணிகள் செயல்படுத்த நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. ஏரிகளில் எல்லாம் தண்ணீர் இருப்பதால் இதற்கென அறிவித்த திட்டம் நடைமுறைப்படுத்தாத காரணத்தினாலே இப்போது நடைமுறைப்படுத்த உள்ளோம். எந்தந்த ஏரி என்ற விவரத்தையும் உங்களுக்கு கொடுத்து விடுகிறோம். இத்திட்டத்தின் மூலமாக நீர் நிலைகள் தூர் வாரப்பட்டு எடுக்கப்படும் வண்டல் மண், வேளாண் பெருமக்களின் விவசாய நிலத்தை வளப்படுத்தும் நோக்குடன் "வண்டல் மண் வழங்கும் திட்டம்" நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ், தமிழ்நாடு முழுவதும் இது வரை 5 இலட்சத்து 11 ஆயிரத்து 694 விவசாயிகளுக்கு, 5 கோடியே 54 இலட்சத்து 84 ஆயிரத்து 351 கன மீட்டர் வண்டல் மண் அளிக்கப்பட்டுள்ளது. இது சாதாரண விஷயம் அல்ல. நீங்களும் விவசாயி, நானும் விவசாயி. ஆகவே, நிலத்திற்கு இயற்கை எரு தேவை. அந்த இயற்கை எரு, இந்த வண்டல் மண் வாயிலாக விவசாயிகளுக்கு கிடைக்கிறது. அதனால், விளைச்சல் அதிகமாக பெருகிறது. அப்படிப்பட்ட உன்னதமானத் திட்டத்தை, மாண்புமிகு அம்மாவுடைய அரசு நடைமுறைப்படுத்துகிறது என்பதை மகிழ்ச்சியுடன் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு எதிர்கட்சி துணை தலைவர் அவர்கள், அப்படி ஏதாவது சம்பவம் ஏற்பட்டால், உடனடியாக அரசிற்கு தெரிவித்தால், உடனடி நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இந்த அவையின் வாயிலாக தெரிவித்து கொள்கிறேன். ஏனென்றால், இது முக்கியமான திட்டம். முழுக்க முழுக்க விவசாயிகளுக்கு பயனயளிக்க

வேண்டும் என்பதற்காக தான், இந்த குடிமராமத்து திட்டத்தை கொண்டு வந்திருக்கிறோம். அதுமட்டுமல்ல, இது விவசாயிகளின் பங்களிப்புடன் நடைபெறுகின்ற திட்டம். இந்தத் திட்டத்தில் எந்த ஒரு தவறும் ஏற்படக்கூடாது என்பதற்காக தான் விவசாயிகள் 10 சதவிகிதம் அளித்து, மீதம் 90 சதவிகிதம் அரசு வழங்குகிறது. ஆகவே, விவசாயிகளை இணைத்து இந்தத் திட்டம் சிறப்பாக நடைபெற வேண்டும் என்பதுதான் அரசினுடைய எண்ணம். மாண்புமிகு எதிர்கட்சி துணைத் தலைவர் அவர்கள் சொன்னது போல, ஏதாவது குறைபாடு இருக்குமானால், அரசினுடைய கவனத்திற்கு கொண்டு வந்தால், உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இந்த தருணத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, மாண்புமிகு எதிர்கட்சி துணை தலைவர் அவர்களுக்கு சொல்கிறேன், பல்வேறு நடவடிக்கைகள் எடுத்து இருக்கிறோம். இப்படி தவறாக யாராவது செங்கல் சூளைக்கு ஏரியிலிருந்து மண் அள்ளினால், அந்த வாகனங்கள் எல்லாம் பறிமுதல் செய்யப்பட்டிருக்கிறது. அந்த விவரங்கள் எல்லாம் உங்களுக்கு கொடுக்கிறேன்.

காவேரி மேலாண்மை வாரியத்தையும், காவேரி நதிநீர் முறைப்படுத்தும் குழுவையும் விரைந்து அமைக்க வேண்டும் என்ற தமிழ்நாட்டின் நியாயமான, நீண்டகால கோரிக்கையை மத்திய அரசு நிறைவேற்ற வேண்டும் என, மாண்புமிகு அம்மாவின் அரசு தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.

நதிநீர் இணைப்புத் திட்டத்தின் கீழ், கோதாவரியிலிருந்து வெளியேறும் உபரிநீரினைத் திருப்பி, கோதாவரி–கிருஷ்ணா–பெண்ணாறு–பாலாறு–காவேரி நதிநீர் இணைப்புத் திட்டத்தின் கீழ் காவேரியில் கல்லணைக்கு அருகில் 125 டி.எம்.சி. அடி நீர் தமிழ்நாட்டிற்குக் கிடைக்க மத்திய அரசிடம் தொடர்ந்து வலியுறுத்தப்படும்.

தமிழ்நாடு அரசு, முல்லைப் பெரியாறு அணையின் முழு நீர்மட்ட அளவான 152 அடிக்கு நீரை தேக்குவதற்குத் தேவையான எஞ்சியுள்ள பலப்படுத்தும் பணிகளைச் செய்யும் நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. கேரள அரசு, இப்பணிகளைச் செய்ய தேவையானச் சட்டபூர்வமான அனுமதியை பெறுவதற்கு ஒத்துழைக்காமலும், தமிழ்நாடு பொதுப்பணித் துறையின் பொறியாளர்கள் அணைப் பகுதியில் பணிகளை செய்வதற்கு இடையூறுகளை ஏற்படுத்தியும் வருவதால், தமிழ்நாடு அரசு உச்ச நீதிமன்றத்தில் 02.03.2017 அன்று ஒரு நிறைவேற்றல் மனுவை தாக்கல் செய்து உள்ளது என்பதையும், தமிழ்நாட்டு மக்களின் நலனை உறுதிப்படுத்தும் வகையிலும், உச்ச நீதிமன்றத்தின் உத்தரவினை நடைமுறைப்படுத்தவும், மாண்புமிகு அம்மாவின் அரசு உறுதியான நடவடிக்கைகளை தொடர்ந்து மேற்கொள்ளும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

பொதுமக்களின் போக்குவரத்துப் பயன்பாட்டிற்கு பல்வேறுத் திட்டங்களை நிறைவேற்றியுள்ள மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, அதை செவ்வனே செயல்படுத்த, சாலை வசதி மிகவும் இன்றியமையாதது என்பதை நன்கு அறிந்துள்ளது.

எனவே, சென்ற ஆண்டில் மட்டும் சென்னை வியாசர்பாடி, திருவொற்றியூர் மாட்டுமந்தை உள்பட 5 இடங்களில் புதிய பாலங்கள் 196.62 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டி முடித்து, என்னால் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

நபார்டு வங்கி நிதி உதவியுடன் 48 பாலங்கள் 105.87 கோடி ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. ஸ்ரீரங்கம்–கொள்ளிடம் ஆற்றுப்பாலம் 83 கோடி ரூபாய் செலவிலும், திருச்சி நகர், எம்.எஸ்.பி.கேம்ப் சந்திப்பில் 81.40 கோடி ரூபாய் செலவில், இரயில்வே மேம்பாலமும் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

சேலம் மாநகரில் ஐந்து சாலை சந்திப்பில் 320 கோடி ரூபாய் செலவில், ஒரு ஈரடுக்கு மேம்பாலம் கட்டப்பட்டு வருகிறது.

கோவை மாநகர் காந்திபுரத்தில் டாக்டர் நஞ்சப்பா சாலை மற்றும் டாக்டர் சின்னசாமி சாலையில் 194.57 கோடி ரூபாய் மதிப்பில், சாலை மேம்பாலங்கள், சேலம் நகரத்தில் குரங்குசாவடி மற்றும் ஏவிஆர் ரவுண்டானா சாலை சந்திப்புகளில் 111.40 கோடி ரூபாய் மதிப்பில், பல்வழிச்சாலை மேம்பாலமும் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

கோயம்புத்தூர்–அவினாசி சாலையில் உப்பிலிபாளையம் முதல் விமான நிலையம் வரை 950 கோடி ரூபாய் செலவில் ஒரு உயர்மட்டபாலம் கட்டுவதற்கான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. இது தவிர, போரூர் மற்றும் அமைந்தகரையில் சுமார் 65.10 கோடி ரூபாய் செலவில், சாலை மேம்பாலங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

சாலைப் போக்குவரத்து, கடல்வழிப் போக்குவரத்து மற்றும் துறைமுகங்கள் துறைகளில் தமிழ்நாடு அடைந்து வரும் முன்னேற்றத்தினைக் கண்டு, தமிழ்நாடு அரசின் திட்டங்களை மேலும் ஊக்கப்படுத்தும் விதத்தில், மத்திய அரசின் சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சகம் சுமார் ஒரு இலட்சம் கோடி ரூபாய் மதிப்பிலானத் திட்டங்களை நடைமுறைபடுத்த பரிசீலிப்பதாக மத்திய அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அனைவருக்கும் வீடு திட்டத்தின் கீழ், இந்தியாவிலேயே அதிக அளவிலான திட்டக் கருத்துருக்களை அனுப்பியதிலும், கட்டி முடிக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கையிலும் தமிழ்நாடு முதன்மை மாநிலமாக விளங்குகிறது.

நகர்ப்புற ஏழை, எளிய மக்களுக்கு வீட்டு வசதியை ஏற்படுத்துவதற்கான நிதியை திரட்ட, தமிழ்நாடு அரசு உறைவிட நிதியை உருவாக்கியுள்ளது.

தொழில் துறையைப் பொறுத்தமட்டில், தமிழ்நாடு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் இரண்டாவது இடத்தில் இருப்பதிலிருந்தும், இந்தியாவின் மொத்த தொழிற்சாலைகள் மற்றும் தொழிலாளர்கள் எண்ணிக்கையில் முதல் இடத்தில் இருப்பதிலிருந்தும், இந்தியாவின் தொழில் வளர்ச்சியில் தமிழ்நாடு முக்கியப் பங்களிப்பு ஆற்றி வருவது விளங்கும்.

தமிழ்நாட்டில் முதலீடுகளை ஈர்ப்பதற்கு உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2015இன் மூலம் இதுவரையில் 61 திட்டங்கள் பல்வேறு கட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இதன் மூலம் 62 ஆயிரத்து 738 கோடி ரூபாய் மதிப்பிலான முதலீடுகள் துரிதமாக நடைமுறைபடுத்தப்பட்டு வருகின்றன. இதன் மூலம் இதுவரை 96 ஆயிரத்து 341 நபர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

2015 உலக முதலீட்டாளர்கள் மாநாடு வெற்றியைத் தொடரும் வகையில், மாண்புமிகு அம்மாவின் அரசு இந்த ஆண்டு இறுதியில், உலக முதலீட்டாளர்கள் மாநாட்டினை நடத்த ஏற்பாடு செய்து வருகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

பன்னாட்டு (ம) உள்நாட்டு பெருந்தொழில் நிறுவனங்கள் தமிழ்நாட்டின் மீது கொண்டுள்ள நம்பிக்கையினை எடுத்துக்காட்டும் விதமாக, விரைவில் நடைமுறைக்கு வரவுள்ள முதலீடுகளின் விவரங்களை தெரிவித்துக் கொள்கிறேன். குறிப்பாக,

- சுமார் 5,000 கோடி ரூபாய் முதலீட்டில், டயர்கள் தயாரிக்கும் ‘சியட்’ நிறுவனத்தின் தொழிற்சாலை;
- 3,000 கோடி ரூபாய் முதலீட்டில், கார் அசம்பிளி மற்றும் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி சேவை (R&D) அமைக்க உள்ள பிரான்ஸ் நாட்டு நிறுவனத்தின் தொழிற்சாலை;

- 5,000 கோடி ரூபாய் மதிப்பீட்டில், ஹுன்டாய் நிறுவனத்தின் விரிவாக்க தொழிற்சாலை என பல்வேறு முக்கிய முதலீடுகள் இறுதி செய்யப்பட்டு வருகின்றன.

இது தவிர, மேலும் 15 நிறுவனங்களுடன் மொத்தம் சுமார் 25,000 கோடி ரூபாய் மதிப்பிலான முதலீடுகளுக்கு பேச்சுவார்த்தை உயர்மட்ட அளவில் நடந்து வருகின்றது. இவை விரைவில் நடைமுறைக்கு வரும் என்றும் தமிழ்நாடு தொடர்ந்து வளர்ச்சிப் பாதையில் பயணிக்கும் என்பதையும் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் புதிய தொழில் முதலீடுகள் பெறப்படுவதை மேலும் ஊக்குவிக்கும் விதமாக, "தமிழ்நாடு வணிக எளிதாக்கும் சட்டம்" இன்று இந்த மாமன்றத்தின் ஒப்புதலுக்காகச் சமர்ப்பிக்கப்படவுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதன் மூலம் தொழில் தொடங்குவதற்குத் தேவையான அனுமதிகள் அனைத்தும் உரிய காலத்திற்குள் வழங்கப்படுவது உறுதி செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் தொழில் தொடங்குவதற்கான அனுமதிகள் வழங்கப்படுவதை எளிமையாக்கும் நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக, 'ஒருங்கிணைந்த இணைய தள வழி ஒற்றைச்சாளர தகவினை' 02.11.2017 அன்று நான் துவங்கிவைத்துள்ளேன்.

காஞ்சிபுரம் மாவட்டம், சிப்காட் வல்லம்–வடகால் தொழிற் பூங்காவில் சுமார் 245 ஏக்கர் பரப்பளவில் 'வானூர்தி பூங்கா' ஒன்றினை அமைக்க 25.10.2017இல் நான் அடிக்கல் நாட்டியுள்ளேன்.

மேலும், தமிழ்நாடு செய்தித் தாள் மற்றும் காகித நிறுவனம், **"சிறந்த சுற்றுப்புறச் சூழல் உத்திகளை செயல்படுத்தியமைக்கான விருது மற்றும் சிறந்த எரிசக்தி மேலாண்மைக்கான விருதினை"**யும் பெற்றுள்ளது.

சர்க்கரை ஆலைகள் கரும்பிற்கான மாநில அரசு பரிந்துரை விலையினை விரைவில் வழங்க, இந்த அரசு உரிய நடவடிக்கை எடுத்து வருகிறது.

விருதுநகர் மாவட்டத்தில் சிவகாசி மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளில் 859 பட்டாசு தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றன. இதில் சுமார் இரண்டு இலட்சம் தொழிலாளர்கள் பட்டாசு உற்பத்தியில் நேரடியாகவும், பட்டாசு உற்பத்தி மற்றும் விற்பனை சார்ந்த உப தொழில்களில் சுமார் 4 இலட்சம் தொழிலாளர்களும் ஈடுபட்டுள்ளனர்.

2015ஆம் ஆண்டு மாண்புமிகு உச்ச நீதிமன்றத்தில் புதுடெல்லி மற்றும் NCR பகுதிகளில் தீபாவளிப் பண்டிகையையொட்டி, பட்டாசு விற்பனை மற்றும் உபயோகத்தை தடை செய்து இடைக்கால உத்தரவு பிறப்பிக்கப்பட்டு, அதன் தொடர்ச்சியாக இந்தியா முழுவதும் பட்டாசு விற்பனை மற்றும் உபயோகத்தினை தடை செய்யக் கோரி, இரு வழக்குகள் மாண்புமிகு உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

இந்நிலையில், பட்டாசு உற்பத்தி செய்து அதனை விற்க இயலாத சூழ்நிலை ஏற்படும் அபாயம் உள்ளதால், விருதுநகர் மாவட்டத்தில் உள்ள அனைத்து பட்டாசுத் தொழிற்சாலைகளும், உச்ச நீதிமன்றத்தின் கவனத்தினை ஈர்க்கும் விதமாக, 26.12.2017 முதல் உற்பத்தியை நிறுத்தி, காலவரையற்ற வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர். பண்டிகைக் காலங்களில், ஓரிரு நாட்கள் மட்டுமே பட்டாசு வெடிக்கப்படுவதால், அதனால் ஏற்படும் சுற்றுச்சூழல் பாதிப்பினை குறுகிய கால நிகழ்வாகக் கருதி, சுற்றுச்சூழல் பாதுகாப்பு விதிகள், 1986இன் விதி 3(b) கீழ், விலக்கு அளித்து, உரிய திருத்தம் மேற்கொள்ளப்பட வேண்டும் என, அவர்களின் கோரிக்கைகளை கருத்தில் கொண்டு, இப்பிரச்சினைக்கு ஒரு நிரந்தரத் தீர்வு காணும் பொருட்டு, பட்டாசுக்கு விதி 3 (b) சுற்றுச்சூழல் பாதுகாப்பு விதி,

1986இல் விலக்கு அளிக்க மாண்புமிகு அம்மாவின் அரசு மத்திய அரசை வலியுறுத்தும்.

ஒரு மாநிலத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு தொழில் துறையின் பங்கு மிக அதிகம். அந்தத் தொழில் துறை தங்கு தடையின்றி முன்னேற, தங்கு தடையில்லாத மின்சாரம் மிக மிக அவசியம். இதை நன்கு உணர்ந்த மாண்புமிகு அம்மாவின் அரசு, நடப்பாண்டில் இது வரை 871 மெகாவாட் கூடுதல் மின் நிறுவு திறனை தமிழ்நாட்டின் மின் கட்டமைப்புடன் இணைத்துள்ளது. இதன் மூலம், கடந்த ஆண்டைப் போலவே இந்த ஆண்டிலும், தமிழ்நாடு மின் மிகை மாநிலமாகத் தொடரும் என்பதை இப்பேரவைக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதற்காகத் தான், 2016–2017ஆம் ஆண்டில், எரிசக்தித் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையைக் காட்டிலும், 2017–2018ஆம் ஆண்டில் கூடுதலாக 3 ஆயிரத்து 72 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது. 2011 முதல் 2017 வரையிலான 6 ஆண்டு காலத்தில் 365 துணை மின் நிலையங்களும், 87 ஆயிரத்து 187 மின் மாற்றிகளும் தமிழ்நாடு முழுவதும் நிறுவப்பட்டுள்ளன. தமிழ்நாடு, உயர் அழுத்த மின் பாதை அமைப்பதில் இந்தியாவிலேயே முதல் இடத்தையும், துணை மின் நிலையங்களின் மின் திறனை அதிகப்படுத்துவதில் இரண்டாம் இடத்தையும் பெற்றுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், முதலமைச்சரின் பசுமை வீடுகள் திட்டத்தின் கீழ் 38 ஆயிரத்து 904 பசுமை வீடுகளுக்கும், 4 ஆயிரத்து 612 நெசவாளர் குடியிருப்புகளுக்கும் சூரிய சக்தி மின் விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன என்பதை பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

பொது மக்களுக்கு நவீன போக்குவரத்து வசதி அளித்திடும் வண்ணம், ஏற்கெனவே சென்னை மெட்ரோ இரயில் திட்டம்– கட்டம் 1இல் அனைத்து உயர்த்தப்பட்ட வழித் தடங்களில்

பயணிகள் சேவையினை மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் துவக்கி வைத்தார்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் நடக்கும் அம்மாவின் அரசு, மெட்ரோ இரயில் திட்டத்தின் இரண்டாம் கட்டமாக, மேலும் **3** மெட்ரோ இரயில் வழித் தடங்களை **107.5** கி.மீ. நீளத்திற்கு ஏற்படுத்துவதற்காக **79** ஆயிரத்து **962** கோடி ரூபாய்க்கு அயல்நாட்டு நிதியுதவி பெறும் பொருட்டு, மத்திய அரசின் பரிந்துரைக்கு அனுப்பியுள்ளது.

மேலும், கோயம்புத்தூர் மாநகரத்தில் போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்காக மெட்ரோ இரயில் திட்டத்தினை செயல்படுத்த, விரிவான சாத்தியக் கூறு மற்றும் திட்ட அறிக்கை தயாரிக்கும் பணியை சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்திடம் தமிழ்நாடு அரசு ஒப்படைத்துள்ளது என்பதை இப்பேரவைக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

**2011**ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பு விவரங்களின் அடிப்படையில், உள்ளாட்சி தேர்தலை நடத்த வேண்டி தமிழ்நாடு மறுவரையறை (Delimitation Commission) ஆணையம் தோற்றுவிக்கப்பட்டது. இவ் ஆணையம் தனது கால அட்டவணையில், **28.02.2018**–க்குள்ளாக உள்ளாட்சி அமைப்புகளின் வார்டுகளை (Wards) மறுவரை செய்யும் பொருட்டு, இட ஒதுக்கீடு குறித்த தனது பரிந்துரைகளை அரசுக்கு அனுப்பி இறுதி அறிவிக்கை வெளியிடும் திட்டத்தை வெளியிட்டுள்ளது. மறுவரையறை ஆணையத்தின் பரிந்துரையின் அடிப்படையில், உள்ளாட்சித் தேர்தல்கள் தமிழ்நாட்டில் விரைவில் நடைபெறும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

பொது மக்களுக்குத் தங்கு தடையின்றி குடிநீர் வழங்கும் அவசியத்தினை கருத்தில் கொண்டும், நகரமயமாகும் நிலையை கருத்தில் கொண்டும், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைக்கு **2017–2018**ஆம் ஆண்டு, **13** ஆயிரத்து **996** கோடி ரூபாயை இந்த அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

‘அம்ருத் திட்டத்தின்’ கீழ் 2016–2017ஆம் ஆண்டில் 4 குடிநீர் திட்டங்களும், 6 பாதாள சாக்கடைத் திட்டங்களும் 24 நகரங்களில் மேற்கொள்ளப்பட்டு உள்ளது.

மேலும், புதுக்கோட்டை, தஞ்சாவூர் மற்றும் கடலூர் ஆகிய மாவட்டங்களில் ஒரு நகராட்சி, 6 பேரூராட்சிகள் மற்றும் 5 ஆயிரத்து 482 ஊரக குடியிருப்புகளில் உள்ள 25.46 இலட்சம் மக்கள் பயனடையும் வகையில், ஆயிரத்து 373.44 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 4 பெரிய கூட்டுக் குடிநீர் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. திருநெல்வேலி, திருப்பூர் மற்றும் கடலூர் மாவட்டங்களில் 377 ஊரக குடியிருப்புகளில் உள்ள 2.89 இலட்சம் மக்கள் பயன் பெறும் வகையில், 140.40 கோடி ரூபாய் மதிப்பிலான 3 கூட்டுக் குடிநீர் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. அரியலூர், பெரம்பலூர் நகராட்சிகளில் விடுபட்ட பகுதிகள் மற்றும் கிருஷ்ணகிரி நகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டங்கள் மற்றும் கருங்குழி பேரூராட்சியில் கசடு மேலாண்மை திட்டம் ஆகியன ரூ.55.18 கோடி மதிப்பீட்டில் நிறைவேற்றப்பட்டுள்ளன.

வரலாறு காணாத வறட்சியிலும், குடிநீர் பிரச்சினை, தமிழ்நாட்டில் எங்கும் இல்லை என்ற நிலையை மாண்புமிகு அம்மாவின் அரசு உறுதி செய்தது. தமிழ்நாடு அரசு பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொண்டதன் பயனாக, திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தில் சிறந்த செயல்பாட்டிற்கான தேசிய விருது பேரூராட்சிகள் துறைக்கு வழங்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னை மற்றும் இதர கடலோர மாவட்டங்களில் வடகிழக்கு பருவ மழையால் ஏற்பட்ட பாதிப்புகளை சீரமைக்கவும், இனி சென்னைக்கு வெள்ளத்தால் பாதிப்பு ஏதும் ஏற்படாதவாறு நிரந்தர சீரமைப்புப் பணிகளை மேற்கொள்வதற்கு 4,047 கோடி ரூபாய் மத்திய அரசு வழங்க வேண்டும் என இவ்வரசு கோரியுள்ளது.

பொது மக்களுக்கு தரமான கேபிள் டிவி சேவையைக் குறைந்த செலவில் வழங்குவது, தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் முக்கிய நோக்கமாகும். மாண்புமிகு அம்மா அவர்களின் இடைவிடாத முயற்சிகளின் காரணமாக, மத்திய அரசின் தகவல் மற்றும் ஒளிபரப்பு அமைச்சகம் 17.04.2017 அன்று தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்திற்கு டிஜிட்டல் உரிமம் வழங்கியுள்ளது. இந்தியாவிலேயே மாநில அரசின் நிறுவனத்திற்கு டிஜிட்டல் உரிமம் வழங்கப்பட்டிருப்பது இதுவே முதல் முறையாகும் என்பதை இம்மாமன்றத்திற்கு பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், 2016ஆம் ஆண்டு சட்டமன்ற தேர்தலின்போது வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளபடி, அரசு கேபிள் நிறுவன இணைப்பு பெற்றவர்களுக்கு விலையில்லா செட்டாப் பாக்ஸ் கடந்த செப்டம்பர் மாதத்திலிருந்து வழங்கப்பட்டு வருகிறது. இதுவரையிலும் 13 இலட்சம் குடும்பங்கள் இந்த விலையில்லா செட்டாப் பாக்ஸ்களைப் பெற்று பயன் அடைந்துள்ளனர். 125 ரூபாய் செலவில் 208 சேனல்கள் டிஜிட்டல் தரத்தில் வழங்கப்பட்டு வருகின்றன.

தமிழ்நாட்டிலுள்ள 12 ஆயிரத்து 524 கிராம ஊராட்சிகளை கண்ணாடி ஒளிஇழை (Optical Fibre) மூலம் இணைத்து அனைத்து அரசின் சேவைகளை தங்கள் கிராமங்களிலிருந்து இணையம் மூலம் பெற ஏதுவாக, ஒரு திட்டத்தினை மத்திய அரசின் பங்களிப்புடன் தமிழக அரசே செயல்படுத்தும் என மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்திருந்தார்கள். இதன்படி ஒரு விரிவான திட்டம் தயாரிக்கப்பட்டு, மத்திய அரசின் ஒப்புதலும் பெறப்பட்டு, இதற்கென 1,230 கோடியே 90 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடும் பெறப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தை துரிதமாக செயல்படுத்திட, அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேலும் சமீபத்தில் மின் ஆளுமையின் மூலம் மக்கள் மேலும் பல சேவைகளை பெறுவதற்கு ஏதுவாக, புதிய மின் ஆளுமை கொள்கை ஒன்றினை முதன் முறையாக தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ளது.

மாற்றுத்திறனாளிகள் சுயமரியாதையோடும், தன்னம்பிக்கையோடும் வாழ வழி செய்யும் பொருட்டு, அவர்களுக்கு அரசு பொதுத் துறை நிறுவனங்கள், வாரியங்கள், குழுமங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களில் 3 சதவீதமாக இருந்த இட ஒதுக்கீட்டினை, 4 சதவீதமாக உயர்த்தி அமல்படுத்திட, மாண்புமிகு அம்மாவின் அரசு ஆணையிட்டுள்ளது.

சிறுபான்மையினர் நலனில் மாறாத அக்கறை கொண்ட மாண்புமிகு அம்மாவின் அரசு "முத்தலாக்" முறையில் முஸ்லிம் பெண்களை விவாகரத்து செய்யும் ஆண்களுக்கு சிறை தண்டனை என்ற சட்டப் பிரிவிற்கு எதிர்ப்பு தெரிவித்து, இந்தக் கருத்தை வலியுறுத்தி மத்திய அரசுக்கு அனுப்பியும்; இக்கருத்தையே மக்களவையில் வலியுறுத்தியும் உள்ளது எனத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தற்போது நடைமுறையில் உள்ள நேரடி நியமன முறையில் நிரம்பாத (unfilled) இடங்களை, ஆதிதிராவிடர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் ஆகியோருக்கு உள்ள முன்கொணர் முறையை (carry forward), பிற்படுத்தப்பட்ட முஸ்லீம் வகுப்பினருக்கும் நீட்டித்து வழங்கிட உத்தரவிட்டுள்ளேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரின் மேம்பாட்டில் எப்பொழுதும் ஆர்வம் காட்டிவரும் மாண்புமிகு அம்மாவின் அரசு, பழங்குடியினர்களின் கல்வி மேம்பாட்டிற்கென திருச்சி மாவட்டம் துறையூர் மற்றும் செங்காட்டுப்பட்டி மாணாக்கர்களுக்கு விடுதியும், பச்சமலை மற்றும் தென்புற நாட்டில் இரண்டு சமுதாயக் கூடங்களும், ஜவ்வாது மலையில் இரண்டு உண்டு உறைவிட மாதிரிப் பள்ளிகள்

மற்றும் ஆசிரியர் குடியிருப்புகள் **30.90** கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும் என்று மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ் அறிஞர்கள் மற்றும் தாய்மொழியாம் தமிழ் மொழிக்கு சிறப்பு செய்தவர்களை மாண்புமிகு அம்மாவின் அரசு பெருமைப்படுத்தி வருகிறது. அதன்படி, அறிவியல் தமிழறிஞர் சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் அவர்களின் பெயரில் புதியதாக ஒரு விருது தோற்றுவிக்கப்பட்டதுடன், திண்டுக்கல் மாவட்டத்தில் ஹைதர் அலி மற்றும் திப்பு சுல்தான் ஆகியோருக்கு **1.30** கோடி ரூபாய் மதிப்பீட்டில் மணி மண்டபங்கள் அமைக்கப்பட்டு **31.12.2017** அன்று என்னால் துவக்கிவைக்கப்பட்டது. மேலும், திருச்செந்தூரில் டாக்டர் பா.சிவந்தி ஆதித்தனாருக்கு ஒரு மணி மண்டபம் கட்டப்படும் என தூத்துக்குடி மாவட்டத்தில் **22.11.2017** அன்று புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழாவின்போது நான் அறிவித்திருந்தேன். இது தவிர, நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களுக்கு **2.80** கோடி ரூபாய் மதிப்பில், ஒரு நினைவு மண்டபம் அமைத்து **01.10.2017** அன்று திறந்து வைக்கப்பட்டது. சென்னை, ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் புதிய கலைவாணர் அரங்கம் **62.73** கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ளது.

இவ்வாறு தமிழுக்கும் தமிழ் நாட்டிற்கும் பெருமை சேர்த்த பலருக்கு பல்வேறு விருதுகளை வழங்கியும், மணி மண்டபம் மற்றும் நினைவு மண்டபங்களை கட்டி பெருமை சேர்த்த மாண்புமிகு அம்மா அவர்களின் நினைவைப் போற்றும் வகையில், மாண்புமிகு அம்மா அவர்கள் நல்லடக்கம் செய்யப்பட்ட இடத்தில் ஒரு நினைவு மண்டபம் அமைக்க மாண்புமிகு அம்மாவின் அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் குடியிருந்த 'வேதா நிலையத்தை' அரசுடைமை ஆக்கி, அவர்தம் நினைவும், புகழும், மேன்மையும், சிறப்பும், அடுத்து வரும் தலைமுறையினர்

தெரிந்து கொள்வதற்காக ஒரு நினைவுச் சின்னமாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மறைந்த முதலமைச்சர் பொன்மனச் செம்மல் புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டை ஒட்டி சென்னை, காமராஜர் சாலையில் ஒரு மாபெரும் நினைவு வளைவு அமைக்கப்படவுள்ளது என்பதை இம்மாமன்றத்திற்கு மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

சுற்றுலாவுக்கு உகந்த இடமாக தமிழ்நாடு உள்ளது என்பதற்குச் சான்றாக கடந்த மூன்று ஆண்டுகளாக, உள்நாடு மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் வருகையில் தமிழ்நாடு தொடர்ந்து முதலிடம் பெற்று வருகிறது.

பக்தர்களின் நலனில் மிகுந்த அக்கறை கொண்ட மாண்புமிகு அம்மாவின் அரசு,

- கடந்த ஆண்டில் 30 திருக்கோயில்களில் அன்னதானத் திட்டத்தை விரிவுபடுத்தி உள்ளது.
- 655 திருக்கோயில்களுக்கு திருப்பணி செய்து குடமுழுக்கு செய்யப்பட்டுள்ளது.
- ஸ்ரீரங்கம் அருள்மிகு அரங்கநாத சுவாமி திருக்கோயிலுக்கு 01.11.2017 அன்று பழமை மாறாமல் திருப்பணி மேற்கொண்டதற்கு “யுனெஸ்கோ” நிறுவனம் விருது வழங்கியுள்ளது.
- மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலுக்கு 02.10.2017 அன்று தூய்மை இந்தியா விருது மத்திய அரசால் வழங்கப்பட்டுள்ளது.
- சிவகங்கை மாவட்டம் கீழடியில் தமிழ்நாடு அரசின் தொல்லியல் துறையின் மூலம் 55 இலட்சம் ரூபாய் செலவில்

விரிவான அகழாய்வு மேற்கொள்ள மத்திய அரசின் அனுமதி பெறப்பட்டு பணிகள் விரைவில் துவக்கப்பட உள்ளன.

தமிழ்நாட்டின் முன்னாள் முதலமைச்சர் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழா ஒரு ஆண்டு கொண்டாடப்பட வேண்டும் என்ற மாண்புமிகு அம்மா அவர்களின் எண்ணப்படியும், 02.05.2017 அன்று அமைச்சரவையில் எடுக்கப்பட்ட முடிவின்படியும், 2017ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் வரை 30 மாவட்டங்களில் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழா சிறப்பாக நடைபெற்று முடிந்துள்ளது. அந்தந்த மாவட்டங்களில் மக்கள் பயன்பெறும் வகையில், 521 புதிய திட்டங்கள் அறிவித்தும், 3,200 புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டியும், 2,329 முடிவுற்ற திட்டங்களை திறந்து வைத்தும், பல்லாயிரக்கணக்கான பயனாளிகளுக்கு அரசின் நலத்திட்ட உதவிகளை வழங்கியும் சிறப்பாக நடந்து முடிந்துள்ளன.

இவ்வாறு பல்வேறு துறைகளின் சார்பில் பல்வேறு நலத் திட்டப் பணிகளை இந்த அரசு மேற்கொண்டு வருவதுடன், சட்டப் பேரவை விதி 110இன் கீழும் அறிவிப்புகள் வெளியிடப்பட்டு அதன் மீதான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அந்த வகையில், நடப்பு 2017–2018ஆம் நிதி ஆண்டில் சட்டமன்றத்தில் சட்டமன்ற விதி 110இன் கீழ், நான் 102 அறிவிப்புகளை வெளியிட்டு இருக்கிறேன். அவற்றில் 76 அறிவிப்புகளுக்கான அரசாணைகள் வெளியிடப்பட்டு, 8 அறிவிப்புகளுக்கான பணிகள் முழுமையாக நிறைவேற்றப்பட்டும், 68 பணிகள் நடைபெற்றும் வருகின்றன. 23 அறிவிப்புகளுக்கான திட்டப் பணிகள் தொடங்குவதற்கான ஆயத்தப் பணிகள் நடைபெற்று வருகின்றன. மீதமுள்ள 3 அறிவிப்புகளுக்கான திட்டங்கள் மத்திய அரசின் பரிசீலனையில் உள்ளன என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களில் பணியாற்றி ஓய்வு பெற்ற மற்றும் பணியில் இருக்கும் தொழிலாளர்களின் நலனை கருத்தில் கொண்டு, அவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய பல்வேறு நிலுவைத் தொகையாக மொத்தம் 2 ஆயிரத்து 174.61 கோடி ரூபாயினை மாண்புமிகு அம்மாவின் அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு வழங்கியுள்ளது. இது தவிர, நான் இப்பேரவையில் 10.01.2018 அன்று சட்டமன்றப் பேரவை விதி எண்.110இன் கீழ் அறிவித்த 750 கோடி ரூபாயும் வரும் பொங்கல் பண்டிகைக்கு முன்னரே வழங்க ஆணையிட்டுள்ளேன்.

மேலும், போக்குவரத்துக் கழகங்களின் செயல் திறனை மேம்படுத்தும் வகையில், 416 புதிய பேருந்துகள் இயக்கப்பட்டும், கண்ணகி நகர், பெரும்பாக்கம், செங்கம், சாத்தான்குளம், பவானி மற்றும் ஆத்தூர் ஆகிய 6 இடங்களில் புதியதாக பணிமனைகள் துவக்கப்பட்டும் உள்ளன.

காவல் துறையினர், மாநிலத்தில் சட்டம் ஒழுங்கைச் சீரிய முறையில் தொடர்ந்து பராமரித்து வருவதுடன், குற்றங்களில் ஈடுபடுவோர் மற்றும் குண்டர்கள் மீது கடுமையான நடவடிக்கைகளைத் தொடர்ந்து எடுத்து, மாநிலத்தில் குற்றங்கள் நடப்பதை பெருமளவில் குறைத்துள்ளனர்.

மேலும், மாநிலத்தில் சாதி, சமய வெறியர்கள் மற்றும் சமூக விரோதிகள் மீது அரசு மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் காரணமாக, சாதி, சமய பூசல்கள் ஏதுமின்றி, மாநிலம் ஒரு அமைதிப் பூங்காவாக தொடர்ந்து பராமரிக்கப்பட்டு வருகிறது.

கடந்த 2017ஆம் ஆண்டு –

- இம்மானுவேல் சேகரன் நினைவு தினம்
- முத்துராமலிங்க தேவர் குருபூஜை

- விநாயகர் சதுர்த்தி ஊர்வலங்கள்
- இமாம் அலி நினைவு நாள் மற்றும் பாபர் மசூதி இடிப்பு தினம்

உட்பட பல்வேறு தலைவர்களின் பிறந்த நாள் மற்றும் நினைவு தினங்களின் போது, இவ்வரசு மேற்கொண்ட திட்டமிட்ட சிறப்பான பாதுகாப்பு நடவடிக்கைகளின் காரணமாக, அந்நிகழ்ச்சிகள் எந்தவொரு சிறு சம்பவமும் இன்றி அமைதியாக நடந்து முடிந்துள்ளன.

பெண்கள் எங்கே சுதந்திரமாக இருக்கின்றனரோ அங்கே தான் உண்மையான சுதந்திரம் உள்ளது. தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு மிகச் சிறப்பாக பராமரிக்கப்பட்டு வருவதன் காரணமாகத்தான் தேசிய குற்ற ஆவணக் காப்பகத்தின் அறிக்கையின்படி,

- அகில இந்திய அளவில் உள்ள பெரிய மாநிலங்களில் பெண்கள் பாதுகாப்பாக வாழ உகந்த முதல் மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது.
- இந்தியாவிலேயே பெண்களுக்கு மிகவும் பாதுகாப்பான பெரு நகரங்களில் கோயம்புத்தூர் முதலாவதாகவும், மெட்ரோ நகரங்களில் சென்னை மாநகரம் முதலாவதாகவும் உள்ளதாக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.
- கடந்த 2016ஆம் ஆண்டு பெண்களுக்கெதிரான மொத்த குற்றங்களின் தமிழ்நாட்டின் குற்ற விகிதம் 10.7 ஆகும். இதனை தேசிய சராசரி ஆன 51.4 சதவிகிதத்துடன் ஒப்பிடும் போது 40.7 புள்ளிகள் குறைவாக உள்ளன.

அதேபோல், இந்திய தர நிர்ணய குழு, ஒன்றல்ல, இரண்டல்ல, 80 பல்வேறு விதமான காரணிகளின் அடிப்படையில் மதிப்பெண்கள் அளித்து, இந்தியாவிலுள்ள 15,000க்கும் மேற்பட்ட காவல் நிலையங்களில், மிகச்சிறந்த 10 காவல் நிலையங்களை தேர்ந்தெடுத்தது. அதில் இந்தியாவிலேயே கோவை மாநகரிலுள்ள

RSபுரம் காவல் நிலையம் முதல் காவல் நிலையமாகவும், சென்னை மாநகரிலுள்ள அண்ணா நகர் காவல் நிலையம் 5ஆவது காவல் நிலையமாகவும் தேர்வு செய்யப்பட்டு, விருதுகள் பெற்றுள்ளன.

- தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியத்தின் மூலம், கடந்த ஓராண்டில் மட்டும் 12 ஆயிரத்து 535 இரண்டாம் நிலைக் காவலர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, பணி நியமன ஆணை வழங்கப்பட்டுள்ளது.

- கடந்த வருடம், மொத்தம் 21 ஆயிரத்து 919 பணியிடங்களை நிரப்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

- இந்தியாவிலேயே முதன் முதலாக, தமிழ்நாடு காவல் துறையில் தான் திருநங்கைகள் பணியமர்த்தப்பட்டு உள்ளனர்.

- 33 துணை காவல் கண்காணிப்பாளர்கள் பணி நியமனம் செய்யப்பட்டு பயிற்சி பெற்று வருகின்றனர்.

- காவல் துறையில், முதல்நிலைக் காவலர் முதல் காவல் துறை இயக்குநர் வரையிலான பல்வேறு பதவிகளில் மொத்தம் 5,235 பணியிடங்கள் பதவி உயர்வுகள் மூலம் நிரப்பபட்டுள்ளன.

கடந்த ஆண்டு 244.32 கோடி ரூபாய் செலவில், 2,047 காவலர் குடியிருப்புகளும், 51.53 கோடி ரூபாய் செலவில், 85 காவல் நிலையங்களும், 83.85 கோடி ரூபாய் செலவில், 56 இதர காவல் துறை கட்டடங்களும் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

மக்கள் தொகை அதிகரிப்பு, வளர்ந்து வரும் பொருளாதாரம், சமூக சூழ்நிலை மற்றும் நகரமயமாதல் ஆகியவற்றால் குற்ற நிகழ்வுகள் ஒவ்வொரு ஆண்டும் அதிகரிக்கும் என்பதுதான் உலகெங்கும் பொதுவான நடைமுறை என்றாலும், மாண்புமிகு

புரட்சித்தலைவி அம்மாவின் வழியிலே காவல் துறையினருக்கு முழு சுதந்திரம் அளிக்கப்பட்டுள்ள காரணத்தால், தமிழ்நாட்டில் பொது அமைதி பாதுகாக்கப்பட்டு, தமிழ்நாடு அமைதி பூங்காவாக திகழ்கிறது.

தமிழ்நாட்டில் செயல்பட்டு வரும் மத்திய அரசின் நிறுவனங்களான மத்திய கரும்பு ஆராய்ச்சி நிலையம், வாழை ஆராய்ச்சி நிலையம், மத்திய உவர் நீர் மீன் ஆராய்ச்சி நிலையம் மற்றும் கோயம்புத்தூரிலுள்ள மத்திய அச்சகம் ஆகியவற்றை நிருவாக ரீதியாக மூடுவதற்கும், பிற மாநில கிளைகளுடன் இணைப்பதற்கும் மத்திய அரசு முயற்சிகள் மேற்கொண்டு வருவதாக அறிந்து, தமிழ்நாடு மக்களின் நலன் கருதி, அவற்றை மறு பரிசீலனை செய்ய மத்திய அரசுக்கு மாண்புமிகு அம்மாவின் அரசு தொடர்ந்து வலியுறுத்தும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாடு அரசு மத்திய அரசுக்கு அடிபணிந்து செயல்பட்டு, தமிழ்நாட்டின் நலன்களை விட்டுக் கொடுக்கிறது என்பது போன்ற ஒரு தவறான பிம்பத்தை சில கட்சிகள் உருவாக்க நினைப்பதை மக்கள் ஒரு காலத்திலும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் என்பது உறுதி.

இந்திய மருத்துவக் கழகத்தின் புதிய சீரமைப்புகளுக்கு எதிர்ப்பு தெரிவித்தும், தமிழ்நாட்டில் உள்ள மத்திய அரசின் நிறுவனங்களை இங்கிருந்து மாற்றுவதற்கு எதிர்ப்பு தெரிவித்தும், நெடுவாசல், கதிராமங்கலம் மற்றும் கச்சத்தீவு போன்ற தமிழ்நாட்டின் நலன்களை பாதிக்கக்கூடிய பிரச்சினைகளில் மாண்புமிகு அம்மாவின் அரசு தொடர்ந்து மத்திய அரசுக்கு தனது எதிர்ப்பை தெரிவித்தும் வருகிறது.

மாண்புமிகு அம்மா அவர்கள் கோரிய திருத்தங்களை மத்திய அரசு ஏற்றுக்கொண்டதால் தான், ஜி.எஸ்.டி., உணவு பாதுகாப்பு சட்டம்

மற்றும் உதய் திட்டம் போன்றவற்றை மாண்புமிகு அம்மாவின் அரசு ஒப்புக் கொண்டது. மேலும், தமிழ்நாட்டின் திட்டங்களுக்காகவும், வளர்ச்சிக்காகவும் போதிய நிதிகளைப் பெறும் பொருட்டுதான், மத்திய அரசுடன் தமிழ்நாடு இணக்கமாக செயல்பட்டு வருகிறது. தமிழ்நாட்டின் உரிமைகளை எந்த விதத்திலும் இம்மியளவு கூட, மாண்புமிகு அம்மாவின் அரசு விட்டுக் கொடுக்கவில்லை என்பதை இந்த மாமன்றத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு அம்மாவின் அரசு பல்வேறு இயற்கை இடர்பாடுகளுக்கும், வளர்ச்சித் திட்டங்களுக்கும் மத்திய அரசிடம் நிதி கோரி வருகிறது. மாநில அரசு கோரிய நிதியை முழுமையாக அளிக்காவிட்டாலும், அவர்கள் அளித்த நிதிக்கு நன்றி சொல்வது என்பது தமிழ்ப் பண்பாடாகும், ஜனநாயக மரபாகும். இவ்வாறு நன்றி சொல்வதைக்கூட, கொச்சைப்படுத்துவது என்பது நாகரிகமான ஜனநாயகம் அல்ல என்பதை, இப்பேரவையில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியால், நாங்கள் ஆட்சிப் பொறுப்பேற்று ஒரு வருடத்திற்குள்ளேயே, பல வருடங்களுக்கான திட்டங்களைத் தீட்டி, பல சாதனைகளை நூறாண்டு பேசும்படி செய்திருக்கிறோம். மாண்புமிகு அம்மா அவர்களின் திட்டங்களைச் செம்மையாகத் தொடர்வதிலும், புதிய திட்டங்களை விரைவாகத் தொடங்குவதிலும், இந்த அரசு எந்தவித விளம்பரமோ, ஆர்ப்பாட்டமோ இல்லாமல், முனைப்பாக செயல்பட்டு வருகிறது. தமிழ்நாட்டின் கடைக்கோடி மக்களுக்கும் சிந்தாமல் சிதறாமல் எங்கள் திட்டங்கள் முழுமையாகச் சேர வேண்டும் என்பதில், நாங்கள் விழிப்பாக இருக்கின்றோம். பயனாளிகளின் மன நிறைவும், நிம்மதியும் தான் எங்கள் ஆட்சிக்கு கிடைக்கும் வெற்றியாக நாங்கள் கருதுகிறோம்.

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் நேற்று இங்கு பேசும் போது, அவர்களது ஆட்சி காலத்தில் மத்திய அரசுடன் கூட்டணியில் இருந்த போது தமிழ்நாட்டிற்காக செயல்படுத்திய திட்டங்களை பட்டியலிட்டு இங்கே கூறினார்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மாவும், அவர்கள் வழியில் செயல்படும் அம்மாவின் அரசும், மத்திய அரசில் அங்கம் வகிக்காவிட்டாலும், மத்திய அரசிடம் புதிய திட்டங்களுக்காக அதிக நிதியை பெற்றும், மத்திய அரசு பங்களிப்புத் திட்டங்களை சிறப்பாகச் செயல்படுத்துவதினால், கூடுதல் நிதியை பெற்றும், தமிழ்நாட்டு மக்களுக்காக இத்திட்டங்களை சிறப்பாகச் செயல்படுத்தி வருகின்றது. அவற்றில் ஒரு சில திட்டங்களை இந்த மாமன்றத்தில் தெரிவிக்க விரும்புகிறேன்.

கடந்த **23.11.2017** அன்று சென்னையில் மாண்புமிகு மத்திய சாலை போக்குவரத்து, நெடுஞ்சாலை, கப்பல் போக்குவரத்து, நீர் ஆதாரம், நதிகள் மேம்பாடு மற்றும் கங்கை நதி புனரமைத்தல் துறை அமைச்சர் திரு.நிதின் கட்காரி அவர்களுடன் நடைபெற்ற கூட்டத்தின் போது, தமிழ்நாட்டின் நலனுக்காக பல்வேறு சாலை மற்றும் துறைமுக மேம்பாட்டுத் திட்டங்களுக்காக மத்திய அமைச்சர் ஒரு இலட்சம் கோடி ரூபாய் நிதிக்கு ஒப்புதல் அளித்தார்கள். அவற்றில் குறிப்பிடத் தக்கவை:–

- **40,000** கோடி ரூபாய் செலவில், சாலை மேம்பாட்டுத் திட்டங்கள்.
- சென்னையில் போக்குவரத்து நெரிசலை குறைக்க, **2,250** கோடி ரூபாயில் தாம்பரம்–செங்கல்பட்டு உயர்மட்ட சாலை, மேலும், **1,500** கோடி ரூபாயில் பூந்தமல்லி–மதுரவாயல் உயர்மட்ட சாலை மற்றும் **1,000** கோடி ரூபாயில் திருவள்ளூர் உயர்மட்ட சாலை.

- **20,000** கோடி ரூபாய் மதிப்பீட்டில், சென்னை – பெங்களூர் விரைவுச் சாலை.

- **1,500** கோடி ரூபாய் மதிப்பீட்டில், கோயம்பேடு–பூந்தமல்லி–வாலாஜாபேட்டை சாலை விரிவாக்கம்.

- **4,000** கோடி ரூபாய் மதிப்பீட்டில், திருச்சி–சிதம்பரம் சாலை மேம்பாடு.

- **6,000** கோடி ரூபாய் மதிப்பீட்டில், விழுப்புரம் – நாகப்பட்டினம் சாலை மேம்பாடு.

- **2,300** கோடி ரூபாய் மதிப்பீட்டில், தேசிய நெடுஞ்சாலையில் சாலை பாதுகாப்பு பணிகள்.

- **3,000** கோடி ரூபாய் மதிப்பீட்டில், தூத்துக்குடி துறைமுக மேம்பாட்டுப் பணிகள்.

**மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை**

- **1,244** கோடி ரூபாய் மதிப்பீட்டில், தமிழ்நாடு சுகாதார திட்டம் – **1** செயல்படுத்துதல்.

- **2,686** கோடி ரூபாய் மதிப்பீட்டில், மருத்துவ உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்துதல்.

- பிரதம மந்திரி ஸ்வஸ்திய சுரக்ஷா யோஜனா திட்டத்தின் கீழ், தலா **150** கோடி ரூபாய் என **450** கோடி ரூபாய் மதிப்பீட்டில், மதுரை, தஞ்சாவூர், திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் உயர் சிறப்பு மருத்துவமனை அமைத்தல்.

போன்ற பல திட்டங்களுக்கு, மொத்தம் **6** ஆயிரத்து **343** கோடி ரூபாய் இது வரை மத்திய அரசிடமிருந்து பெறப்பட்டுள்ளது.

மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்கள் கடந்த ஜூலை மாதம் 27–ந்தேதி இராமேஸ்வரத்தில் முன்னாள் குடியரசுத் தலைவர் திரு.அப்துல் கலாம் அவர்களின் நினைவகத்தை திறந்து வைத்து பேசும் போது, பிரதம மந்திரி வீட்டு வசதித் திட்டத்தின் கீழ், ஏழைகளுக்கு வீட்டு வசதி அளிக்க, தமிழ்நாடு அரசு எவ்வளவு வீடுகள் கோரினாலும், அனைத்துக்கும் ஒப்புதல் வழங்கி, நிதி ஒதுக்கீடு செய்ய தயாராக இருப்பதாக அந்த நிகழ்ச்சியில் தெரிவித்தார்கள்.

**காவல் துறை**

- காவல் துறையை நவீனப்படுத்தும் திட்டத்தில் குற்றம் மற்றும் குற்றவாளிகளை கண்காணிக்கும் வலைப் பின்னல் திட்டத்தின் (CCTNS) கீழ், **105.48** கோடி ரூபாய்.
- நவீன தொலைதொடர்பு சாதனங்கள், தளவாடங்கள், வாகனங்கள் போன்ற வசதிகளுக்காக **367.87** கோடி ரூபாய்.

**நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை**

- **11,498.46** கோடி ரூபாய் மதிப்பீட்டில், ‘அட்டல் புத்துணர்வு மற்றும் நகர்ப்புர மாற்றங்களுக்கான திட்டப் பணிகள்’.
- **8,891.47** கோடி ரூபாய் மதிப்பீட்டில், சீர்மிகு நகரங்கள் திட்டத்திற்கான பணிகள்.
- **4,790** கோடி ரூபாய் மதிப்பீட்டில், ஆசிய வளர்ச்சி வங்கி நிதி உதவியுடன் குடிநீர் மற்றும் கழிவு நீரகற்றுப் பணிகள்.

- 3,831 கோடி ரூபாய் மதிப்பீட்டில், தமிழ்நாடு நீடித்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டப் பணிகள்.

- 1,439.26 கோடி ரூபாய் மதிப்பீட்டில், ஜெர்மன் நாட்டு வளர்ச்சி வங்கி நிதி உதவியுடன் நகர்ப்புர உட்கட்டமைப்புப் பணிகள்.

- 226.59 கோடி ரூபாய் மதிப்பீட்டில், இரண்டாம் கட்ட அணை புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டப் பணிகள்.

- 1,560 கோடி ரூபாய் மதிப்பீட்டில், காவேரி கழிமுகப் பகுதியில் பருவ நிலை மாறுதல்களை தழுவல் திட்டப் பணிகள்.

- பாக். ஜலசந்தி பகுதியில் உள்ள மீனவர்கள் பயன் பெறும் வகையில், 200 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 500 இழுவை வலைப் படகுகள் ஆழ்கடல் மீன்பிடி படகுகளாக மாற்றும் பணிகள் நடைபெற்று கொண்டு வருகின்றன.

- 194.62 கோடி ரூபாய் மதிப்பீட்டில் குளச்சல் மற்றும் சின்னமுட்டம் ஆகிய இடங்களில் மீன்பிடி துறைமுகங்கள் கட்டி முடிக்கப்பட்டு கடந்த 2016ஆம் ஆண்டில் செயல்பாட்டுக்கு வந்துள்ளது.

- 359.90 கோடி ரூபாய் மதிப்பீட்டில், தேங்காய்பட்டினம், பூம்புகார், மூக்கையூர் ஆகிய மூன்று இடங்களில் புதிய மீன்பிடி துறைமுகங்கள் அமைக்கும் பணிகள் முடிக்கப்பட்டு மீனவர்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

- 147.22 கோடி ரூபாய் மதிப்பீட்டில், நாகப்பட்டினம் மற்றும் சென்னை ஆகிய இடங்களில் மீன்பிடி துறைமுகங்கள் புனரமைக்கப்பட்டு செயல்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.
- 250 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 50 மீன் இறங்கு தளங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இது போன்ற எண்ணற்றத் திட்டங்களை, மாண்புமிகு அம்மாவின் அரசு தமிழ்நாட்டு மக்களின் நலன்களுக்காக செயல்படுத்தி வருவதை பட்டியலிட முடியும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு ஆளுநர் அவர்களின் உரை மகிழ்ச்சியின் முதிர்ச்சியான ஆனந்தக் கண்ணீரைப் போன்றது. ஆனந்தக் கண்ணீருக்கும், அழுத கண்ணீருக்கும் வித்தியாசம் தெரியாமல், ஊசி முனையிலே மூன்று குளம் வெட்டியதாக ஒரு பாடலை நேற்று மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சபையிலே கூறினார்.

மாண்புமிகு ஆளுநர் உரை மகிழ்ச்சியும் மனநிறைவும் தருகிறது என்பதை மாண்புமிகு எதிர்க்கட்சி தலைவரின் பாணியிலேயே நான் நாட்டுப்புற பாடல் வாயிலாக நானும் பதிலளிக்க விரும்புகிறேன்.

“ஆனந்த கண்ணீரு,
ஆறாகப்பெருகி,
ஆனை குளித்தேறி,
குளமாகத் தேங்கி,
குதிரை குளித்தேறி,
வாய்க்காலாய் ஓடி,
இஞ்சிக்குப் பாய்ந்து,
எலுமிச்சை வேரோடி,
மஞ்சளுக்குப் பாய்ந்து,

மருதோன்றி வேரோடி,
தாழைக்கும் பாய்ந்து,
தளும்பியதாம் ஆனந்த கண்ணீர்.

இந்த ஆட்சியின் மீது சுமத்தப்படும் குற்றங்களையும், குறைகளையும், வெற்றிக்கான படிக்கட்டுகளாகப் பயன்படுத்தி, மென்மேலும் முன்னேறுவோம்.

மாண்புமிகு அம்மா அவர்களின் விசுவாசிகளான மாண்புமிகு துணை முதலமைச்சர், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் ஆகியோர் என்னுடன் துணை நின்று, அல்லும் பகலும் அயராது உழைத்து, மக்கள் பணியாற்றுவதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு அம்மா அவர்களின் மீது பாசமும் பற்றும் கொண்ட தமிழ் மக்கள், இந்த ஆட்சிக்கு எப்போதும் ஆதரவாகவும் உறுதுணையாகவும் இருப்பார்கள் என நம்புகிறோம்.

என்னுடைய இந்த பதிலுரை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு திருப்தி அளித்திருக்கும் என நான் நம்புகிறேன். எனவே, இந்த பதிலுரையை ஏற்றுக் கொண்டு, மாண்புமிகு ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது கொடுத்த திருத்தங்களை உறுப்பினர்கள் திரும்பப்பெற வேண்டும் என்று கேட்டுக் கொள்வதோடு, தீர்மானத்தை ஒருமனதாக நிறைவேற்றித் தருமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக இந்த மாமன்ற உறுப்பினர்கள் அனைவரையும் கேட்டுக் கொண்டு அமைகிறேன்.

நன்றி, வணக்கம்.

✵ ✵ ✵

**மக்களின் எண்ணங்களை அறிந்து கேட்காமலேயே செய்கின்ற அரசு, அம்மா அரசு. சொன்ன திட்டங்களை மட்டுமல்ல, சொல்லாத திட்டங்களையும் நிறைவேற்றும் அம்மா அரசு.**

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **எடப்பாடி K.பழனிசாமி** அவர்கள்